

# தொடுவான மனிதர்கள்

## இந்துமதி

1

சடாரென்று யாரோ உலுக்கி எழுப்பின மாதிரி விழிப்பு வந்தது, ராதிகாவிற்கு. எழுந்து, பாயில் உட்கார்ந்தபோதே சமையற்கட்டில் இருந்து தீனமான அழுகைக்குரல் கேட்டது. அன்று

அதிகாலையிலேயே அம்மா தன் புலம்பலை ஆரம்பித்துவிட்டது புரிந்தது. சட்டென்று இவளுக்குள் ஒரு கோபம் படர்ந்தது. 'இன்னும் எத்தனை வருஷத்திற்கு அம்மா இப்படி அழுதுகொண்டிருக்கப் போகிறாள்?' என்று தோன்றியது. அப்பா போய்க் கிட்டத்தட்ட மூணு வருஷங்களாகப் போகின்றன. போய் என்றால் செத்துப் போய் இல்லை. அப்படியிருந்தால் கூடப் பரவாயில்லை என்று இவள் நிறைய தரம் நினைத்திருக்கிறாள். அதுகூட இந்த மாதிரி ஒரு சோகமாக இருந்திருக்காது. ஒன்றுமே இல்லாமல் குடும்பத்தை இப்படி அடித்துப் போட்டிருக்காது. இவ்வாறு அழ வைத்திருக்காது. வயிற்றெரிச்சல் தாங்காமல் புலம்ப வைத்திருக்காது. கைவிரல்களைச் சொடுக்கிச் சாபமிட வைத்திருக்காது. 'ஹிஸ்டீரியா' நோயாளியைப் போல் கத்த வைத்திருக்காது.

அம்மா தலையில் அடித்துக்கொண்டு கத்த ஆரம்பித்தால், தம்பிகள் இரண்டு பேரும் பயந்து போகிறார்கள். 'இன்னிக்கும் ஆரம்பிச்சுட்டாக்கா...' என்று ஓடி அவளருகில் பாதுகாப்பைத் தேடுகிறார்கள். மடேர்மடேரென்று அம்மா தலையில் அடித்துக்கொண்டு அழுவதைக் காணச் சகிக்காதவர்களாக மூலையில் முடங்கிக்கொள்கிறார்கள். 'பயமா இருக்குக்கா... நீ இன்னிக்கு வேலைக்குப் போகாதக்கா... நீ போயிட்டியானா அம்மாகிட்ட போய்ச் சாதம் போடுன்னு கேட்கக்கூட முடியாதக்கா. கேட்டால், 'நீங்க கெட்ட கேட்டுக்குச் சாதம்தான் பாக்கி'ன்னு முதுகில் விழும் அக்கா...'

– பத்து வயதும், பதின்மூன்று வயதுமான அவர்கள் தன்னிடம் அவ்வாறு ஒடுங்குவதைப் பார்க்கிறபோது இவளுக்குப் பரிதாபமாக இருக்கும். அந்த வயதில் தானும் அதே மாதிரி அப்பா, அம்மா போடும் சண்டைக்குப் பயந்து சுவரோடு சுவராக ஒட்டிக்கொண்டது நினைவிற்கு வரும். பசி, தாகம் மறந்து தப்பிக்கக் கிடைத்த ஒரே இடமான பள்ளிக்கூடத்தை நோக்கி ஓடினது, ஞாபகத்தில் பளிச்சிடும். இப்போது இவர்களுக்குத் தான் இதமாக இருக்கிற் மாதிரி அப்போது அவளுக்கு யாரும் இருக்கவில்லை. அக்கா, அண்ணா என்று ஒருவருமில்லை. மூத்த பெண் என்ற காரணத்தினால் அத்தனை அடி, உதைகளையும் அவளே தாங்கிக்கொள்ள நேர்ந்தது. அந்த வயதில் பட்ட அனுபவங்களின் வடுக்கள்...

வயதில் மட்டும்தானா...? இப்போது இல்லையா...? அவள் முகத்தின் சிரிப்பை நிரந்தரமாகப் பறித்துக்கொண்டு போய்விட்டிருந்தது அந்தச் சுமை. அதற்குப் பதிலாக ஒரு சோகத்தையும், பாதுகாப்பு



உணர்ச்சியையும், வீட்டிலிருக்கிற அத்தனை பேருக்கும் (அம்மா, தம்பிகள் இரண்டு பேர், அப்பா போன பின் பெரிய மனுஷத்துணை என்று கூடவே வந்து சேர்ந்துவிட்ட பாட்டி, இவள்) சாப்பாடு போடுகிற அளவிற்காவது கட்டாயம் சம்பாதித்தாக வேண்டிய பொறுப்புணர்ச்சியையும் முகத்திலும், கண்களிலும் தேங்க வைத்திருந்தது. அந்தப் பத்தொன்பது வயதிற்கு மீறின அலுப்பை வெளிப்படுத்திக்கொண்டிருந்தது முகம்.

அழகாய் வெள்ளை வெளேறென்று குழந்தைத்தனம் மாறாததாய் தெருவில் போகிற யாரையும் இரு முறை திரும்பிப் பார்க்க வைப்பதாய் இருந்தாலும்கூட, அசோகவனத்து சீதை மாதிரி கூடவே ஒரு சோகமும் வந்து கப்பிக்கொண்டிருந்தது. அந்த வயதுக்குரிய துள்ளலோ, துடிப்போ இன்றி கலகலப்பான பேச்சுக்கூடத் தனக்கு இயல்பானதில்லை என்கிறாற் போன்று சலிப்பும், விரக்தியும் சூழ்ந்து கொண்டிருந்தது.

'என்ன ராதி நீ... எதுக்குமேவா சிரிக்கமாட்டே...?' என்று அவள் வேலை செய்த இடங்களில் அலுத்துக்கொள்கிற அளவிற்குச் சிரிப்பு மறந்து போயிருந்தது.

அதையெல்லாம் நினைத்துத் தன்னைப் போலவே இவர்களும், தம்பிகளும் மாறிப் போய்விடப் போகிறார்களே என்ற பயத்தில் அம்மாவைவிட அவர்களின் மீது ஏற்பட்ட அனுதாபம் அதிகமாக, எத்தனையோ தரம் அம்மாவிடம் சண்டை போட்டிருக்கிறாள். கதவோரம் உட்கார்ந்து கண்ணீர் வடிக்கிறவளின் எதிரில் போய் நின்று கடுமையான குரலில் கேட்டிருக்கிறாள்.

"ஏம்மா... நீ செய்யறது உனக்கே நல்லா இருக்கா...? அப்பா என்ன செத்தா போயிட்டார், நீ இப்படி எப்பப் பார்த்தாலும் ஒப்பாரி வைக்க...?"

– கடுமையான வார்த்தைகள்; வேறு வழியில்லாமல்தான் சொல்வாள். அவளாலேயே தாங்க முடியாமல்தான் பொருமுவாள்.

அது போதுமானதாக இருக்கும், அம்மாவுக்கு. சுரீரென்று நெருப்பு பட்ட மாதிரி நிமிர்வாள். முகமும், கண்களும் தகதகக்கும். வார்த்தைகள் அழுகையினூடே சீறிக்கொண்டு வரும்.

"அந்தப் பாவி... அப்படிப் போயிருந்தாக்கூட நான் அழமாட்டேண்டி... எங்கம்மா மாதிரி நார் முடி கட்டிட்டு ஒங்களுக்காக வளைய வந்திருப்பேன். ஒரேயடியா முழுக்குப் போட்டிருப்பேன். ஆனா.... ஆனா... இப்போ..."

"இப்போ மட்டும் என்ன...? அப்பா இல்லை, போயிட்டார்னு நினைச்சுக்கோயேன்...?"

"அது எப்படி முடியும்...? என் கண் எதிர்ல இன்னொருத்திகூட ஓடினவனை எப்படி செத்துப் போயிட்டான்னு நினைச்சுக்க முடியும்...? நீயே சொல்லு, எனக்கென்ன குறைச்சல்னு இன்னொருத்தி தேவைப்பட்டது? நான் அழகா இல்லையா, வரிசையா மூணு குழந்தைங்க பெத்துக்கலையா? பதினைஞ்சு, பதினாறு வருஷம் கூடக் குடும்பம் நடத்தலையா...? எது இல்லேன்னு இன்னொருத்தியைத் தேடி நாயா அலையச் சொல்லிச்சு...?"

அம்மா கேட்பதெல்லாம் வாஸ்தவமான கேள்விகள் இல்லை என்று யாராலும் மறுக்க முடியாதவை. இன்றுகூட திகுதிகுவென்று தென்னம்பூ மாதிரி ஒரு நிறம் அவளுக்கு. பிடித்து இழுத்து உட்கார்த்தி வைத்துப் பார்த்துப் பார்த்துச் செதுக்கின மாதிரி கண்களும், நாசியும், உதடுகளும் கொண்ட முகம். வெறுமனே அள்ளி முடிந்திருக்கிற கூந்தல் பின் கழுத்தில் மட்டை உரிக்காத தேங்காய் அளவு கோடாரி முடிச்சாய் நிற்கும்.

எது இருந்தென்ன...?

என்ன காரணத்தினாலோ ஆரம்பத்திலிருந்து அப்பாவுக்கும், அம்மாவுக்கும் சரிப்பட்டு வரவில்லை. விவரம் தெரிந்த நாள் முதலாக இவள் அப்பாவிடம் அம்மா அடி வாங்குவதைப் பார்த்திருக்கிறாள். கமலி, கமலி என்று யாரோ ஒருத்தியின் பெயர் இடையிடையே அடிபடுவதைக் கேட்டிருக்கிறாள். ஒட்டி உலர்ந்து, நிறம் கூட அதிகமற்ற ஒரு பெண்ணை அப்பா தன்னுடன் வீட்டிற்கு அழைத்து வந்திருக்கிறார். அவளுக்கும் சேர்த்துச் சாதம் போடச் சொல்லி, டிபன்– காப்பி தரச்சொல்லி அம்மாவை வற்புறுத்தி இருக்கிறார். அம்மா முடியவே முடியாது என்று அத்தனை அடி உதைகளையும் வாங்கிக்கொண்டு அழிச்சாட்டியமாய் உட்கார்ந்திருக்கிறாள்.

அந்தக் கமலியுடன்தான் அப்பா ஓடிப்போனார். இவள் கல்லூரியில் காலடி எடுத்து வைத்த ஒரு வாரத்திற்கெல்லாம் அப்பாவின் ஓடிப்போன வைபவம் நடந்தது. போனவர் சும்மா போகவில்லை. அம்மாவைச் சேர்ந்த அத்தனை உறவுக்காரர்களுக்கும், ஒருத்தர் தவறாமல் கடிதம் எழுதிப் போட்டுவிட்டுப் போயிருந்தார்.

"உங்கள் ஜனகலட்சுமியின் நடத்தை சரியில்லை. பிறந்த அந்த மூன்று குழந்தைகள் கூட என்னுடையதாகத் தெரியவில்லை. சொல்லிச் சொல்லிப் பார்த்தேன்; கேட்கவில்லை. இதற்கு மேல் பொறுத்துக்கொள்கிற



சக்தி இல்லாததால் நான் போகிறேன். இனி ஒருபோதும் அவளிடம் திரும்பமாட்டேன்."

இப்படிக்கு,
கிருஷ்ணமூர்த்தி

கடிதம் கிடைத்ததும் அம்மாவும், அண்ணாவும், அண்ணியும், பாட்டியை அழைத்துக்கொண்டு மன்னார்குடியில் இருந்து ஓடி வந்தார்கள். கடிதத்தில் இருப்பது நிஜமா என்று துருவித்துருவிக் கேட்டார்கள். இல்லை... இல்லை என்று கதறிக் கதறி அழுத அம்மா, மூன்றாம் நாள் காலையில் அண்ணியின் குத்தல் வார்த்தைகளைப் பொறுக்க முடியாதவளாக–

"ஆமாம். நிஜம்தான். அந்த மனுஷன் எழுதின கடுதாசியில் இருக்கிறதெல்லாம் வரிக்கு வரி நிஜம். போதுமா...? திருப்தியாயிடுச்சா...? இதுதானே வேணும் உங்களுக்கு? இனிமேல் நீங்க ஊருக்குக் கிளம்பிப் போகலாம்" என்று வெறிபிடித்த மாதிரிக் கத்த–

அதற்காகவே காத்திருந்த மாதிரி அவர்கள் ஊருக்குக் கிளம்பிப் போனார்கள். 'அதானே பார்த்தேன். நெருப்பில்லாமல்புகையாது. என்னதான் இருந்தாலும் வயசுக்கு வந்த பொண்ணையும், மணி மணியா ரெண்டு பையன்களையும் விட்டு ஒரு மனுஷன் இப்படி ஓடிப் போவானா என்ன...? அதுக்கு ஏதோ காரணம் இருக்கணும்னு நான் நினைச்சது சரியாப் போயிடுச்சு...!'– இது அம்மாவின் அண்ணி!

"இதப்பாரு, இன்னிலேருந்து நீ எனக்குத் தங்கை இல்லேன்னு தலை முழுகியாச்சு. அம்மா... நீ என்ன, எங்கக்கூட வரப் போறியா இல்லையா...?" என்று அண்ணா கேட்டபோது, பாட்டி தான் பெற்ற பிள்ளையை ஒரு புழுவைப் பார்க்கிற மாதிரி பார்த்தாள். எங்கே இந்தக் குடும்பத்தைத் தன் தலையில் கட்டிவிடுவார்களோ என்ற பயத்தில் மனசு ஏற்காத வார்த்தைகளை அவன் சொல்லிவிட்டுப் போவது தெரிந்தது. மிக சாமர்த்தியமாகப் பொறுப்பை உதறித் தட்டிக் கழித்துவிட்டுப் போக அற்பத்தனமாக ஒரு வழியைத் தேர்ந்தெடுத்திருப்பது புரிந்தது. கால் விநாடிப் பார்வைதான். பின்னர் அந்தப் பார்வைக்குக்கூட நீ தகுதியில்லை என்கிறாற் போல் முகத்தை திருப்பிக்கொண்டு பட்டுக் கத்தரிக்கிற குரலில் அழுத்தம் திருத்தமாகச் சொன்னாள்.

"நான் வரலை. நீ போகலாம். அப்படியே எனக்கும் சேர்த்துத் தலைமுழுகிட்டியானா நல்லது..."

அன்றிலிருந்து பாட்டி கூடவே இருக்கிறார். அம்மாவைப் போல்

மூலையில் முடங்கி முனகிக் கொண்டிருக்காமல் திடமாய், தீர்க்கமாய் இயங்குகிறார். அடிக்கடி இவள் மனசு உடைகிற போதெல்லாம், 'என்ன பாட்டி வாழ்க்கை இது? சட்டுன்னு முடிஞ்சு போயிடக்கூடாதுன்னு இருக்கு பாட்டி...' என்று சலித்துக்கொள்கிற போதெல்லாம் ஒரு சிநேகிதி மாதிரி ஆறுதல் சொல்கிறார்.

"அடி அசடே... இதுக்கா இப்படி மனசு உடைஞ்சு போறது...? தாங்கக் கூடியவளா பொறுக்கிப் பொறுக்கிப் பார்த்துத்தான் ஸ்வாமி கஷ்டங்களைத் தந்தார். உன்னால் முடியும். சமாளிப்பேங்கிறது அவருக்குத் தெரியாதா என்ன...? செத்துப் போறதுல என்ன இருக்கு? சுலபமான விஷயம்! எதிர்நீச்சல் போட்டு வாழறதுலதான் விஷயமிருக்கு. உன்கூடப் போட்டி போடற அந்தக் கஷ்டம் ஜெயிக்கிறதா, இல்ல நீ ஜெயிக்கிறயான்றதில்ல பெரிய விஷயம். நீயும் உங்கம்மா மாதிரி உடைஞ்சு போய்ச் சமையல் கட்டு மூலைல முடங்கி, சதாசர்வ காலமும் புலம்பிட்டிருந்தியானா உன் காலையே கட்டிட்டு வளைய வருதே... அந்த ரெண்டையும் யார் காப்பாத்துவா...? யார் படிக்க வைப்பா, சொல்லு...? பல்லு புளிச்சதோ, மாங்காய் புளிச்சதோன்னு பேசற சொந்தக்கார மனுஷங்க முன்னால் முக்கியமா உங்க மாமா, மாமி முன்னால்– 'எங்களாலயும் தலை எடுக்க முடியும் பாரு'ன்னு நீ இந்தக் குடும்பத்தை நிமிர்த்திக் காட்ட வேணாம்? அதை விட்டுட்டுப் போயிடறதா பெரிசு?"

பாட்டி மகா விவேகி! மழித்த தலையும், நார்மடிப்புடவையும், கையில் ஜெபமணி மாலையுமாக இருந்தாலும் முற்போக்குவாதி. மனித உணர்வுகளைப் புரிந்துகொள்ளுதல் அவளுக்கு கைவந்த கலை. எல்லாரையும் அப்படியே ஏற்றுக்கொள்ளுதல் அவளுக்கே உரிய லாவகம். இவளைப் பொறுத்தவரை இவளது ஆத்ம சிநேகிதி பாட்டிதான்.

இவள் அம்மாவின் எதிரில் நின்று அடக்கமாட்டாமல் பாட்டி வெறும் சாட்சியாய், மவுனமாய் நின்றுகொண்டிருப்பாளே தவிர– நடுவில் குறுக்கிட்டு ஒரு வார்த்தை சொல்லமாட்டாள்.

அம்மா கேட்கிற அத்தனை கேள்விகளும் நிஜமானாலும், இப்படி அழுது புலம்புவதை இவளால் தாங்கிக்கொள்ள முடிந்ததில்லை.

"அது சரிம்மா... அதெல்லாம் வேணாம்னுதானே அவர் ஓடிப் போயிட்டார். உன்னை வேணாம்னு உதறிவிட்டுப் போனவரை நீயும் வேணாம்னு உதற வேண்டியதுதானே? அதை விட்டுட்டு எதுக்காக எப்பவும் இப்படி அழுதுட்டிருக்கே...?"

"நான் வேணாம்னு மட்டும் போகலைடி; தான் பெத்த



பிள்ளைங்களே வேணாம்னுமில்ல போயிருக்கான். என் மேல வேணாம்... இந்தக் குழந்தைங்க மேல அன்பிருக்க வேணாம்? யார் காப்பாத்துவாங்கிறது தெரிய வேணாம்...?"

"ஏம்மா... நான்கேக்கறேன்னு தப்பா நினைச்சுக்காதே... நம்ம பேரில் அன்பு இல்லாததனால்தானே ஓடிப் போனார்? இருந்திருந்தா போயிருக்க மாட்டாருங்றது தெரியுதில்லை...? இல்லாத ஒண்ணைப் பிடிச்சுட்டு, இருந்திருக்கக் கூடாதான்னு ஏக்கப்பட்டு அழுதுட்டிருக்கிறதுல என்ன லாபம் சொல்லு? இதைவிட இப்போ என்ன ஆகணுமோ அதைப் பார்க்கலாமில்ல...? நீ அழறதையும், புலம்பறதையும் பார்த்து– சிவாவும், சாமிநாதனும் பயந்து நடுங்கிச் செத்துப் போறாங்க... அவர்களுக்காகவாவது கொஞ்சம் சும்மாயிருக்கக் கூடாதாம்மா...?"

அவ்வளவுதான், அம்மா இன்னமும் பிடித்துக்கொண்டு விடுவாள். சுயபரிதாபத்தில் புலம்பல் இன்னும் அதிகமாகும்.

"ஆமாண்டி... உங்களுக்காக நான் வாயடைச்சுட்டே இருந்து இருந்துதான் இப்போஇப்படி மூலையில நிக்கறேன். அன்னிலேருந்து இன்னிவரைக்கும் நீ வாயை மூடிக்கோன்னு என் வாயை அடைக்கிறது தவிர வேற என்ன செய்திருக்க நீ...? தப்பு செய்த அப்பாவைத் தட்டிக் கேட்டிருக்கியா...? அவர் செய்றது தப்புன்னு எடுத்துச் சொல்லி இருக்கியா? இதெல்லாம் செய்யாத காரணத்துனாலத்தான் அவருக்கு இன்னும் துளிர்விட்டுப் போச்சு. எது செய்தாலும் கேட்பார் இல்லைன்னு பயமத்துப் போச்சு... தான் ஒருத்தி பின்னால் ஓடிப் போனதுமல்லாம... என்னைப் பத்தி பொய்யா, கற்பனையா இல்லாததையெல்லாம் ஜோடிச்சு ஊரு ஊராய் கடுதாசி போட்டு– என்னைச் சிரிப்பா சிரிக்க வச்சு, சொந்தக்காரங்க அத்தனை பேர் வாய்லயும் விழவச்சு... சீ மனுஷனாடி அவன்... என் நடத்தை சரியில்லையாமே... நானா...? என்னையா.... என்ன முதுகெலும்பு இல்லாத ஜன்மம் பார்த்தியா...? தைரியமா நான் போறேன்னு சொல்லிக்க மூஞ்சியில்ல... என் மேலே பழி சுமத்தி... ஐயோ.... நானா... நானாடி.... நீங்கள்ளாம் அவனுக்குப் பொறந்த குழந்தைங்க இல்லையாமேடி....?"

இவள் சட்டென்று காதோடு மனசையும் சேர்த்துப் பொத்திக் கொண்டு கூடத்திற்கு ஓடி வந்துவிடுவாள். அதற்கு மேல் கேட்கிற தைரியம் இருக்காது. அடிவயிற்றைப் புரட்டிக்கொண்டு வரும். யாராலும் தாங்க முடியாததை அம்மா தாங்கிக்கொண்டிருப்பது புரியும். நெருப்பை முழுங்கின அவஸ்தையாய்ப் படுவது தெரியும்.

'பாவம் அம்மா...!' என்று தோன்றும். தாங்க இயலாதவர்களால் புலம்புவது தவிர வேறு என்ன செய்ய இயலும் என்ற சமாதானப்படும். அப்பாவை நினைக்க அடிவயிறு பற்றிக்கொள்ளும். அதன் பின்னரே அம்மாவின் அழுகை பற்றி, புலம்பலைப் பற்றி எதுவும் கேட்கக்கூடாது என்கிற முடிவிற்கு வந்தாள். அதை ஆமோதிக்கிற மாதிரி- பாட்டியும் அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில்தான், 'இனிமேல் அவகிட்ட இதைப் பத்தி ஒண்ணும் கேட்காதே ராதி... அவளா அழுது ஓயட்டும்னு விட்டுடு' என்று சொல்லவே- அன்றிலிருந்து அம்மாவிடம் அதைப் பற்றிப் பேசுவதையே நிறுத்திக்கொண்டுவிட்டாள்.

அதனால் அம்மாவின் அழுகை சத்தம் கேட்ட அந்த அதிகாலை நேரத்திலும் அவளிடமிருந்து ஓர் ஆழமான பெருமூச்சு மட்டுமே வெளிப்பட்டது. நல்ல வேளையாய்ச் சிவாவும், சாமிநாதனும், பாயை விட்டு விலகிப் புரண்டு, வெறும் தரையில் அடித்துப் போட்ட மாதிரி தூங்குவது தெரிய- மனசு கொஞ்சம் நிம்மதியாயிற்று. ஆனாலும் கூடவே எல்லையற்ற ஒரு சலிப்பும், விரக்தியும் ஏற்பட்டன. இதில் இருந்தெல்லாம் விடுதலையே கிடைக்காதோ? என்கிற கேள்வி நெருட, பாயைச் சுருட்டி வைத்துவிட்டுப் பின் பக்கம் போனாள்.

கொல்லையில் பாட்டி பூஜைக்காக நந்தியாவட்டையையும், செம்பருத்தியையும் பறித்துக்கொண்டிருந்தாள். மெல்ல பாட்டியின் அருகில் போனாள் இவள். அவளைப் பார்த்ததும் பாட்டி இதமாய்ப் புன்னகை செய்தாள். காலையில் எழுந்ததும் காதில் விழுந்த அம்மாவின் அழுகையும், பாட்டியின் புன்னகையும் எத்தனை எதிர்மறைவான விஷயங்கள் என்று நினைத்துக்கொண்டாள். அருகில் வந்து பாட்டி இதமாய் புன்னகைத்து, "எழுந்துட்டியா, வா... காப்பி கலந்து தரேன்..." என்றாள்.

"இன்னும் பல்லே தேய்க்கலை பாட்டி..."

"தேய்ச்சுட்டு வாயேன்."

அவள் தயங்கி நிற்பதை உணர்ந்த பாட்டி- அருகில் போய், "என்ன...? ஏன் இப்படி நிக்கறே...?" என்று கேட்டாள்.

"இல்ல பாட்டி... இன்னிக்கு என்ன, காலங்கார்த்தாலயே ஆரம்பிச்சுட்டா அம்மா...?"

"ப்சூ... விடு... இது என்ன புது விஷயமா...?"

"இல்ல பாட்டி..." என்று தயங்கித் தயங்கிச் சொன்னாள்.

"இன்னிக்குப் புது வேலைல சேரப் போறேன். இந்த மூணு வருஷமா ஒவ்வொரு இடமா மாறி, மாறி நிலையில்லாத வேலையாப் பார்த்து,



நாய் அலைச்சல் அலைஞ்சதெல்லாம் போதும்னு, கோடி வீட்டு மாமா தெய்வம் மாதிரி இந்த வேலையை வாங்கித் தந்திருக்கார். பெரிய கம்பெனி. ஆபீஸ் அரண்மனை மாதிரி இருக்கு. லிப்ட், டெலிபோன் ஆபரேட்டர், ஏர்கண்டிஷன்னு அமர்க்களமா இருக்கு. கோடிக்கணக்கில 'டர்ன் ஓவர்' பண்ணுற ஒரு நல்ல கம்பெனி பாட்டி, அது. அதனோட சேர்மெனுக்கு 'பர்ஸனல் செகரெட்டரி'யா இருக்கிற நிரந்தரமான வேலை பாட்டி? இன்னிக்கு நாள் நன்னா இருக்குன்னு பத்து மணிக்கு சேர்றதாச் சொல்லிட்டு வந்திருக்கேன். கார்த்தால எழுந்த உடனே அபசகுனம் மாதிரி அம்மா இப்படி அழறாளேன்னு மனசுக்கு கஷ்டமா இருக்கு. புதுசா வேலைக்குப் போற பெண்ணுக்கு ஒரு சந்தோஷம், உற்சாகம் எதுவுமில்லாம இது என்ன பாட்டி...?"

பேசினபோதே அழுகை துருத்திக்கொண்டு வந்தது. கடைசியில் கன்னங்களில் கண்ணீராக வழிந்ததைப் பார்த்துப் பாட்டி பதறிப் போய் அருகில் வந்தாள். அவள் கண்களை தன் கையால் துடைத்து வருடிக்கொடுக்கிற மாதிரிப் பேசினாள்.

"அடே அசடே... இதுக்குப் போய் இப்படிக் கஷ்டப்படலாமா...? ம்...? உங்கம்மா எந்த நல்ல நாள்ல அழாம இருந்திருக்கா சொல்லு...? பாவம் குழந்தைகள், அதுகள் கஷ்டப்படுமேன்னு தன் கஷ்டத்தை அடக்கிட்டிருக்கா...? கிணற்றுத் தவளை மாதிரி தன் கஷ்டம்தான் உலகத்துல பெரிசுன்னு பூதக்கண்ணாடி போட்டுப் பார்க்கிறவளை எப்படித் திருத்த முடியும்...? எல்லாம் தெரிஞ்ச நீ இதுக்குப் போய் அழலாமா? கஷ்டப்படலாமா? புது வேலை, புது இடம், புது மனுஷங்களைச் சந்திக்கப் போறே... சந்தோஷமாக சிரிச்ச மூஞ்சியோட போக வேணாம்? அசடாட்டம் இது என்ன கலக்கம்...? மடமடன்னு பல் தேய்ச்சு காப்பி குடிச்சுட்டு, குளிச்சி அழகா 'டிரஸ்' பண்ணிட்டு வா. அதுக்குள்ள சமையல் பண்ணி முடிச்சுடறேன். இனிமேலயாவது இந்தக் குடும்பத்துக்கு ஒரு நல்ல வழி பிறக்கட்டும்ப்பான்னு வேண்டிட்டு ஒரு கை பால் பாயாசம் வச்சி ஸ்வாமிக்கு நைவேத்தியம் பண்ணுறேன். நமஸ்காரம் பண்ணி, சாப்பிட்டுட்டுக் கிளம்பற வழியைப் பாரு... உங்கம்மா இல்லைன்னா என்ன, நானில்லை...? ஆசீர்வாதம் பண்ணி அனுப்பமாட்டேன்...? இதுக்காக காலங்கார்த்தால எழுந்து கண் கலங்கிட்டு... ம்... கண்ணைத் துடைச்சுட்டு, பளிச்சுன்னு நல்ல புடவை கட்டிட்டு என் முன்னால வந்து நில்லு பார்ப்போம்..."

பாட்டியின் உற்சாகமும், சுறுசுறுப்பும் அவளையும்

ல்லாம் இருந்தன.
"இதெல்லாம் ஏதுன்னு நான்
ங்களுக்குச் சொல்லலையே...
ாய் வாங்கும்போது தினசரி...
ரண்டுரூபா...அஞ்சு ரூபான்னு
ச்சம்பிடிச்சி வைப்பேன்...
துல வாங்குனதுதான்
இதெல்லாம்."
தினசரி சில்லரை
ருபாயாகச் சேத்து இவ்வளவு
பொருட்களை வாங்கியிருக்கும்
னைவிக்கும், மொத்தமாக
ணத்தைத் தொலைத்துவிட்டு
ந்திருக்கும் தனக்கும் எத்தனை
த்தியாசம் என்று எண்ணி
வட்கித் தலைகுனிந்தான்,
னோகரன்.
இனிமேல் எல்லாக்
டும்பப் பொறுப்புகளையும்
னைவியிடம் ஒப்படைத்துவிட
வண்டியதுதான் என்று முடிவு
சய்தவாறு அவளை இழுத்து
பாவளிப் பரிசொன்று
காடுத்தான், இதமாய்! ★

## சந்தன மரங்கள்

இந்தியாவில் எந்தப்
குதியில் சந்தன மரங்களும்,
க்கு மரங்களும் வளர்ந்தாலும்
து இந்திய அரசுக்கே
சாந்தமாகும் என்று சட்டம்

தொற்றிக்கொண்டது. மடமடவென்று பல் தேய்த்து, காப்பி குடித்து, குளித்துவிட்டு வந்தவள்– தன்னிடமிருந்த சேலைகளில் மிக நன்றாக இருந்த அடர்நீல பட்டைக் கட்டிக்கொண்டாள். இந்தக் கறுத்த நிறத்தில் அவளது தென்னம்பூ நிறம் இன்னும் பளிச்சிட்டது. வழக்கத்தைவிட இன்று மிக மிக அழகாகத் தெரிந்தாள். பாட்டியை நிற்க வைத்து வணங்கி, ஆசீர்வாதம் வாங்கிக்கொண்டாள். அம்மா இருந்த அறைக்குள் எட்டிப் பார்த்தபோது அழுது ஓய்ந்து அறை மூலையில் சுருட்டிக்கொண்டு கிடப்பது தெரிந்தது. அதனால் அவளை எழுப்ப மனமில்லாமல் பாட்டியிடமே அம்மா எழுந்ததும் சொல்லிவிடச் சொல்லி விடைபெற்றுக்கொண்டாள். நடையில் செருப்பை போட்டுக் கொண்டபோது தம்பிகள் இருவரும் ஓடி வந்து, 'ஆல் தி பெஸ்ட்' சொல்லி, அவர்களிடம் இருந்தும் விடைபெற்று வெளியில் வந்தாள். முகத்தைத் தாக்கின குளிர்ச்சியான காற்று சட்டென்று புதியதாய் உணர வைக்க –

ஓரளவு தெளிவோடும், நம்பிக்கையோடும் அந்தப் புதிய வேலை பற்றிய சிந்தனையில் பஸ் நிறுத்தம் நோக்கி நடக்கலானாள்...

## 2

**வ**ரிசையாகக் கொன்றை மரங்களும், குடை குடையாகக் கவிழ்ந்து கிடந்த நிழலும், வெயிலே தெரியாத குளுமையும், சிலுசிலுவென்ற காற்றுமாக அந்தத் தெருவே அழகாக இருந்தது. ரம்மியமானதாய் மனதைக் கவர்ந்தது. நடப்பதற்கு மிகுந்த சந்தோஷத்தைத் தந்தது. சட்டென்று சென்னையைவிட்டு வேறு ஏதோ மலைப் பிரதேசத்திற்கு வந்துவிட்ட பிரமையைத் தோற்றுவித்தது. 'நம் ஊரில் கூட இப்படி ஒரு தெருவா!' என்கிற வியப்போடு நடந்து போன ராதிகா, அந்த அலுவலகத்தின் காம்பவுண்டு வாசலில் சற்று நின்றாள். திடீரென்று, 'இதுதான் நான் தேடி வந்திருக்கிற அலுவலகமா...?' என்கிற சந்தேகம் ஏற்பட்டது. பிரமாண்டமான நாலடுக்கு மாடியோடுகூடிய அந்தக் கட்டிடமும், வாசலில் வரிசையாக நின்ற கார்களும், சிறிதளவு சத்தம் கூடக் கேட்காத அமைதியும் அந்த சந்தேகத்தை ஏற்படுத்தியது. ஒரு ஆபீஸ் என்றால் எத்தனை இரைச்சல் இருக்கும்...? வருவோரும், போவோருமாக எப்படி அமர்க்களப்படும்...? வாசலில் கை வண்டியில் பச்சை வாழைப்பழமும், கொய்யாவும், சைக்கிள்

பின்னால் வைத்துக் கட்டப்பட்ட எவர்சில்வர் டிரம் காப்பியுமாக எத்தனை வியாபாரிகள்? அவை எதுவுமின்றி, மிக மிக அமைதியாய் ஏதோ புகைப்படம் மாதிரி இயங்குகிற இதுவா ஆபீஸ்...?

அவளால் தீர்மானிக்க முடியவில்லை.

இந்த வேலையை வாங்கித் தந்த கோடி வீட்டு மாமா அவளை அலுவலகத்திற்கு அழைத்து வரவில்லை. அடையாறு பக்கத்திலிருந்த ஒரு பெரிய பங்களாவிற்கு அழைத்துப் போய், 'இவர் தாம்மா அந்த கம்பெனி மானேஜர் ராகவன். என் ரொம்ப நாளைய சிநேகிதன். கம்பெனி சேர்மன் கார்த்திகேயனுக்கு ரொம்ப வேண்டியவர். இவரோட பெரிய மனசுதான் உனக்கு இந்த வேலையை வாங்கித் தந்திருக்கு. நமஸ்காரம் பண்ணிட்டு வேலைக்கான உத்தரவை வாங்கிக்கோ...'

அங்கேயே பதவிப் பிரமாணம் முடிந்து, புதன்கிழமை நல்ல நாள்– வந்து சேர்ந்துவிடச் சொல்லி உத்தரவாக– இவள் அலுவலகத்தின் பக்கமே வரவில்லை. நேற்றைய சாயந்திரம் கோடி வீட்டு மாமாவைப் பார்த்து, மறுநாள் காலையில் வேலையில் சேர வேண்டியதைத் தெரியப்படுத்திவிட்டு வந்தபோது அவர்தான் பஸ் ரூட், ஆபீசுக்குப் போக வேண்டிய வழி எல்லாம் சொல்லிக் கொடுத்தார்.

"ரொம்பப் பெரிய கம்பெனி; சாதாரணமாக அங்கே வேலை கிடைக்கிறதே கஷ்டம். பகவான் அனுக்கிரகத்தால் ராகவன் ரூபத்துல உனக்கு இந்த வேலை கிடைச்சிருக்கு. ஆபீஸ் எப்படி இருக்கும்னு நினைக்கிறே...? ஏதோ அந்நிய தேசத்திலே இருக்கிற மாதிரி இருக்கும். சென்னையில அந்த மாதிரி ஒரு ஆபீஸ் வேறே எங்கேயும் கிடையாது. நல்ல இடம், பெரிய மனுஷங்க... சமர்த்தா நடந்து நல்ல பேர் வாங்கிக்கணும். அதுக்கு உனக்குச் சொல்லித்தர வேணாம், இருந்தாலும் சொல்றேன். போனதும் முதல்ல ராகவனைப் பார்த்துடு...என்ன...?"

"சரி மாமா..." என்று மிகுந்த நன்றியுடன் தலையாட்டிவிட்டு வந்திருந்தாள். 'சென்னையில் அந்த மாதிரி ஓர் ஆபீஸ் வேறு எங்கும் கிடையாது...' என்று மாமா சொல்லி இருந்தாலும், அவளைச் சற்றே சந்தேகத்திற்கு உள்ளாக்கியது. அதனால் மெல்ல வாசல் கூர்க்காவை நெருங்கி– அதுதான் அந்த அலுவலகமா என்பதைக் கேட்டுத் தெளிவுபடுத்திக்கொண்டு, வாசலில் பரந்து கிடந்த புல் தரையைக் கடந்து போய், கண்ணாடிக் கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே நுழைந்தவள்– அப்படியே பிரமித்து நின்றுவிட்டாள்.

அது ஆபீஸா அல்லது சினிமாவில் பார்க்கும் ஐந்து நட்சத்திர



ஓட்டலின் வரவேற்பறையா என்ற ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. சிவப்புக் கம்பளம் விரித்த அந்த மிகப்பெரிய ஹாலின் ஓரத்தில் அழகாய் வளைத்துப் போடப்பட்டிருந்த அரை வட்ட மேசையின் பின்னால் மெழுகுப் பொம்மையாக நின்று கொண்டிருந்தாள் வரவேற்புப் பெண். யாரோ ஓர் இன்றைய இந்திக் கதாநாயகியை நினைவுபடுத்தினாள். கத்தரித்து விடப்பட்ட தலைமுடியும், புருவங்களும், மெல்லியதாய் ஆரஞ்சு நிறமேற்றின உதடுகளுமாக அழகு பண்ணிக்கொண்டிருந்தாள். கவர்ச்சிகரமாக உடை அணிந்திருந்தாள். சுலபமாய்ச் சிரித்து, சுலபமாய்ப் பேசி, 'என் சிரிப்பிற்கு முன்னால் யாரும் நிற்க முடியாது!' என்கிற மாதிரி அலட்சியமாய்ப் பார்த்து...

அவளை நெருங்கி எது கேட்கவும் இவளுக்குத் தயக்கமாக இருந்தது. பயமாக இருந்தது. ஆனாலும், வேறு வழியின்றி அந்த மேசையை நெருங்கினாள்.

"எஸ் பிளீஸ்...?"

"இங்கே ராகவன்றவரைப் பார்க்கணும்..."

"எந்த ராகவன்...?"

இவளுக்குச் சட்டென்று பதில் சொல்ல முடியாமல் தடுமாறிற்று.

"அடையாறிலே இருக்காரே... வெள்ளையா, உயரமா, விபூதியும்... குங்குமப் பொட்டுமாக–"

"ஓ... யு மீன் மானேஜர்... ஹி இஸ் ஆன் லீவ் டுடே..."

இன்று காலையில் இருந்தே எல்லாம் கோணலாகப் போகிற உணர்வு ஏற்பட்டது. குப்பென்று மனதை ஏதோ ஒரு பயம் சூழ்ந்துகொள்ள– தயங்கி நின்றாள். அதைக் கவனித்த அந்த வரவேற்புப் பெண், "எனிதிங் எல்ஸ் ஐ கேன் டு பார் யூ...?"

இவள் 'இல்லை' என்று தலையாட்டிவிட்டுச் சற்றுத் தள்ளிப் போய் அந்த வரவேற்புப் பெண்ணின் கண்ணிற்படாமல் நின்றாள். மேலே என்ன செய்வது என்பது புரியாமல் வெற்றுப் பார்வையாய்ச் சுற்றிலும் கவனிக்க ஆரம்பித்தாள்.

தள்ளித் திறக்கும் கண்ணாடிக் கதவுகளும், வெள்ளை பளிங்குச் சுவர்களும், சிவப்பும்... பச்சையுமான கம்பள விரிப்புகளும், விலை உயர்ந்த திரைச்சீலைகளும்... வரவேற்பறையை ஒட்டின நீண்ட அந்தப் பெரிய அலுவலக அறை கண்ணாடி ஜன்னல் வழியாகப் பேசாத படமாகத் தெரிந்தது. அதனுள் வேலை செய்தவர்கள்





ஒவ்வொருவராகக் கண்ணில்பட்டனர். அவர்களைப் பார்க்கப் பார்க்க இவளுக்குள் ஏற்பட்டிருந்த இறுக்கமான அந்த உணர்ச்சி அதிகமாயிற்று. கம்பீரமாய், கண்ணியமான தோற்றத்தில் மடிப்புக் கலையாத உடைகளில் ஆண்களும், டி.வி.யில் காட்டப்படுகிற துணி விளம்பரத்தில் வருகிற மாதிரி பெண்களும்... அவர்களின் 'பாப்' பண்ணின கூந்தலும், ஒப்பனை செய்த முகங்களும், அவளுக்குப் பெயர் தெரியாத புதுமாதிரி உடைகளும்...

அவர்களுக்கு மத்தியில், தான் மிக மிக அந்நியப்பட்டு நிற்பதை உணர்ந்தாள். இதற்கு முன் வேலை செய்த அத்தனை இடங்களில் இருந்தும் இது எல்லா வகையிலும் வித்தியாசப்படுவதைப் புரிந்துகொண்டாள். அடிப்படையிலேயே மிகவும் மாறுபட்டிருப்பது தெரிந்தது. இத்ன் சூழ்நிலை வேறு. மனிதர்களும் வேறாக இருந்தார்கள்.

இதற்கு முன் இவள் வேலை செய்த இடங்களில் இருந்தவர்கள் சாதாரணமானவர்கள். சராசரி மனிதர்கள். இவளைப் போலவே வேலையும், அதன் மூலம் கிடைக்கும் வருமானமும் அத்தியாவசியத் தேவை என்றானவர்கள். மாதக் கடைசியில் கைச்செலவிற்குக் கடன் வாங்கி முதல் தேதிக்குப் பின் திருப்பிக் கொடுப்பவர்கள்.

ஆனால், இந்த ஆபீஸ் அப்படித் தெரியவில்லை. தாங்கள் படித்த அதிகப்படியான படிப்பை அனுபவமாக்க வந்தவர்களாகப் பட்டார்கள். வெறும் தேவைக்காக இன்றி விஷயங்களைக் கற்றுக்கொள்ள வந்தவர்களாகத் தெரிந்தார்கள். இங்கு வாங்கும் சம்பளத்தை உடைகளுக்கும், அழகு சாதனங்களுக்கும் மட்டுமே உபயோகிப்பவர்களாக இருந்தார்கள். மென்மையாகப் பேசி, சன்னமாய்ச் சிரித்து– கம்பீரமாய், கண்ணியமாய், அதிநாகரீகமாய், சந்தோஷமாய், உற்சாகமாய்...

சட்டென்று அவள் குனிந்து தன்னைப் பார்த்துக்கொண்டாள். தளர வாரிப் பின்னலிட்ட அடர்த்தியான கூந்தலும், வெறும் பவுடர் மட்டும் பூசி (மாதக் கடைசியானால் வெற்று டப்பா மட்டுமே இருக்கும்) சின்னதாய்ச் சாந்துப் பொட்டும், மேலே கீற்றாக விபூதியும், பூப்போட்ட சுடிதாரும், எந்தவித ஆடம்பரமுமற்ற எளிமையும்...

கொஞ்சம் கூடத் தகுதியற்ற ஓர் இடத்திற்கு வந்து நின்று கொண்டிருப்பதாகத் தோன்றிற்று. அங்கு வேலை செய்யத் தான் சிறிதும் லாயக்கற்றவள் என்பதான தாழ்வு மனப்பான்மை ஆழமாய்ப் பதிந்தது. கிராமத்துச் சிறுமி ஒருத்தியை அழைத்து வந்து, சென்னை

அண்ணா சாலையில் விட்ட உணர்ச்சி ஏற்பட்டது. அந்தச் சிறுமிக்கு ஏற்படக்கூடிய மிரட்சி, பயம், நடுக்கம் எல்லாம் இவளுக்கும் ஏற்பட்டன. எப்படியாவது அந்த இடத்தைவிட்டுப் போய்விட்டால் போதும் என்றிருந்தது. நேராகக் கோடி வீட்டு மாமாவிடம் போய் விளக்கமாகச் சொல்லி, 'இந்த வேலை வேண்டாம் மாமா. என் தகுதிக்கேற்ற சாதாரண வேலையாக வாங்கித் தாருங்கள், போதும்' என்று கெஞ்சிக் கேட்கலாம் என நினைத்து நகர, வாசலை நோக்கி நடக்க முனைந்தபோது தேன்குரல் நிறுத்தியது. சற்று முன் பேசின வரவேற்புப் பெண் பரபரத்தவாறு அவளிடம் வந்தாள். முகத்தில் அவசரமும், பேச்சில் வேகமும் தெரிந்தன.

"ஆர் யு மிஸ் ராதிகா..."

இவள் மெதுவாகத் தலையாட்ட– அவள் சற்று எரிச்சல் கலந்த குரலில் கேட்டாள். "மிஸஸ் தாமசுக்குப் பதிலாகப் புதிதாய் சேர்மெனுக்கு 'அப்பாய்ண்ட்' பண்ணப்பட்டிருக்கிற 'பர்ஸனெல் செகரட்டரி...?"

அதற்கும் தலையாட்டலே பதில்.

"மை குட்காட்...!"என்று பதறினாள் அவள்.

"இதை முன்பு என்னிடம் பேசினபோதே சொல்வதற்கென்ன...? இப்போதுமிஸ்டர்ராகவன்'போன்' பண்ணிச்சொன்னதற்கப்புறம்தான் தெரிந்தது. பிளீஸ் ஹரியப். சேர்மன் வந்து அவருடைய அறைக்குப் போய்ப் பத்து நிமிஷமாச்சு. அவர் வந்ததும் உடனே கூப்பிடுவது மிஸஸ் தாமஸைத்தான். ஏற்கெனவே ஒருதரம் இன்டர்காமில் கூப்பிட்டுவிட்டாராம். இன்னொரு தரம் கூப்பிடுவதற்குள் நீ அவருடைய அறையில் இருந்தாகணும். ம்... சீக்கிரம் வா..."

ராதிகா தயங்கினாள். "வந்து... வந்து... நான்..." என்று தடுமாறினாள்.

"ஓ...லுக்...! எதுவானாலும் அப்புறம் பேசிக்கொள்ளலாம் கமான் க்விக்... இரு, ஷார்ட்ஹாண்ட் நோட்புக்கும், பென்சிலும் வாங்கித் தரேன்..."

ஒரே விநாடியில் எங்கிருந்தோ புது ஷார்ட்ஹண்ட் நோட்டும், பென்சிலுமாக வந்தாள். அதை அவளிடம் தந்து, அவசரமாக 'லிப்ட்' வரை இழுத்துக்கொண்டு போனாள். மூன்றாம் மாடி வரை கூட வந்து...

"இதுதான் சேர்மன் அறை. கதவுக்கு மேல இருக்கிற 'பெல்'லை அழுத்தி, பதிலுக்கு அவர் 'பெல்' அடிக்கிற சத்தம் கேட்டதும் உள்ளே



போ... ஓ கே...? திரும்ப உன்னை 'லஞ்ச்' நேரத்துல பார்க்கிறேன். ஆல் தி பெஸ்ட்!"

அவள் சொல்லித் தந்த மாதிரி அழைப்பு மணியழுத்தி, 'உள்ளே வரலாம்' என்பதற்கு அடையாளமாகப் பதில் மணி கேட்ட பின்னரே உள்ளே நுழைந்தாள் ராதிகா. அவள் போனபோது 'எக்ஸிகியூடிவ்' மேசைக்குப் பின்னால் முகம் தெரியாதவாறு ஆங்கிலச் செய்தித்தாளை பிரித்துப் படித்துக்கொண்டிருந்த சேர்மனின் குரல் மட்டும் சிறிதுகூடப் பிசிறின்றிக் கணீரென்று கேட்டது.

"குட்மார்னிங் மிஸஸ் தாமஸ். உட்காருங்க. நான் சொல்றதை மடமடன்னு நோட்ஸ் எடுங்க. ரொம்ப அவசர கடிதம். தபால் பண்ணாம உடனடியா கூரியர் மூலம் அனுப்பிடுங்க."

பதிலை எதிர்பார்க்காமல் மடமடவென்று 'டிக்டேட்' பண்ணத் தொடங்கினார் அவர். நல்ல ஆங்கிலத்தில், கம்பீரமான குரலில் சொல்லிக்கொண்டு போக–

அடித்து வைத்த பொம்மை மாதிரி அப்படியே உட்கார்ந்திருந்தாள் அவள். பென்சிலைப் பிடித்த விரல்கள் நடுங்கின. கை நடுங்கிற்று. உடம்பு முழுவதிற்கும் நடுக்கம் பரவிப் பயத்தில் நெஞ்சு படத்தது. நாக்கு உலர்ந்து ஒட்டிக்கொண்டது. 'இன்று காலையில் இருந்து ஏன் இப்படி எல்லாமே முரண்படுகிறது...?' என்ற எண்ணத்தில் அடிவயிறு புரண்டது. 'சரி, என்ன ஆகிறதோ ஆகட்டும்' என்று அவள் நாற்காலியின் கைப்பிடியை இறுகப் பற்றிக்கொண்டு அமைதியடைய முயற்சி செய்துகொண்டிருந்த நேரத்தில் கடிதத்தை 'டிக்டேட்' செய்து முடித்துவிட்டு, எப்போதும் திருப்பிப் படிக்கச் சொல்லிக் கேட்கிற மாதிரிக் கேட்டார் சேர்மன்.

"கமான் மிஸஸ் தாமஸ். ரீடிட் அவுட் பார் மீ...?"

கால்விநாடி காத்திருந்து வழக்கமான ஸ்படிகமான ஆங்கில உச்சரிப்பில் சற்றே ஆண் தன்மையோடு கூடிய குரலில் மடமடவென்று 'டிக்டேட்' செய்ததைச் திருப்பிப் படிக்கும் மிஸஸ் தாமஸின் குரல் கேட்காததால் பொறுமை இழந்து–

"வாட் இஸ் திஸ் மிஸஸ் தாமஸ்...? வாட் ஹாப்பண்ட் டு யூ...?" என்று செய்தித்தாளைத் தழைக்க–

அயர்ந்து போனான் கார்த்திகேயன். ஒரு விநாடி அதிர்ந்து கூடப் போனான். எதிரில் உட்கார்ந்திருக்கிற அவள் யார் என்று தெரியாமல் தடுமாறினான். ஏதோ தேவதை வந்து உட்கார்ந்திருக்கிற மாதிரி தெரிந்தது. பார்த்துப் பார்த்துச் சலித்து போன செயற்கை

அழகுகளும், மருட்டுகிற நாகரீக உடைகளுமின்றி மிக மிக இயற்கையாய், ஒற்றைப்பின்னலும், நெற்றிப் பொட்டும், விபூதியுமாக– இதுதான் அழகு என்பதை எடுத்துக்காட்ட வந்தமாதிரி அவள் உட்கார்ந்திருப்பதாகத் தோன்றியது. மருண்டு போன பார்வையும், கள்ளமற்ற குழந்தைத்தனம் முற்றிலும் மாறாத முகமும் முதல் பார்வையிலேயே அவனைக் கவர்ந்தன. அவள் உட்கார்ந்திருந்த விதமும், பார்வையின் கலக்கமும், அதி குளிர்ச்சியான 'ஏர்கண்டிஷன்' அறைக்குள்ளும் நெற்றியில் பொடிந்திருந்த வியர்வைத் துளிகளும் அவள் பயந்து போயிருப்பதை எடுத்துக்காட்டின. மருண்டு உட்கார்ந்திருப்பதைத் தெரியப்படுத்தின. ஒரு பள்ளி சிறுமி கோபப்படும் ஆசிரியருக்கு எதிரில் ஒடுங்கிப் போய் நிற்கிற மாதிரி அவள் உட்கார்ந்திருப்பதாகப் பட, சட்டென்று உதட்டோரம் புன்னகை ஓடிற்று, அவனுக்கு. அவளைப் பார்த்த பார்வை மென்மையாக– 'சற்று அழுத்தமாய் எது கேட்டாலும் அவள் அழுதுவிடக்கூடும்' என்று தோன்ற– மெதுவாக, நிதானமாக, சன்னமான குரலில் கேட்டான் அவன்.

"யார் நீங்கள்...? மிஸஸ் தாமஸ் எங்கேன்னு நான் தெரிஞ்சுக்கலாமா...?"

அவளால் சட்டென்று பதில் சொல்ல முடியவில்லை. சேர்மன் என்று ஐம்பது, ஐம்பத்தைந்து வயதான தலை வழுக்கைப் பெரியவரை எதிர்பார்த்த இடத்தில் இளைஞனாய், கம்பீரமானவனாய், எல்லாவற்றிற்கும் மேலாக உதட்டுப் புன்னகையும், குறுகுறுவென்ற பார்வையும்... இவரா, இவனா சேர்மன்...?

அந்த அதிர்ச்சியும் வேறு சேர்ந்துகொள்ள– 'நோட்ஸ்' எடுக்காத பயத்திலும், அவமானத்திலும் இன்னமும் உடம்பு நடுங்கிற்று. சடடென்று எழுந்து நின்றாள்.

அவள் இருந்த நிலையும், எழுந்து நின்ற வேகமும் கதவைத் திறந்து ஓடிவிடவும் கூடும் என்று அனுமானித்து, இன்னும் மென்மையாய்க் குரலைத் தழைத்துப் பேச ஆரம்பித்தான் அவன்.

"அடடே... ஏன் எழுந்துட்டீங்க...? உட்காருங்க..." என்ற போதுதான் மிஸஸ் தாமசுக்கு பதிலாக வேறு ஒரு இளம் பெண்ணை அந்த இடத்திற்கு நியமித்திருப்பதாக ராகவன் சொன்னது சட்டென்று நினைவிற்கு வந்தது.

'பாவம், வேலைக்குப் புதுசு போல இருக்கிறது... அதுவும் எடுத்ததும் இந்த மாதிரி ஒரு ஆபீஸைப் பார்த்ததும் பயந்து, மிரண்டு போயிருக்கிறாள்...



"உட்காருங்க, இப்பதான் ராகவன் சொன்னது ஞாபகத்துக்கு வருது. நீங்கதான் மிஸஸ் தாமசுக்கு பதிலாக வந்துருக்கிற புது செகரட்டரி இல்லே...?"

குனிந்த தலை நிமிராமல் 'ஆமாம்' என்கிற மாதிரி ஆடியது.

"உங்க பெயர் என்னன்னு தெரிஞ்சுக்கலாமா...?"

மெல்ல முகத்தை நிமிர்த்தி அவள் பார்த்தபோது, இவனுக்குள் சிலிர்த்தது. இதுவரை அனுபவித்தே இராத புது உணர்ச்சியாக ஒன்று எட்டிப் பார்த்தது. அவள்தான் பெயரைச் சொல்லக்கூட சக்தியில்லாத மாதிரி, "வந்து... வந்து..." என்று தடுமாற–

"ஓ.கே... ஓ.கே... நீங்க கொஞ்சம் 'நெர்வெஸ்' ஆயிட்டீங்க போல இருக்கு... அதனாலதான் தடுமாறறீங்க... இதுதான் உங்க முதல் வேலைன்னு நினைக்கிறேன். அதனாலதான் இந்த 'நெர்வெஸ்னெஸ்', பயம் எல்லாம். இந்தாங்க... இந்த ஐஸ் வாட்டரைக் குடிங்க... யு வில் பீல் கம்பர்டெபிள்..."

தனக்காக மேசை மீது மூடி வைக்கப்பட்டிருந்த கண்ணாடி தம்ளர் தண்ணீரை எடுத்து நீட்ட,

அவள் தயங்கினாள்.

"பரவாயில்லை, வாங்கிக்கோங்க..."

விரல்படாமல் அவன் தர, அந்தத் தண்ணீரை வாங்கி மடமடவென்று குடித்த பின்னர் உள்ளுக்குள் மெல்ல, மெல்ல எதுவோ அடங்குகிற மாதிரி இருந்தது. கொஞ்சம் தெம்பு வந்தது. அவனை ஏறிட்டுப் பார்க்கக் கூடிய பலம் ஏற்பட்டது.

அவளது முகத்தில் லேசாகப் படர்ந்த விடுதலை உணர்வைப் புரிந்துகொண்டவன், புன்னகை மாறாமலே கேட்டான்.

"டூ யு பீல் பெட்டர் நௌ...?"

அவள் தலையாட்டினாள்.

"இன்னும்கூட அந்தப் பயமும், படபடப்பும் போகலைன்னு நினைக்கிறேன்... ஏன்னா, வாயைத் திறந்து பேச மாட்டேங்றீங்களே...?"

"........."

"இந்த நிலைமைல நான் 'டிக்டேட்' பண்ணின எதையும் நீங்க 'நோட்ஸ்' எடுத்துக்கலைன்னு நினைக்கிறேன். ஆம் ஐ ரைட்...?

மன்னிப்புக் கேட்கிற விதமாக அவளது பார்வை உயர்ந்தது.

"தட்ஸ் ஆல் ரைட், வேற யாரையாவது கூப்பிட்டு இன்னிக்கு

எழுதிக்கச் சொல்றேன். இதுக்காக வேற நீங்க 'அஜிடேட்' ஆக வேணாம். புது இடம், புது மனுஷங்கன்றதால் முதல் நாள் இப்படித்தான் இருக்கும். நாளைக்கே சரியாப் போயிடும். 'ஜஸ்ட் எ மூமெண்ட் பிளீஸ்...?"

அவன் அந்த கம்பெனி சேர்மன்- முதலாளி. லட்சத்தைத் தவிரப் பார்த்தறியாதவன். இவள் அவனிடம் வேலை செய்ய வந்தவள். இன்னும் முழுதாய் ஆயிரம் ரூபாயை எண்ணிப் பார்க்காதவள். அவனது காரியதரிசியாகச் சேர்ந்திருப்பவள். ஆனாலும் அனுமதி கேட்கிற மாதிரி 'ஜஸ்ட் எ மூமெண்ட் பிளீஸ்' என்று அவன் சொன்னது இவளுக்குள் இமாலய மதிப்பை ஏற்படுத்தியது. இதுவரை இவள் பார்த்த இடங்களிலும் 'செக்ஷன் சூபர்வைஸர்'களும், 'கிளார்க்'குகளுமே எப்படி விரட்டுவார்கள்... எந்த மாதிரி மரியாதையற்றுப் பேசுவார்கள். 'பைல்' வாங்குகிற சாக்கில், பேனா கேட்கிற சாக்கில் விரலைத் தொட்டு, தடவி, பார்வையாலேயே வருடி... அந்த மாதிரி எத்தனை பார்வைகள்! எத்தனை தொடல்கள்! அருவருப்பாய் அடிவயிற்றைப் புரட்டுவதாய்....

'நீ நினைக்கிற வர்க்கம் நானில்லை...!' என்று இவள் முறைக்கும் முறைப்பில்- பார்வையின் வெறுப்பில் அடங்கி... கொஞ்ச நாளானதும் மீண்டும் சபலம் தலைதூக்க...

இந்தத் தொந்தரவுக்கெல்லாம் பயந்தே அவள் நிறைய வேலையை விட்டிருக்கிறாள்.

அப்படிப் பார்த்துப் பார்த்துச் சலித்துப் போனதில் இவனது கண்ணியமும், கம்பீரமும், இதமான பேச்சும்... மனசுக்குள் ஒரு நிம்மதியை ஏற்படுத்தின.

'கோடி வீட்டு மாமா சொன்ன மாதிரி நிஜமாகவே பெரியமனுஷன்தான். மனுஷன் மட்டுமில்லை, இடமும் நல்ல இடம். அதிகம்பீரமானவர்கள் வேலை செய்யக்கூடிய இடம். இங்கு பண்பாடு அதிகம் இருக்கும். பாதுகாப்பு இருக்கும். வெறும் நாகரிகத்தைக் கண்டு மருண்டு முட்டாள்தனமாக நடந்து கொண்டுவிட்டதில் இந்த வேலையைத் தவற விடக்கூடாது. மீண்டும் இதுமாதிரி இடத்தில் இந்த மாதிரி வேலை கிடைப்பது கஷ்டம். கஷ்டமென்ன ... கிடைக்கவே கிடைக்காது. அதனால் இதைத் தக்க வைத்துக்கொள்ள வேண்டும்...! அதற்கு என்ன செய்வது?' என்பது புரியாமல் அவள் தடுமாறிக் கொண்டிருந்த போதே-

அவன் 'இன்டர்காம் ரிஸீவரை' எடுத்து பட்டனை அழுத்தி-

"மிஸ்டர் ராம்குமார்! என் அறைக்குக் கொஞ்சம் வர முடியுமா



பிளீஸ்..."

இவன் ரிஸீவரை வைக்கவும், அழைப்பு மணியழுத்தி ராம்குமார் என்ற அந்த அழகான, பெண்மையின் நளினம் கலந்த முகம்கொண்ட இளைஞன் உள்ளே நுழையவும் சரியாக இருந்தது.

"குட்மார்னிங் சார்..."

"உட்காருங்க ராம்குமார்..."

"பரவாயில்லே சார். சொல்லுங்க..."

வந்தவன் உட்கார மறுத்த பின்னரே- அத்தனை நேரமாகத் தான் உட்கார்ந்துகொண்டிருப்பது உறுத்த- சட்டென்று எழுந்து நின்றாள்.

"அடேடே... நீங்க ஏன் எழுந்துட்டீங்க? ஏற்கெனவே பயந்து போயிருக்கிற அவங்களை, உட்கார மறுத்து நீங்க வேற இன்னும் பயமுறுத்தாதீங்க. ரெண்டு பேரும் உட்கார்ந்துக்கோங்க."

அவர்கள் உட்கார்ந்ததும் ராம்குமாரைப் பார்த்துப் பேசினான்.

"இவங்க மிஸஸ் தாமஸோட இடத்தில் எனக்கு செக்ரெட்டரியா 'அப்பாய்ண்ட்' ஆகியிருக்காங்க. புதுசா ஸ்கூல்ல சேர்ந்த 'கிண்டர்கார்டன்' குழந்தை மாதிரி மிரண்டு போயிருக்காங்க. இன்னும் அழ ஆரம்பிக்கலை. அதுக்குள்ள நீங்க கூட்டிட்டுப் போய் கொஞ்சம் ஆசுவாசப்படுத்தி, நம்ப ஆபீஸ் வேலை எல்லாம் சொல்லிக்கொடுங்க... என்ன...?"

அப்போது தான் முதல் முறையாக அவளைத் திரும்பிப் [illegible]த்த ராம்குமார், அந்த அழகில் சட்டென்று உறைந்து போனான். '[illegible]றள ப்யூர், ஹௌ டியர்' என்று எம்.ஏ.யில் படித்த கவிதை வ[illegible]கள் இயல்பாய் மனத்துக்குள் ஓடின. தான் எப்போதோ பத்து வயதுப் பையனாக இருந்தபோது பார்த்த ஸிண்ட்ரில்லா- சினிமாவில் மறக்க முடியாமல் ஆழமாகப் பதிந்துபோன அந்த ஸிண்ட்ரில்லாவின் முகத்தை மீண்டும் இப்போது பார்க்கிற உணர்ச்சி ஏற்பட்டது.

"என்ன ராம்குமார்....?"

சடாரென்று திரும்பி "ஓகே சார்" என்று தலையாட்டி, அவளிடம் "வருகிறீர்களா...?" என்றான்.

எழுந்து நின்று ஒரு விநாடி தயங்கி என்ன சொல்வதென்று புரியாமல் தலை குனிந்து அவள் ராம்குமாரைப் பின்தொடர-

அவர்கள் இருவரும் கதவை நெருங்கினபோது, இவன் கூப்பிட்டான்.

"ஜஸ்ட் எ மினிட் மிஸ்; என் பெயர் கார்த்திகேயன். எல்லோரும் கூப்பிடறது கார்த்திக், இப் யு டோண்ட் மைண்ட்... நீங்க உங்க பெயரை மட்டுமாவது சொல்லிட்டுப் போங்களேன், பிளீஸ்..."

"ரா...தி...கா!"

நீண்ட நேரம் அந்தப் பெயர் காதுகளில் ரிங்கரித்து, மனத்திற்குள் சஞ்சரிக்க- தன்னை அறியாமலே அடிக்கடி அந்தப் பெயரைச் சொல்லிப் பார்த்துக்கொண்டான் கார்த்திக்...

## 3

"ஹலோ... நான் ராம்குமார் பேசறேன்..."

குப்பென்று ராதிகாவின் உடம்பில் ஒரு சூடு பரவிற்று. மனசுக்குள் பொங்கி வந்த பூரிப்பை அடக்கிக்கொள்ள முடியவில்லை. கண்களிலும், முகத்திலும் பளிச்சென்று எட்டிப் பார்த்தது. உதட்டில் புன்சிரிப்பாக ஓடிற்று. அவனோடு பழக ஆரம்பித்த இந்த ஒன்றறை மாதக் காலத்தில் அவளுக்குள் ஏற்பட்டிருந்த மாறுதல் இது. கண்ட உடனேயோ, பார்த்த மறு விநாடியில் இருந்தோ வந்துவிடவில்லை. 'அண்ணலும் நோக்கினான்; அவளும் நோக்கினாள்' என்கிற பாணியில் ஏற்பட்டுவிடவில்லை. அவனோடு பழகப் பழக அவனது மென்மையான குணம், நிதானமான பேச்சு, அன்பான சுபாவம் எல்லாம் புரியப் புரிய கொஞ்சம் · கொஞ்சமாக மொட்டு விட்டு இதழ் விரியத் தொடங்கி இருக்கிறது. இன்னமும் முற்றிலும் விரிந்து முழுப்பூவாகப் பரிணமிக்க ஆரம்பிக்கவில்லை. உள்ளுக்குள் மிகக் குளிர்ச்சியாய், இதமாய், இனிமையானதாய் பரவிக்கொண்டு வருவதை உணர்ந்திருந்தபோதிலும் எதையும் வெளிப்படுத்திக்கொள்ளவில்லை; வாய்விட்டுப் பேசிக்கொள்ளவில்லை.

முதல் நாளன்று கார்த்திகேயனின் அறையில் இருந்து- 'வருகிறீர்களா...?' என்று அழைத்துக்கொண்டு வந்து நடுவில் தடுக்கப்பட்டு இருவருக்குமாகப் பகிர்ந்து கொடுக்கப்பட்டிருந்த விஸ்தாரமான அந்தப் பெரிய அறையில் அவளது இருப்பிடத்தைக் காட்டி,

'இது உங்க 'காபின்'. அடுத்தது என்னுடையது. எப்போ, எது தெரியல்லைன்னாலும் நீங்க தாராளமாக வந்து என்கிட்ட கேட்கலாம்...' என்று நிதானமாய், மெதுவாய், மிகப்பிரியமாய் -



அதாவது 'இப்படிப் பிரியமாய், அன்பாய் மனிதர்களை நேசிப்பவனா இருப்பதுதான் என் இயல்பு' என்கிற மாதிரி இயற்கையான விதத்தி அவளுக்குத் தரவேண்டிய மரியாதையில் இருந்து கொஞ்சம்கூ விலகாமல், கண்ணியமான முறையில் ஒவ்வொன்றாகச் சொல்லித்த ஆரம்பித்தானே...

அந்த விநாடியில் அவளுக்குள் முதன் முதலாக ஆச்சரியமா உணர்வு ஒன்று பரவிற்று. நிஜமான மனிதனைச் சந்தித்திருக்கி நம்பிக்கை ஏற்பட்டது. இதுபோன்ற கம்பீரமான, கண்ணியமா இளைஞர்களைக் கதைகளிலும், கற்பனையாகவும்தா உருவகப்படுத்த முடியும் என்று நினைத்திருந்தவளுக்கு அப்ப ஒருவனை நேரில் சந்தித்தது அதிர்ச்சி கலந்த சந்தோஷத்தை தந்தது. அந்த அதிர்ச்சி கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து, சந்தோஷ அதிகரித்தது. அவனுக்குத் தன் மீது ஏற்பட்டிருந்த அக்கறையையு ஒருவித ஒட்டுதலோடு கூடிய பிரியத்தையும் போலவே அவளுக்கு அவன் மீது ஏற்படலாயிற்று. மெல்ல மெல்ல அவளும் பழக்கத்தி ஒரு சகஜத்தை வரவழைத்துக்கொள்ள முயன்றாள்.

ஆனால், அது அத்தனை சுலபமாக இல்லை. இத்தனை வருடங்களாக உள்ளுக்குள் போட்டு இறுக்கித் திணித்திருந் பயத்திற்கும், சோகத்திற்கும், வாழ்க்கை மருட்டிய மருட்டலுக்கு பின்னர்- சகஜமாகப் பேசுவது, சிரிப்பது என்பதெல்லாம் உடனே வந்துவிடவில்லை. தயக்கம் வெகு சீக்கிரத்தில் விடுவதாக இல்லை ஒடுங்கி, மருண்டு போன பார்வையில் எதிரில் வந்து நின்று-

"சார்... இதை எப்படிச் செய்யறதுன்னு புரியலை...சேர்மன் சீக்கிரமா பதில் எழுதி எடுத்துட்டு வரச்சொல்லி இருக்கார் கையெழுத்துப் போட்டுட்டுக் கிளம்பக் காத்துட்டிருக்கார்..."

அந்தப் பயம், தயக்கம், மிரட்சி, குரலிலும்- பல சமயங்களில் உடம்பிலும் எட்டிப் பார்க்கிற நடுக்கம்...

ராம்குமார் அவளைத் துல்லியமாகப் புரிந்துகொண்டான் வாழ்க்கை அவளை நிறையவே மருட்டி இருக்கிறது என்பதைத் தெரிந்துகொண்டான். இந்தச் சின்ன வயதிலேயே அவள் மிகப் பலமான அடிகளாக வாங்கியிருக்க வேண்டும் என்பதை ஊகித்துக்கொண்டான். அன்பான, ஆதரவான ஒரு சூழ்நிலையில் அவள் அரவணைத்து வளர்க்கப்படவில்லை என்பதை அவன் படித்திருந்த 'எம்.ஏ. சைக்காலஜி' உணர்த்த- அவள் மீதிருந்த பிடிப்பு அதிகமாயிற்று. இவளை- இவள் இருக்கிற சூழ்நிலையைப் புரிந்துகொண்டு உதவ வேண்டுமென்று தோன்றிற்று. இவள்

ஒடுங்குகிற கூடு எதுவானாலும் அதை உடைத்து வெளியில் அதைக் கொண்டுவர வேண்டும். ‘இதோ உனக்கு முன் எவ்வளவு ஆரோக்கியமான காற்று வீசுகிறது பார். இதைச் சுவாசி. இதயத்தையும், மூளையையும் புத்துணர்ச்சியால் நிரப்பிக்கொள்’ என்று சொல்ல வேண்டுமென்ற வேகம் ஏற்பட்டது. அதை செயல்படுத்துகிற முறையில் மெல்ல ‘ஆபீஸ்’ விஷயம் தவிரவும் பேச ஆரம்பித்தான். பதினொரு மணியளவில் டீ கொண்டு வருகிற பையனிடம் தன் கோப்பையோடு அவளுடையதையும் மேசை மீது வைக்கச் சொல்லி அவளைக் கூப்பிட்டு அனுப்புவான்.

“வாங்க ராதிகா... இங்கேயே உங்களுடைய டீயையும் வைக்கச் சொன்னேன். சாப்பிடுங்க.”

“எஸ் சார்...” என்று ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டரின் எதிரில் நிற்கிற காவலர் மாதிரியோ, ராணுவ அதிகாரியின் முன் நிற்கிற ஜவான் மாதிரியோ அவள் பதில் சொல்வதைக் கேட்டு மென்மையாகப் புன்னகை புரிவான்.

“நான் உங்க பாஸ் இல்ல ராதிகா. உங்களுடைய சக ஊழியர். அதையெல்லாம்விட உங்களோட சிநேகிதன்னு நினைச்சுக்கோங்கோ... இந்த ‘எஸ் சார்’னு ‘சல்யூட்’ அடிக்கிறதெல்லாம் சேர்மனுக்குச் செய்யணும். அது நியாயம், எனக்கு வேணாமே பிளீஸ்...”

அந்தத் தோழமை, எளிமை, ரணப்பட்டுப் போன காயத்தைப் பஞ்சால் ஒற்றுகிற இதம்...

தன் நன்றியைப் பார்வையில் தெரியப்படுத்தி– இயல்பாய்ப் போய்விட்ட பயஉணர்வு கலந்து மெல்லிய குரலில், “சரி...” என்றதும் அவளது முகமும், அதன் அழகும், குழந்தைத்தனம் மாறாத பார்வையும், மற்ற பெண்களிடம் காணப்படுகிற சாகசங்களும், போலித்தனம் ஒட்டாத இயல்பும்...

அவளை இழுத்துத் தன் தோள் மீது சரித்துக்கொள்ள வேண்டும் போலிருக்கும். ஆறுதலாக தலையை வருடிக்கொடுக்க வேண்டும் போலிருக்கும். மென்மையான அழகு முகத்தை நிமிர்த்தி, மானாக மருண்டு கிடக்கும் விழிகளில் முத்தமிட வேண்டும் போலிருக்கும். ‘என்ன கண்ணம்மா உனக்குக் கஷ்டம்...? எதுவானாலும் என்கிட்ட சொல்லு... நான் தீர்த்து வைக்கிறேன் கண்ணம்மா.... தீர்க்க முடியாத கஷ்டமானால் கூடப் பகிர்ந்துக்கறேன். காலமெல்லாம் உன் கஷ்டங்களைத் தாங்கிக்கிறவனா– உன்னுடன் சந்தோஷத்தைப் பகிர்ந்துக்கிறவனா...’

சந்தோஷம்...!



அப்படி ஒன்றை அவள் பார்த்திருப்பாளா? அனுபவித்திருப்பாளா? என்ற சந்தேகம் வர– அவன் இன்னமும் தவித்துப்போனான்.

தனக்கு இவள் மீது ஏற்பட்டிருக்கிற இதே உணர்வுகளும், காதலும் இவளுக்கும் தன் மீது ஏற்பட்டிருக்கிற பட்சத்தில்–

செல்லமாய், அன்பாய், காதலாய், பிரியமாய் அவளை தன்னோடு சேர்த்து அணைத்து முகத்தோடு முகம் வைத்துக் கொஞ்சி... ‘சிரி கண்ணம்மா... இனிமே எப்பவும் நீ சிரிச்சுட்டே இருக்கணும். நான் உயிரோடு இருக்கிற வரை இந்த முகத்துல சிரிப்பையும், சந்தோஷத்தையும் தவிர வேற எதையும் பார்க்கக் கூடாது... என்ன...? உம்... சொல்லு கண்ணம்மா...’

‘ஓ... ராதிகா... அதெல்லாம் உனக்குப் புரிகிறதா...? என் உணர்வுகள் தெரிகிறதா...? என்னை உனக்குக் கொடுத்து, உன்னை என்னோடு சேர்த்து– உன்னில் கரைந்து, நீயே நானாய்– நானே நீயாய்– அர்த்தநாரீஸ்வரனாய்...’

அவன் உள்ளுக்குள் அவளுக்காக உருகி உருகித் தவிக்க–

அவள், “என்ன யோசனை சார். டீ ஆறியே போச்சு...” என்றதும், சட்டென்று நினைவுகளில் இருந்து இறங்கி வந்து சொன்னான்.

“பிளீஸ் ராதிகா... இனிமே எனக்கு தயவுசெய்து சார் போடாதீங்களேன். உங்க சார் எனக்கு என்னவோ போலிருக்கு. ரொம்ப அந்நியமாத் தள்ளி நிறுத்தற மாதிரி தோணுது.”

“சரி போடலை. அதே மாதிரி நீங்களும் என்னை வாங்க... போங்கன்னு அநாவசிய மரியாதை தந்து கூப்பிடாதீங்களேன். அது மட்டும் எனக்கு என்னவோ போலிருக்காதா...?”

“சரி ராதிகா” என்றானே–

அன்று முதல் மொட்டு அரும்பிற்று. அவனாக வற்புறுத்தி ராம்குமார் என்று பெயர் சொல்லிக் கூப்பிட வைத்த அன்று இரண்டாவது இதழ்– கம்பெனி காரில் ராம்குமாருடன் அவளையும் சேர்த்து அழைத்துக்கொண்டு வர கார்த்திகேயன் உத்தரவிட– தினமும் அவனுடன் ஒன்றாகப் பயணித்த சந்தோஷத்தில் அடுத்த இதழ்– கார்த்திகேயனின் காரியதரிசி என்பதன் காரணமாய் சில அவசர விவரங்களைக் கூப்பிட்டுக் கேட்கிற வசதிக்காக அவளுடைய வீட்டிலும் தொலைபேசித் தொடர்பு இணைக்கப்பட்ட அன்று முதல் முதலாக ராம்குமாரின் நம்பரைச் சுழற்றி அவனுடன் பேசியதில் பாதிப்பூவாய் விரிந்து முற்றிலும் மலராமல் காத்திருக்க–

இப்போது அவன் தொலைபேசியில் அழைத்ததும் சட்டென்று





ஒவ்வொன்றாக நினைவிற்கு வர– இந்தச் சுகமான அனுபவங்களில் லயித்துப் போய் அவள் மவுனமாக இருக்க–

அந்தச் சின்ன மவுனமான இடைவெளியைக் கூடத் தாங்க முயலாதவனாக லேசான பதற்றம் நிரம்பிய குரலில் கேட்டான், அவன்:

"என்ன ராதி... பதிலே இல்லை? வாட்ஸ் ராங்...?"

சட்டென்று தன்னுணர்வுக்கு வந்தவள், உடலைச் சிலிர்த்துக்கொண்டு சொன்னாள்.

"ஓ... ஒண்ணுமில்ல... சொல்லுங்க...?"

"என்னம்மா...? எதுவானாலும் சொல்லும்மா...?"

"நிஜமா ஒண்ணுமில்ல..."

"அப்போ ஏன் இத்தனை நேரம் பேசாமலிருந்தே...?"

"உண்மையான காரணத்தைச் சொல்லட்டுமா...?"

"உனக்குப் பொய் கூடச் சொல்லத் தெரியுமா என்ன...?"

அந்த பதிலில் ஓர் விநாடி கண்களை மூடி உணர்ச்சி வசப்பட்டாள். அதை உணராத அவன் மீண்டும் கேட்டான்.

"என்ன, சொல்லு ராதிகா..."

"இல்ல... முதன் முதல்ல நாம சந்திச்சதிலேர்ந்து இன்னி வரைக்கும் நினைச்சுப் பார்த்தேன்."

"ஓ..." என்று அழகாய்ச் சிரித்தான் அவன்.

பின்னர், "இன்னிக்கு ஆபீஸ் லீவாச்சே...? சேர்மன் உன்னை வரச் சொல்லி இருக்காரே... மறந்து போயிடப் போறியேன்னு கூப்பிட்டேன்..."

"இல்ல, மறக்கலை. பதினொரு மணிக்குத்தான் வரச் சொல்லி இருக்கார். 'டிக்டேஷன்ஸ்' இருக்குன்னார்..."

"எப்படிப் போகப் போற...?"

"ம்... இன்னிக்கு லீவுன்றதால டிரைவர் வரமாட்டாரில்ல. அதனால ஆட்டோ பிடிச்சுப் போயிடலாம்னு–"

அவன் அவளை முடிக்கவிடவில்லை.

"நோ, நோ... ஆட்டோவெல்லாம் வேணாம். கார் இங்கதான் இருக்கு. நான் எடுத்துட்டு வந்து கூட்டிட்டு போறேன்..."

"எனக்காகவா வரப் போறீங்க...?"

'உனக்காக எது வேணும்னாலும் செய்யக் காத்துட்டிருக்கிற போது, இது என்ன பெரிய விஷயம்...?' என்று சொல்லத் துடித்த மனசைக்

கட்டுப்படுத்திக்கொண்டு தன் நிதானத்தைக் கைவிடாதவனாகப் பேசினான்.

"சரியாகப் பத்தரை மணிக்கு வரேன். ரெடியா இரு... என்ன...?"

"ஓ.கே..."

பதினொரு மணியளவில் கார்த்திகேயன் அவளை இனிமையான புன்னகையில் வரவேற்றான்.

"உட்காருங்க ராதிகா..." என்றவன், ஒரு விநாடி அவளைக் கண்ணிமைக்காமல் பார்த்து– "யு லுக் வெரி பியூட்டிபுல் டுடே..." என்றான்.

அவள் மெல்லத் தலை குனிந்துகொண்டாள். "தாங்க்ஸ் சார்..." – சொல்வதற்குள் மனசு படபடத்து, முகத்தில் முத்து முத்தாக வியர்வை அரும்பத் தொடங்கிற்று.

அதைக் கவனித்த கார்த்திகேயன் சிரித்துக்கொண்டே கேட்டான்.

"வேலைல சேர்ந்து கிட்டத்தட்ட ரெண்டு மாசமாக போறது. இன்னுமா உனக்கு ஆபீஸ் பயம் போகலை...?"

அவள் பதில் சொல்லாதிருக்க– அவன் பதில் வருகிற வரை விடப்போவதில்லை என்கிற மாதிரி மீண்டும் கேட்டான்.

"ம்... சொல்லு. அப்படி என்ன பயம் உனக்கு இந்த ஆபீஸ்ல..."?

"வந்து... வந்து... ஆபீஸ் பயமில்ல சார். ஆபீஸ் பழகிப் போச்சு..."

"அப்படின்னா பயம் உன்கிட்ட்தான்டான்னு சொல்ற இல்ல...?

"ஐயய்யோ... நான் அப்படியெல்லாம் சொல்லல சார்..."

"பின்ன ஏன் இந்த ரூமுக்குள் வர்றபோதே தடுமாறுறே... என்கிட்ட பேச ஆரம்பிச்சா வேர்த்துக் கொட்டுதே... நான் என்ன அந்த அளவுக்கா உன்னைப் பயமுறுத்தறேன்...?"

"ஐயோ, இல்ல சார்...?"

"இல்லன்னு சொல்லிட்டாப் போதுமா...? ஜஸ்ட் டிரீட் மீ அஸ் யுவர் பிரெண்ட் ராதிகா..."

அவள் 'சரி' என்று தலையாட்டினாள்.

"ம்ஹூம், எனக்கு இந்த மவுன பாஷையெல்லாம் பிடிக்காது



வாயைத் திறந்து சொல்லணும்..."

"சரி சார்."

"தட்ஸ் குட், இப்பா 'டிக்டேட்' பண்ணட்டுமா? 'நோட்ஸ்' எடுத்துக்கறியா...?"

"ஓ.கே சார்."

கிட்டத்தட்ட ஒன்றரை மணி நேரமாயிற்று. மடமட வென்று ஏழெட்டுக் கடிதங்களைச் சொல்லி முடித்தான். அவள் காட்டிய கோப்புகளின் விவரம் கேட்டுக் கையெழுத்துப் போட்டான். பின்னர்,

"நாளைக்கு எனக்கு என்னென்ன 'புரோக்கிராம்'னு கொஞ்சம் சொல்லிடறயா?" என்று கேட்டான்.

"எஸ் சார்..." என்று அவசர அவசரமாக 'எங்கேஜ்மெண்ட் டைரி'யைப் புரட்டினாள்.

"காலைல பத்து மணிக்கு 'போர்டு மீட்டிங்' சார், பன்னிரெண்டு மணிக்கு ஜப்பான்லேருந்து ஒரு 'குரூப் ஆப் டெலிகேஷன்ஸ்' வராங்க. அவங்க கூட 'டிஸ்கஷன்'– அண்ட் 'லஞ்ச்'. மூணு மணிக்கு கவர்னர் 'அப்பாய்ன்ட்மெண்ட்' தந்திருக்கிறார். புதுத் தொழிற்சாலை தொடங்கறது சம்பந்தமா அவர் கூடப் பேசப் போறீங்க. ஆறு மணிக்கு 'லயன்ஸ் கிளப்' கூட்டத்துல நீங்க 'சீப்கெஸ்ட்'. அங்கேயே டின்னர். மறுநாள் காலைல, முதல் விமானத்துல டெல்லி போய்– அன்னிக்கு ராத்திரியே அமெரிக்கா போறீங்க சார்..."

மூச்சுவிடாமல் அவள் ஒப்பித்ததைக் கேட்டு ஒரு சலிப்பு ஓடும் குரலில் கேட்டான்:

"தென்...ஐயம் ரிடர்னிங் ஒன்லி ஆப்டர் பிப்டின் டேஸ்... இல்ல...?"

"எஸ் சார்..."

அவன் முகவாயைத் தடவியவாறு சில விநாடிகள் மவுனமாக யோசித்தான். பின்னர், "நான் உன்கிட்ட கொஞ்சம் தனியாப் பேசணும் ராதிகா..." என்றான்.

என்ன பேசப் போகிறானோ? என்ற பயத்தில் "சொல்லுங்க சார்" என்றாள்.

மீண்டும் ஒரு விநாடி தயங்கி, தீவிரமாய் யோசித்து ஒரு முடிவிற்கு வந்தவனாகச் சொன்னான்.

"ம் ஹூம்... இப்ப வேணாம், இப்படி அவசரமாக நாலு வார்த்தைல சொல்ற விஷயமில்ல, அது. அமெரிக்கா போயிட்டு வந்தப்புறம்

சொல்றேன். அது ரகசியம்" என்று சிரித்தான்.

சட்டென்று ஒரு விடுதலை உணர்ச்சி ஏற்பட்ட மாதிரி இருக்க, ால் விநாடிக்கு பின் கேட்டாள்.

"அப்ப நான் போகலாமா சார்...?"

"ஓ கே ... நான் திரும்பி வந்தப்புறம் பார்க்கலாம்..."

"சரி சார்..."

"இப்பவே வீட்டுக்குப் போகணுமா ராதிகா...?"– வேலையெல்லாம் முடித்துவிட்டு காரில் திரும்பிக் கொண்டிருந்தபோது ராதிகாவிடம் கேட்டான் ராம்குமார்.

"அப்படி ஒண்ணும் அவசரமில்ல. ஏன் கேட்க்றீங்க...?"

"இல்ல... ரொம்ப நாளா உன்கிட்ட ஒரு விஷயம் சொல்லணும்னு தாணுது. அதை இப்போ மனசுவிட்டு சொல்லிடலாம்னு கட்கறேன்..."

"சொல்லுங்களேன்..."

"இங்கேயா...? இப்படி கார் ஓட்டிட்டே வா..."

"சரி, எங்க வீட்டுக்குப் போய்ப் பேசலாம்..."

"உங்க வீட்டுக்கா...? ம்ஹீம் ... அங்க உங்கம்மா, பாட்டி, சிவா, ாமிநாதன்னு எல்லாரும் இருப்பாங்க..."

"பின்ன எங்க போறது...?"

"என் வீட்டுக்கு..."

"அங்க மட்டும் யாரும் இருக்கமா்ட்டாங்களா?"

"யார் இருக்கா எனக்கு...?"

"ஏன்... அம்மா, அப்பா, அண்ணன், தம்பி, அக்கா, தங்கைன்னு..."

"ம்ஹூம். அப்படியெல்லாம் யாரும் கிடையாது, எனக்கு..."

"அப்படின்னா...?"

"என்னோட மூணு வயசுல எங்கம்மா செத்துப் போயிட்டா.. அப்பா ரெண்டாம் கல்யாணம் பண்ணிட்டு சித்திக்கூட இருந்தார். த்து வயசுலேர்ந்து ஆஸ்டல் வாழ்க்கை. பணம் மட்டும் அப்பாகிட்டே இருந்து வரும். அதுவும் நான் சம்பாதிக்க ஆரம்பிச்சப்புறம் நின்னு போச்சு. ரெண்டு வருஷத்துக்கு முன்னால அந்த அப்பாவும் போனப்புறம், இருந்த ஒரே பிடிப்பும் அறுந்து இந்தப் பட்டம் தனியாகவே பறந்துட்டிருக்கு..."

அதைக் கேட்க அவளுக்குக் கஷ்டமாக இருந்தது. கிட்டத்தட்ட தன்னைப் போலவே அவன் கஷ்டப்படுவதாகத் தோன்றியது. தன்னுடைய பணக்கஷ்டம் அவனுக்கு இல்லாமல் இருந்திருக்கலாம். ஆனால் அன்பிற்கு, ஆதரவிற்கு, பகிர்ந்து கொள்ளக்கூடிய் துணைக்கு, உருகி ஒன்றாகக்கூடிய ஒரு நெஞ்சுக்கு ஏங்குகிற ஏக்கத்திற்கு...



அவனுடைய வீடு வருகிற வரை இருவரும் அமைதியாகவே இருந்தனர். சின்னதாய், கச்சிதமாய் மூன்று படுக்கையறைகள் கொண்ட தனி வீடு. கம்பெனிதான் வாடகைக் கொடுக்கிறது. சமையற்காரரைத் தவிர வேறு யாருமில்லை. ராம்குமார் காப்பி தரச் சொல்லி– குடித்து முடித்த பின்– மாடிக்கு அழைத்துப் போனான். படுக்கை அறை ஓரமாகப் போடப்பட்டிருந்த கூடை நாற்காலிகளை இழுத்துப் போட்டு உட்கார்ந்த பின்னர் சிறிதுநேரம் அவுன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். அந்தப் பார்வையின் ஆகர்ஷண சக்தியைத் தாங்காமல் தலையை கவிழ்ந்துகொண்டாள் அவள்.

"என்ன அப்படிப் பார்க்கறீங்க...?"

"இல்ல... நான் ஒண்ணு சொல்லுவேன். நீ அதை அப்படியே திருப்பிச் சொல்லுவியா ராதிகா..."

இவள் சற்றுத் தயங்கி அவனை ஏறிட, அவன் வருத்தம் இழையோடும் குரலில் கேட்டான்.

"ஏன் ராதிகா... நான் என்ன சொல்லிடுவேனோன்னு பயமா இருக்கா...?"

"ஐயய்யோ... அப்படியெல்லாம் இல்ல..."

"பின்ன ஏன் நான் கேட்டதுக்கு உடனே பதில் வரலை?...?"

அவள் சட்டென்று புன்னகை ஓட, "நீங்க சொல்றதை நான் அப்படியே திருப்பிச் சொல்லணும். அவ்வளவுதானே... ஓ.கே... எதைச் சொன்னாலும் திருப்பி சொல்றேன்..."

"நிச்சயமா...?"

"சத்தியமா..."

"ஐ லவ் யு ராதிகா..."– உணர்ச்சிபூர்வமாய் கரகரத்த குரலில் அவன் சொல்லி முடித்ததும், சில விநாடிகள் அவள் அவனை அப்படியே பார்த்துக்கொண்டிருக்க–

அந்த மவுனத்தில் துடித்துப் போய் கேட்டான் அவன்:

"ஏன் ராதிகா, சொல்லமாட்டியா...?"

"சொல்லமாட்டேனாவா...? ராம்குமார், ராம்குமார்னு தினமும் மனசுக்குள்ள ஓராயிரம் தரம் சொல்லிட்டிருக்கேன்..."

சொல்கிறபோதே குரல் தடுமாறி, கண்கள் கலங்கி, கன்னங்களில் நீர் வழிய–

அவன் எழுந்து போய் அவளை நெஞ்சோடு சேர்த்து அணைத்துக்கொண்டு கண்ணீரைத் துடைத்து, தலையை வருடி, "ஓ... நோ..."என்று உருகினான்.

"இனிமேல் இந்தக் கண்ணுல நான் தண்ணியைப் பார்க்கக் கூடாது கண்ணம்மா. இந்த முகத்துல சிரிப்பைத் தவிர வேற எதையும் பார்க்கக் கூடாது. இனிமே உன் கஷ்டம் எல்லாத்தையும் என்கிட்ட விட்டுடு. அம்மா, பாட்டி, சிவா, சாமிநாதன் எல்லார் பொறுப்பும் என்னுடையது. அதெல்லாத்தையும் நான் கவனிச்சுக்கறேன்... என்னை மட்டும் நீ கவனிச்சுக்கோ... என்ன கண்ணம்மா...?"

அவன் மார்பில் முகத்தைப் புதைத்துக்கொண்டவள் அதுவரை அனுபவித்தே இராத அன்பில், பிரேமையில், பாசத்தோடு கூடிய பகிர்தலில் , நீயே நான்– நானே நீ என்றான ஐக்கியத்தில் அத்தனை நாட்களும் பட்ட கஷ்டங்களெல்லாம் அடித்துக்கொண்டு போய்விட வேண்டும் என்கிற மாதிரி! "ராம்குமார்... ராம்குமார்..." என்று கண்ணீர்விட்டுக் கதற–

அழுது ஓயட்டுமென்று அவளை அப்படியே மென்மையாய் அணைத்துக்கொண்டவன், " நான் இருக்கிறேன் கண்ணம்மா... இனிமே எல்லாமாக நான் இருக்கிறேன்..." என்பதைத் திரும்பத் திரும்ப அவள் மனத்தில் பதிகிற மாதிரி காதருகில் முணுமுணுத்துக் கன்னங்களில் உதடுகளை அழுத்திக்கொண்டான்.

# 4

"அக்கா... சாமிநாதனும், நானும் சைக்கிள் எடுத்து விட்டுட்டிருந்தப்ப சாமிநாதன் சைக்கிளைப் போட்டுட்டு கீழ விழுந்துட்டான்க்கா... கால் மேல் சைக்கிள் விழுந்ததுல பாதமெல்லாம் புசுபுசுன்னு வீங்கிப் போச்சுக்கா... வலிக்கிறதுன்னு ஒரேயடியா அழறான்க்கா... எனக்கு என்ன பண்றதுன்னு தெரியலைக்கா...?"

""சாமிநாதன் எங்கே இப்போ...?"

"வீட்லதாங்க்கா இருக்கான்..."

"இதோ நான் கிளம்பி வரேன். அதுவரை நீ சாமிநாதன் கூட இரு. எங்கேயும் போயிடாதே... என்ன?"

"சரிக்கா..."

போனை வைத்துவிட்டு ராம்குமாரிடம் வந்தாள் ராதிகா. அவளது முகத்திலிருந்த அவசரத்தையும், படபடப்பையும், பதற்றத்தையும் பார்த்து ராம்குமார் கேட்டான்.

"என்ன ராதி...?"

"நான் உடனே வீட்டுக்குக் கிளம்பியாகணும் ராம்குமார்..."

"என்ன விஷயம்...?"

சொன்னதும் அவன் அவளைப் போல் பதற்றப்படவில்லை. படபடக்கவில்லை. ஒரு விநாடி யோசித்தான். அந்த நிதானம் அவளுக்குத் தாங்கவில்லை.

"பியூனை அனுப்பி எனக்கு ஒரு ஆட்டோ கொண்டுவரச் சொல்லுங்களேன், பிளீஸ்..."

"அவசரப்படாதே... இரு..." என்றவன்– இண்டர்காமில் ஷீலாவையும், சடகோபனையும் கூப்பிட்டு ஆபீஸ் விஷயமாகச் சிலவற்றைச் சொன்னான். பின்னர் தன் மேசை டிராயர், அவளது மேசை டிராயர் இரண்டையும் பூட்டி சாவிக்கொத்தை எடுத்துக்கொண்டு, "வா போகலாம்..." என்று அவளுடன் புறப்பட்டான்.

"நீங்களும் வரீங்களா...?"

"பின்னே... உன்னை மட்டும் தனியா அனுப்பிடுவேன்னா நினைச்சே...?"

அன்று அவர்களுக்கென்று தனியாகக் கொடுக்கப்பட்டிருந்த கார் சர்வீசுக்குப் போயிருந்த காரணத்தால், அவனே ஆட்டோ பிடித்தான். இருவரும் வீட்டிற்கு வந்தபோது சாமிநாதன் கூடத்திலேயே படுத்திருந்தான். வலது கால் பாதம் புசுபுசுவென்று வீங்கிக் கிடக்க– சின்னக்குழந்தை மாதிரி தேம்பினான். பாட்டி மருந்து போட்டு, வெந்நீரில் உருவிவிட்டதைச் சொன்னான்.

"வெந்நீர் பரவாயில்ல பாட்டி. ஆனா, உருவி இருக்கக்கூடாது பாட்டி...." என்ற ராம்குமார், சாமிநாதனை ஒரு குழந்தையைத் தூக்குகிற மாதிரி அப்படியே அலாக்காகத் தூக்க, " ஐய... நான் நடந்து வரேன் மாமா..." என்று அத்தனை அழுகைக்கிடையிலும் வெட்கப்பட்டான் சாமிநாதன்.

"ம்ஹூம், நடக்கக்கூடாது சாமி... இது 'பிராக்சரா' இருந்தால் ரொம்ப வலிக்கும். பேசாமல் வா..." என்றவன், ராதிகாவை உடன்

அழைத்துக்கொண்டான்.

அலுங்காமல் சாமிநாதனை ஆட்டோவில் உட்கார வைத்து, நேராக 'எக்ஸ்ரே' எடுக்கும் இடத்திற்கு அழைத்துப் போனான். வீங்கின பாதத்தை 'எக்ஸ்ரே' எடுக்க வைத்து, காத்திருந்து, 'எக்ஸ்ரே' படத்தை வாங்கிக்கொண்டு அபிராமபுரத்தில் இருந்த தனக்கு மிகவும் தெரிந்த டாக்டரிடம் அழைத்துப் போனான்.

பாதத்தின் ஓரிடத்தில் சின்ன எலும்பு முறிவு இருப்பதைக் காட்டிய டாக்டர், அவனிடம் 'பிளாஸ்டர்' எழுதிக் கொடுத்து வாங்கி வரச் சொன்னார். நடந்தே போய் அருகிலிருந்த மருந்துக் கடையில் 'பிளாஸ்டர்' வாங்கி வந்தான் ராம்குமார். அடுத்த கால் மணி நேரத்தில் சாமிநாதனின் முழங்காலில் இருந்து பாத நுனி வரை 'பிளாஸ்டர்' போட்ட பின் டாக்டர் சொன்னார்:

"இன்னும் ரெண்டு வாரத்துக்கு 'பிளாஸ்டர்' இருக்கணும் ராம்குமார். தண்ணிபடாமல், குளிக்கிறபோது 'பிளாஸ்டிக்' பை கட்டி, காலைத் தூக்கி வைச்சுக் குளிக்கச் சொல்லுங்க. மற்றபடி ஒண்ணுமில்லே. இன்னும் பதினைந்தே நாள்லே சரியாப் போயிடும்" என்றார்.

"ஸ்கூலுக்குப் போகலாமா டாக்டர்...?" ராம்குமார்தான் கேட்டான்.

"ஓ.எஸ், நோ பிராப்ளம்" என்ற டாக்டரின் பார்வை அவர்களுடன் வந்திருந்த ராதிகாவின் மீது பதிந்ததும், " என்ன ராம்குமார். எங்களையெல்லாம் கல்யாணத்துக்குக் கூப்பிடவே இல்லை...?" என்றார்.

ராதிகாவின் முகம் குப்பென்று சிவந்தது. உடம்பில் உஷ்ண ஓடிற்று. தலையைக் குனிந்து கீழ் உதட்டைக் கடித்துக்கொள்ள ராம்குமார் தன் வழக்கமான புன்னகையுடன் சொன்னான்.

"கல்யாணம் நிச்சயமாகிப் பத்திரிகை அடிச்ச உடனே முத அழைப்பிதழ் உங்களுக்குத்தான் டாக்டர்..."

"ஓ..." என்று சந்தோஷமாகச் சிரித்தார் டாக்டர்.

"யு நோ மிஸ், உங்க ரெண்டு பேர்ல யார் ரொம்ப 'லக்கி'ன்னு சொல்லத் தெரியலை எனக்கு. ஆனா, ரெண்டு பேருமே 'லக்கி'ய இருக்கணும். அதனால்தான் இப்படிப் பொருத்தம் பார்த்து கடவுள் ஒண்ணு சேர்த்திருக்கு... ஆல் தி பெஸ்ட்... ஆமாம், பைய பாரு...?"

"[illegible] தம்பி டாக்டர்..."

"மச்சினன்னு சொல்லேன்யா..." என்று சிரித்தார். முந்நூறு ரூபாய் பீஸும் வாங்கி கொண்டார்.

"ஓ...கே... விஸ் யு ஆல் சக்ஸஸ்..." என்று வாழ்த்தி அனுப்பினார்.

வீட்டிற்கு வந்து, தரையில் பாய் விரித்து சாமிநாதனைப் படுக்க வைத்த ராம்குமாரின் கழுத்தைக் கட்டிக்கொண்டான் அவன்.

"என்ன சாமி...?"

" நீங்க போகாதீங்க மாமா... இன்னிக்கு என் கூடவே இருங்க மாமா..."

"ஏன் சாமி... அக்கா, பாட்டி, அம்மா எல்லாரும் இருக்காங்க இல்ல...?"

"ம் ஹூம், எனக்கு நீங்கதான் வேணும். இருங்க மாமா. பிளீஸ் மாமா..."

அவனுக்கும், ராதிகாவிற்கும் காப்பி கலந்து கொண்டுவந்த பாட்டி, அதைக் கேட்டுக்கொண்டே உள்ளே நுழைந்தவளாகச் சொன்னாள்.

"குழந்தை ஆசைப்படறானில்ல...? இருந்துட்டுப் போறது..."

பாட்டி அவனிடம் நேரிடையாகப் பேசினதில்லை. பொதுப்படையாகத்தான் சொல்வாள். அந்த மாதிரியே அப்போதும் சொன்னதும், ராம்குமார் காப்பி தம்ளரை வாங்கிக்கொண்டே பாட்டியைப் பார்த்தான்.

"பாட்டி சொல்லிட்டா சரி... நீங்க என்ன சொல்லுவீங்களோ... பார்க்கிறவங்க தப்பா நினைச்சுக்குவாங்களோன்னுதான் சாமி கேட்டப்ப தயங்கினேன்."

"நல்லா இருக்கு..." என்று தலையிலிருந்து விலகிய நார் மடியை இழுத்து விட்டுக்கொண்டாள் பாட்டி.

"இதுல யார் என்ன சொல்ல இருக்கு...? யார் என்ன நினைச்சுட்டாத்தான் என்ன? நாளைக்கு மாப்பிள்ளையாகப் போற உங்களை இன்னிக்கே தங்கச் சொல்லிக் கேட்கிறான் குழந்தை. அதுல என்ன தப்பு...? இப்படி ஊர் வாய்க்குப் பயந்ததும், அடிபட்டதும் என் பொண்ணோட போகட்டும். ராதிகாவாவது உங்களோடு சந்தோஷமா சிரிச்சுட்டிருக்கணும்னு நான் தினமும் சாமியை வேண்டிட்டிருக்கேன்.

இந்த மாதிரி ஒரு நல்ல பிள்ளையை எங்களுக்காகவே மாப்பிள்ளையா அனுப்பி இந்த வீட்டில் வெளிச்சமும், காற்றும்

வர வழி செஞ்சி இருக்கியோப்பான்னு உள்ளுக்குள்ள பிரார்த்தனை பண்ணிட்டிருக்கேன். மனசு ஒத்துப்போனப்புறம் வேறே என்ன வேணும்...? வேற எது இருந்தும் மனசு ஒத்துப்போகலைன்னா என்ன பிரயோசனம்...? இந்த அளவு அந்நியோன்னியமா, ஆதரவா நீங்க ரெண்டு பேரும் பழகறதைப் பார்க்கிறப்போ மனசு எவ்வளவு நெறைஞ்சுப் போறது தெரியுமா? இதுக்காக நாலு பேருக்குப் பயப்பட முடியுமா? இல்ல பேச வராங்களே அந்த நாலு பேர் பேசற அந்த ஒ காரியத்தைத் தவிர வேற எந்த நல்ல காரியம் செய்யப் போறாங் சொல்லுங்க...?"

ஒரு விநாடி ராம்குமாருக்கு மனசு சிலிர்த்தது. அந்தச் சிலிர்ப் உடம்பு முழுதும் ஓடிற்று. 'என்ன மனுஷி இவள்!' என் ஆச்சரியமாய்ப் பார்க்க-

பாட்டி சற்றுத் தயங்கி, சொல்லலாமா... வேண்டாம என்று யோசித்துப் பின் சொல்ல முடிவு செய்துவிட்டவளாக தொடர்ந்தாள்:

"நானே உங்ககிட்ட இதைப் பத்திப் பேசணும்னு நினைச்சுட்டிருந்தேன். உங்களுக்கும் சொந்தம்னு சொல்லிக் யாருமில்ல. எங்களுக்கு இருந்தும் இல்லாதவங்களா ஆயிட்டாங் இப்போ உங்களுக்கு நாங்க- எங்களுக்கு நீங்கன்னு ஆயிட்டப்புற பெரிசா தடபுடல் பண்ணாம, ஆபீஸ்காரங்களை மட்டும் கூப்பிட் ஏதாவது ஒரு கோவில்ல கல்யாணத்தை முடிச்சுட்டு- இந்த வீட்டோ வந்து சேர்ந்துடுங்களேன் மாப்பிள்ளே... அதுக்கு சீக்கிரம் நல் நாளா ஒண்ணு பாருங்களேன்..."

அவனுக்குக் கண்ணிமைகள் நனைந்தன. பாட்டியின் பெரி மனத்திற்குக் கைகூப்பத் தோன்றிற்று. நிற்க வைத்து சாஷ்டாங்கம நமஸ்காரம் பண்ண வேண்டும் போலிருந்தது. எது பேசவும் வா எழாமல் குரல் அடைத்துக்கொண்டது.

அவனது மவுனம் என்னவோ போலிருக்க- பாட்டி சங்கடப்பட் போனாள்.

"ஏன் மாப்பிள்ளை... நான் ஏதாவது அத்துமீற பேசிட்டேனா...?"

"ஓ... பாட்டி... என்ன கேக்கறீங்க...? இப்படிக்கூட ஒரு மனசான் நான் உள்ளுக்குள்ளே மாய்ஞ்சுப் போயிட்டிருக்கேன். நீங்க இப்ப சொல்றீங்களே... எனக்கு மட்டும் யாரு இருக்கா கல்யாண ஏற்பா

அப்போதுதான் பாட்டி முதல் முறையாகக் கண் கலங்கினாள்.

"கல்யாண காரியம், நல்ல விஷயம். இந்தக் குடும்பத்துல முதல் முதலா ஒரு மங்களகரமான காரியம் நடக்கப் போறதுக்கு நான். எப்படியப்பா முன்னே நிக்க முடியும்...? அதுக்கெல்லாம் லாயக்கில்லாமத்தான் இப்படி முக்காடு போட்டு வச்சுருக்கே தெய்வம்... இல்லைன்னால் இத்தனை நாள் பேசாமல் இருந்திருப்பேனாப்பா...? சீக்கிரம் செய்திருக்கமாட்டேனா...? அவ செய்யலாம், பொண்ணுக்கு அம்மான்னு பேரு. தன் புலம்பலே பெரிசுன்னு மூலைல அடைஞ்சு கிடக்கறா... பொண்ணுக்கு இப்படி ஒரு நல்ல வாழ்க்கை வந்திருக்கே. நம்ம கஷ்டத்தைத் துடைத்துப் போட்டுட்டு எழுந்திருந்து செய்வோம்னு தோணக்கூட இல்லை பாருப்பா..."

"பாட்டி... அவங்கதான் மனநிலையே சரியில்லாம இருக்காங்களே... அவங்களை நொந்து என்ன பிரயோஜனம்...? ராதிகாவோட அப்பா ஓடிப் போன துக்கத்தைவிட, அப்படி ஒரு கடிதம் எழுதி எல்லாருக்கும் போட்டுட்டுப் போனதுதான் அவங்களுக்கு பெரிய அதிர்ச்சியா விழுந்திருக்கு. இந்த மாதிரி மனநிலையையே மாத்தி இருக்கு..."

"சரிப்பா... இந்தக் கல்யாணத்தைப் பண்ணிவைன்னு நான் என் பிள்ளையையோ, மருமகளையோ கேட்கலாம்னா அதுக்கு மனசு இடம் கொடுக்கலையே...?"

"வேணாம் பாட்டி... அந்த மாதிரி நீங்க யார்கிட்டேயும் போய் நிக்க வேணாம். எங்க கம்பெனி சேர்மன் வரட்டும். அவர் அமெரிக்காவிலிருந்து பதினைஞ்சு நாள்ல திரும்பிடுவார்னு நினைச்சேன். ஆனா, இப்போ லண்டன்,ஜெர்மனியெல்லாம் போயிட்டு வர ஒரு மாசம் ஆகும் போல இருக்கு. அவர் வரட்டும். அவர்கிட்ட சொன்னால் அவரே முன்னே நின்னு எங்க கல்யாணத்தை நடத்தி வச்சிடுவார் பாட்டி. அவ்வளவு பெரிய கோடீஸ்வரன், ஆனாலும் ரொம்ப நல்ல மனசு. அவர் வந்துவிட்டால் யார் தயவும் வேணாம் நமக்கு. அதனால் அவர் வரட்டுமேன்னு காத்துட்டிருக்கேன்..."

அன்றைக்கு ராம்குமார் அங்கு தங்கினான். அதுபோல் அடிக்கடி தங்குவதும் வழக்கமாயிற்று. தினம் சாயந்திரம் ராதிகாவை வீட்டில் இறக்கிவிட்டு, உடனே போய்விடமாட்டான். உள்ளே வந்து டிபன்-

"இந்தக் கணக்கு எப்படின்னு புரியலே மாமா... கொஞ்சம் சொல்லித் தரீங்களா...?" என்று வரும் சிவாவிற்குக் கணக்கு சொல்லித் தருவான். சாமிநாதனுக்கு இந்தி சரியாக வராது என்பதால் வற்புறுத்திப் படிக்க வைப்பான்.

"பாட்டி... கண் டாக்டர்கிட்ட போகணும்னு சொன்னீங்களே... டாக்டர் ரவீந்திரன்னு ஒரு நல்ல டாக்டர். இன்னிக்கு 'அப்பாய்ன்ட்மெண்ட்' வாங்கிட்டு வந்திருக்கேன். கிளம்புங்க..." என்று அவசரப்படுத்துவான்.

பாட்டியின் வலது கண்ணில் 'காட்ராக்ட்' முற்றிவிட்டதென்றும், உடனே 'ஆபரேஷன்' செய்து 'லென்ஸ்' வைப்பது நல்லது என்றும் டாக்டர் அபிப்பிராயப்பட– ராம்குமார் தானே பாட்டியை அழைத்துப் போய் ரத்தப் பரிசோதனை, இதயப் பரிசோதனை எல்லாம் செய்து பெரிய நர்ஸிங் ஹோமில் சேர்த்தான்.

'ஆபரேஷன்' முடிந்த ஐந்தாவது நாள் அவனே பாட்டியை வீட்டிற்கு கூட்டி வந்தான்.

"பாட்டி ... இனிமேல் கண் நல்லாத் தெரியும் பாருங்க... ஒரு தொந்தரவு இருக்காது. தலைக்கு மட்டும் கொஞ்ச நாளைக்கு தண்ணி விடாதீங்க..." என்றான்.

அன்றைக்குப் பாட்டி அவன் கைகளைப் பற்றிக்கொண்டு உணர்ச்சிப் பெருக்கில் தடுமாறினார்.

"எனக்கு என் பிள்ளை செய்யலேப்பா... இந்த அறுபது வயசுல ஒரு நாளைக்காவது– 'என்னம்மா சாப்பிட்டியா?'ன்னு கேட்டதில்லை உடம்பு சரியில்லையா; வாம்மா டாக்டர் வீட்டுக்குன்னு அழைச்சுட்டு போனதில்லை. ஆனா, எங்கிருந்தோ கடவுள் உன்னைக் கொண்டுவந்து விட்டிருக்கார். உன்னை எங்க வீட்டுக்கு அனுப்பணும்னே என் பேத்திக்கு அந்த கம்பெனி வேலையை வாங்கித் தந்திருக்கு. அவ அதிருஷ்டக்காரிப்பா... அதனாலதான் நீ கிடைச்சிருக்கே..."

குடும்பத்தில் ஒருவனாக பழகி, அந்த மாதிரி அனேக தடவைகள் பாட்டியை நெகிழ்ந்து நெஞ்சுருகிப் போகச் செய்தான் ராம்குமார். அவன் வாங்கிக்கொண்டு வந்த பழங்களை நறுக்கி எல்லாருக்கும் தரும்போது கூடத்தில் கொண்டுவந்து வைத்த கலர் டி.வி.யில் படம் பார்க்கும்போது, 'சிவா, சாமிநாதா கிளம்புங்கோ. குழந்தைகளுக்கான இங்கிலீஸ் படம் ஒண்ணு வந்திருக்கு. போகலாம்.' என்று ராதிகாவுடன் அவர்களையும் சேர்த்து அழைத்துக்கொண்டு போகும்போது– "பாட்டி... ராதிகாவைக் கொஞ்சம் வெளி அழைச்சுட்டு போயிட்டு வரேன். திரும்ப மணி எட்டரை, ஒன்பதுன்னு



ஆனாலும் பயப்படாதீங்க" என்று– சொந்த விஷயங்களுக்காக ஆபீஸ் காரை உபயோகப்படுத்தாமல் தான் வாங்கி வைத்திருந்த ஸ்கூட்டரின் பின்னால் ராதிகாவை உட்கார வைத்து ஓட்டிக்கொண்டு போகிறபோது–

பாட்டி வந்து ஜெபமணி மாலையை உருட்டுவாள். ஜெபத்திற்குப் பதிலாக வார்த்தைகள் தன் இச்சையாய்– பிரார்த்தனையாய் வெளிவரும்.

'சின்னஞ்சிறுசுகள் எத்தனை அழகா, பொருத்தமா, பாந்தமா இருக்கிறதுகள்! பார்க்கிறவங்க கண்படாம அவங்களை நல்லா வைடாப்பா ஈஸ்வரா... சீக்கிரமே அவங்க சேர்மனாமே... அவரை வரவழைச்சு கல்யாணத்தை நல்லபடி முடிச்சுடுடாப்பா சர்வேஸ்வரா..."

ராணி முத்து சந்தா விவரம்

| | |
|---|---|
| இரண்டு ஆண்டு | ரூ. 275 |
| ஒரு ஆண்டு | ரூ. 150 |
| ஆறு மாதம் | ரூ. 80 |

வெளிநாடுகள்

| | |
|---|---|
| ஒரு ஆண்டு | ரூ. 1225 |
| ஆறு மாதம் | ரூ. 615 |

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

மேலாளர்,
"ராணி முத்து",
சென்னை–600 007.

பாட்டியின் பிரார்த்தனைக்கு இறங்கியோ என்னவோ கார்த்திகேயன் வெளிநாட்டில் இருந்து திரும்பி வந்துவிட்டான். வந்த மறுநாளே அலுவலகத்திற்கு வந்திருந்தான். ஏற்கெனவே நல்ல நிறமுள்ளவன், இன்னமும் சிவந்திருந்தான். ஒருமாத சுற்றுப் பயணத்தின் அயர்ச்சியோ, களைப்போ இன்றி மிக உற்சாகமாக இருந்தான்.

அலுவலகத்தினுள் நுழைந்தபோதே ராதிகாவைப் பார்க்க வேண்டுமென்று தோன்றி– அவளுக்கு தன் எண்ணத்தை– தான் அவளைப் பற்றி நினைத்துக்கொண்டு இருப்பதைச் சொல்லிவிட முடிவு செய்து தன் அறைக்குள் நுழைந்த உடனேயே அவளைக் கூப்பிட்டு அனுப்பினான்.

"குட்மார்னிங் சார்..." என்று உள்ளே நுழைந்தவளைப் பார்த்து அவன் கண்கள் அகன்றன. முதல் முதலாகத் தன் அறைக்குள் நுழைந்த ராதிகாவிற்கும், இந்த ராதிகாவிற்கும் இருந்த வித்தியாசத்தைப் புரிந்துகொண்டான். முகத்திலிருந்த அத்தனை சோகத்தையும் யாரோ துடைத்து எடுத்துக்கொண்டு போய்விட்டிருந்த மாதிரி

இருந்தது. கண்களிலிருந்த பயம் மறைந்து பளபளத்தது. ஏற்கெனவே நிகுநிகுவென்றிருக்கும் நிறம் கூடி உடம்பில் லேசாகச் சதை பிடித்து...

"வாவ்...!" என்று தோள்களைக் குலுக்கினான். "வெளிநாடு போனது நானா, நீயான்னு சந்தேகமாக இருக்கு ராதிகா..." என்று சிரித்தான்.

"எனி வே... உன்னை இப்படிப் பார்க்க சந்தோஷமாக இருக்கு. கீப் இட் அப்..."

"தாங்க்யூ சார்..." என்று புன்னகை செய்தாள் அவள். பின்னர் அவனில்லாத ஒரு மாதத்தில் நடந்த வேலைகளை மடமடவென்று ஒப்பிக்க ஆரம்பித்ததும், சட்டென்று அடக்கினான். "நோ... நோ... இன்னிக்கு இதெல்லாம் வேணாம். இதையெல்லாம் நாளைலேருந்து ஆரம்பிச்சுக்கலாம். இன்னிக்கு நான் ஆபீசுக்கு வந்ததுக்கு முக்கியமான காரணம் ஒண்ணு இருக்கு. கேன் யு கெஸ் வாட் இட் இஸ்...?"

கண்கள் பளபளக்க, மிகுந்த ஆர்வத்துடன் அவன் கேட்டதும்- அவள் யோசனை செய்து மெதுவாகத் தலையாட்டினாள்.

"நோ...சார்..."

"இன்னும் ஒரு நிமிஷம் தரேன். ஞாபகத்துக்கு வருதா பாரேன்...?"

அந்த நிமிடமும் வீணான பின் அவனே சொன்னான்.

"யு ரிமெம்பர். நான் அமெரிக்கா போயிட்டு வந்து உன்கிட்ட முக்கியமான ஒரு விஷயம் சொல்லப்போறேன்னு சொல்லலே...?"

"ஓ..." என்று கீழ் உதட்டைக் கடித்தாள் ராதிகா.

"எஸ் சார்... இப்போ ஞாபகத்துக்கு வருது..."

"அதை இன்னிக்கு உன்கிட்டச் சொல்லப்போறேன். அது உனக்கு அதிர்ச்சியான செய்தி. ரெண்டு, மூணு வெளிநாட்டு 'கால்' பண்ணி பேசிட்டு உன்னைக் கூப்பிடறேன். அதுவரை எனக்காக காத்திருக்க முடியுமா?"

"நிச்சயமா சார்..."

வெளியில் வந்ததும் ராம்குமாரிடம் விஷயத்தைச் சொல்லி "என்ன பேசப் போறார்னு தெரியலையே...?" என்றபோது- குரலில் தொனித்த கவலை அவனைச் சற்று யோசிக்க வைத்தது. பின்னர் யோசித்த விஷயம் சட்டென்று பிடிபட்ட மாதிரி சொன்னான்.

"நம்மைப் பத்தி யாரோ அவர்கிட்டச் சொல்லி இருக்காங்கன்னு நினைக்கிறேன் ராதிகா. நேத்து ஏர்போர்ட்டுக்கு ராகவன் போயிருந்தாரில்ல. அவர் சொல்லி இருக்கணும். அதைப் பத்தித்தான் உன்கிட்ட கேட்க போறார்னு தோணுது ராதிகா..."

"அப்படின்னா முதல்ல உங்களைத்தானே கூப்பிட்டுக் கேட்பார். என்னை இல்லையே...?"

ஒரு விநாடி யோசித்த ராம்குமாரின் முகத்தில் வருத்தம் படர்ந்தது.

"அவருக்கு என் மேல கோபமா இருக்கும் ராதி. இத்தனை வருஷம் கூட இருந்து, நெருக்கமா பழகி, நானே சொல்லலைன்னு நினைச்சுட்டிருப்பார். யார் மூலமோ கேள்விப்பட நேரிட்டதே என்ற வருத்தமா கூட இருக்கும். அது தப்புதான் ராதி. அவரா உன்னைக் கூப்பிட்டு கேட்கிறதுக்கு முன்னால, நாமா போய்ச் சொல்விடலாம் ராதி. நீங்கதான் சார் எங்கக் கல்யாணத்தை நடத்தி வைக்கணும்னு கேட்டுக்கலாம். வா, எழுந்திரு ராதி..." அவன் அவசரப்பட்டான்.

"அவர் ஏதோ வெளிநாட்டு 'போன்' பண்ணி முடிச்சிட்டு கூப்பிடறேன்னாரே...?"

"அவர் கூப்பிடறதுக்கு முன்னால போகணும்னு நான் அவசரப்படறேன். இரு, கொஞ்சம் இரு... முதல்ல இண்டர்காமில் அனுமதி கேட்டுக்கறேன்..."

"சார்... ராம்குமார் பேசுறேன் சார். உங்ககிட்ட ஐந்து நிமிஷம் பேசணும் சார். ஓ கே சார், தாங்க்யூ சார்..."

இண்டர்காமைப் பொருத்திவிட்டு, "வரச் சொல்கிறார் ராதி... வா போகலாம்..." என்று முதல் முறையாக தன் அமைதி, நிதானம் இரண்டும் சற்றுக்குறைய ஓரளவு பதற்றத்துடனே எழுந்துகொண்டான் அவன்...

## 5

**அ**றைக்குள் ஒன்றாக நுழைந்த ராம்குமாரையும், ராதிகாவையும் பார்த்து ஆச்சரியப்பட்டான் கார்த்திகேயன்.

"என்ன ராம்குமார்... நீ வர 'பர்மிஷன்' கேட்டுட்டு, அவங்களையும் அழைச்சிட்டு வந்திருக்கே... என்ன விஷயம்...?"

ராம்குமார் சற்றுத் தயங்கி பின் சொன்னான்.

"சார். முதல்ல உங்க ஆசீர்வாதம் வேணும் சார்..."

"ஆசீர்வாதமா...? என்னை என்ன கிழவன்னா நினைச்சு ஆசீர்வாதமெல்லாம் பண்ண...? உன்னைவிட ஒரு வருஷம்தாம்ப பெரியவன் நான்..."

"இருக்கலாம் சார்... ஆனா உங்க குணம் , படிப்பு, அந்தஸ்து எல்லாத்துக்கும் மேலா அந்த மனசு... என்னைவிட எத்தனையோ மடங்கு உயர்ந்தவர் சார் நீங்க... நியாயமா பார்த்தா நீங்கதான் ச ஆசீர்வாதம் பண்ணத் தகுதியானவர்..."

"ஓ... என்ன இப்படி ஒரேயடியா 'ஐஸ்' வைக்கிற... இப்பத்தா குளிர்தேசத்துலே இருந்து வந்திருக்கானே... இங்கே ஒரே வெயி இருக்கே... அதனால கொஞ்சம் குளிர்ச்சியா இருக்கட்டுமேன் இப்படி ஐஸா கொட்டறே...? நான் 'ஏர்கண்டிஷன் ரூம் இருக்கேன்..."

"இல்லே சார்... இது ஐஸ் இல்லே... மனசு பூர்த்தியா நெஞ்சுலேர் வர்ற வார்த்தை. உங்களை முன் வச்சு, உங்க ஆசீர்வாதத்தோ நீங்க நடத்தி வைக்கணும் எங்க கல்யாணத்தைன்னுதான் நாலு ராதிகாவும் காத்துட்டிருந்தோம்."

சடாரென்று பிடரியில் ஓங்கி அறைந்த மாதிரி இருந் கார்த்திகேயனுக்கு. பெரிய அதிர்ச்சியாக தெரிந்தது. ஒரு விந ஒன்றும் புரியாத மாதிரி கூடத் தோன்றியது. அதனால் தப்பா காதில் ஏதோ விழுந்துவிட்டதோ அல்லது தான் சரியா கேட்கவில்லையோ என்ற சந்தேகத்தில் மெதுவாகக் கேட்டான்

"கல்யாணமா...? நீ என்ன சொல்றே ராம்குமார்...? யாருக் கல்யாணம்...?"

"தெரியாத மாதிரி கேட்கிறீங்களே சார்...? நேற்று உங்ககிட் ராகவன் சார் சொல்லலை...? அதைத்தானே நீங்க ராதிகாகி பேசணும்னு சொன்னீங்க...? அதுக்கு முன்னால நாங்க சொல்லிடலாம்னு வந்துட்டோம் சார். இதுவரை சொல்லாத மன்னிக்கணும் சார். சொல்லச் சந்தர்ப்பம் கிடைக்காமல் பாரின் போயிட்டீங்க. இப்ப சொல்றோம் சார். எங்க ரெ பேரையும் ஆசீர்வதிச்சு நீங்கதான் சார் இந்தக் கல்யாணத் நடத்தி வைக்கணும்..."

பளிச்சென்று சொல்லிவிட்டான் ராம்குமார். ராதிகாவிற் அவனுக்கும் கல்யாணம். ராம்குமார் முந்திக்கொண்டா ஆமை, முயல் கதை மாதிரித் தான் பின் தங்கித் தோற்றுப்

நேர்ந்துவிட்டது. இதுவரை வாழ்க்கையில் தோல்வி என்பதே தெரியாமல் வளர்ந்தவனுக்கு இதுதான் முதல் அடி. சற்றுப் பலமான அடிதான். அவனுடைய வாழ்க்கையில் பெண் என்பவள் புதிதானவள் அல்ல. அவன் பழகாத பெண் இல்லை. படித்த அந்த இருபது வயதிலேயே அவனுக்குப் பெண் அறிமுகம் உண்டு. அனுபவமும் உண்டு. ஆனால், எந்தத்-தனியொரு பெண்ணிடமும் ஈடுபாடு மட்டும் ஏற்படவில்லை. மிக மிக சுதந்திரமாக வளர்ந்த காரணத்தாலும், வெளிநாட்டுக் கலாசாரம் படிந்து போனதாலும் இந்தியத் திருமண முறைகளில் நம்பிக்கையற்றுப் போயிருந்தான். இங்குள்ள பெண்களின் மனோபாவத்திற்கும், தனக்கும் ஒத்துவராது என்கிற அனுமானத்தில் இருந்தான். அதனாலேயே திருமணத்தைத் தவிர்த்துக்கொண்டிருந்தான். இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை நியூயார்க்கில் இருந்து இவனைப் பார்க்க வரும் அம்மாவும், அப்பாவும் கல்யாணத்தைப் பற்றிக் கேட்பார்கள்.

"ஐயாம் ஸாரி... ஐ ஹேவ் நோ ஸச் ஐடியாஸ். பிளீஸ் லீவ் மீ இன் மை ஒன் வே..." என்ற பதிலுக்குப் பின்னர் அவர்களும் ஒன்றும் கேட்காமல் விட்டுவிட்டார்கள். தனி மனித சுதந்திரத்தில் நம்பிக்கை உள்ளவர்களாக மீண்டும் நியூயார்க்கிற்குப் பறந்தார்கள்.

அப்படிப்பட்டவனுக்குத்தான் முதல் முதலாகக் காதல் என்பது மனசுக்குள் எட்டிப் பார்த்தது. ராதிகாவின் அழகைத் தவிர- கண்களில், முகத்தில் தெரிந்த கபடமின்மை அவனைக் கவர்ந்தது. அதன்பின்னரே அவளைக் கல்யாணம் பண்ணிக்கொண்டால் வாழ்க்கை எப்படி இருக்கும் என்று யோசிக்க ஆரம்பித்தான். அவளை அவனுக்குப் பிடித்திருந்தது. தனக்கு அவள் மீது ஏற்பட்டிருப்பது வெறும் கவர்ச்சியில்லை. ஒருநாள் கிடைக்கக்கூடிய பட்சத்தில் அடங்கிவிடக் கூடியதில்லை என்பதை உணர்ந்த போது அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது. 'Am I in love...?' என்பதைத் தனக்குத்தானே கேட்டுக்கொண்டான்.'Are you truly in love...?' என்று தன்னைத்தானே மீண்டும் கேட்டுக்கொண்டு 'எஸ்... எஸ்... எஸ்...' என்று உறுதியான பதில் வந்த பின்பே-

அன்று ராதிகாவிடம் சொல்லத் தயாரானான். நேரமின்மையால் தள்ளிப் போட்டு- பின்னர் அமெரிக்காவில் இருந்து திரும்பி வந்த பின்பு சொல்லலாம் என்றிருந்தது-

இப்போது இப்படித் திசை திரும்பி இருக்கிறது. இவளை அடைகிற அதிருஷ்டசாலியாக ராம்குமார் மாறியிருக்கிறான். இவள் அவனைத்தான் விரும்புகிறாள் என்கிற பட்சத்தில்-

'தட் இஸ் ஆல் மை லக்' என்று அவர்களை வாழ்த்தி, அவர்கள் கேட்டுக்கொள்கிற மாதிரி சந்தோஷமாகக் கல்யாணம் பண்ணி வைப்பதைத் தவிர வேறு என்ன வழி இருக்கிறது?

சட்டென்று தன்னைச் சுதாரித்துக்கொண்டான். இந்தத் திருப்பம் தன்னை ஆழமாகப் பாதித்துவிடாத அளவில் எளிதாய் எடுத்துக்கொள்ள வேண்டும் என்கிற முடிவில், தன் வழக்கமான புன்சிரிப்பை முகத்திற்குக் கொண்டு வந்தான். எப்போதும் பார்க்கிற மாதிரி கம்பீரமாகப் பார்த்தான். பின்னர் சாமர்த்தியமாக தன் உணர்ச்சிகள் எதையும் வெளிக்காட்டாமல் ராம்குமாரின் கையைப் பற்றிக் குலுக்கினான்.

"பணம், புகழ், படிப்பு, அந்தஸ்துன்னு எது எதெல்லாமோ என்கிட்டே இருக்கிறதா கொஞ்ச முன்னாடி சொன்னேன் இல்ல ராம்குமார், ஆனால் அதையெல்லாம் மீறின அதிர்ஷ்டம் உன்கிட்ட இருக்கு...."

அவனது முகத்தின் சிரிப்பையும், பேச்சின் பரவசத்தையும் பார்த்த பின்னரே ராம்குமாருக்கு உயிர் வந்தது. முதல் ஐந்து நிமிடங்கள் அவன் அமைதியாக இருந்ததில் உள்ளுக்குள் பதறின பதற்றமெல்லாம் வடிந்து, பழைய உற்சாகம் தொற்றிக்கொள்ளச் சொன்னான்.

"ஓ... தாங்க்யூ சார்... நீங்க இதை எப்படி எடுத்துப்பீங்களோன்னு பயந்துட்டிருந்தோம்..."

"ஓ... காட்! இதுல பயப்பட என்ன இருக்கு? நீங்க ரெண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் நேசிக்கிறபோது மூணாவது மனுஷனுடைய அபிப்பிராயத்துக்குத் தேவை என்ன? தனி மனுஷ சுதந்திரத்துல நம்பிக்கையும், அதுல தலையிடற யாரையும் மன்னிக்காத குணமும் உடையவன் நான் என்பது உனக்கு நன்னாவே தெரியும். இருந்தும் எதுக்கு இந்தப் பேச்செல்லாம்...? ஆமாம் ராம்குமார் ... நீ இத்தனை சொன்னியே... ராதிகா வாயைத் திறந்து ஒரு வார்த்தையாவது சொன்னாளா பாரு...?"

"ஏய் ராதி, சொல்லேன் ... சார் கேட்கிறார் இல்ல...?"

"என்ன சொல்லணும்...?"– அவள் வெட்கமும், படபடப்புமாக நிமிர– அந்த வெட்கம் அவளை இன்னமும் அழகாக்குவதைக் கவனித்த கார்த்திகேயன் உள்ளுக்குள் எழுந்த பெருமூச்சை அடக்கிக்கொண்டே கேட்டான்.

" என்ன சொல்றதா....? ஹௌ மச் யூ லவ் ஹிம்னு சொல்றது..."

அவள் இன்னமும் வெட்கப்பட்டுத் தலை குனிய, கார்த்திகேயன் சீண்டத் தொடங்கினான்.

"ஓ... கமான்... டெல் மீ ஹௌ மச் யு லவ் ஹிம்...? திஸ் மச்...?"– என்று இரு கைகளையும் விரித்து அழகாய் அபிநயம் மாதிரி காட்ட, அதைப் பார்த்த அவள் கன்னங்களில் சிவப்பேற மெலிதாய் "ம்ஹூம்... நாட் திஸ் மச்" என்றாள்.

அவன் விடுவதாக இல்லை. "நாட் திஸ் மச் என்றால் என்ன அர்த்தம்...? இதைவிடக் குறைச்சல்னா...?"

"ம்ஹூம்... அதிகம்னு..."

"எவ்வளவு அதிகம்....?"

"இந்த உலகத்தைவிட அதிகம்னு வச்சுக்கோங்களேன்...?"

"அடேங்கப்பா!" என்று கார்த்திகேயன் சிரிக்க ஆரம்பித்ததும் அவர்களும் அவனோடு சேர்ந்துகொண்டனர்.

சிரிப்பு அடங்கினதும் ராம்குமாரைப் பார்த்துக் கேட்டான்.

"உனக்கு யாருமில்லே... உன் பக்கத்துலேருந்து இந்தக் கல்யாணத்துக்கு எந்தவித அப்ஜக்ஷனும் இருக்காதுன்னு எனக்குத் தெரியும். அவ வீட்டில அம்மா– அப்பாவெல்லாம் இதுக்கு ஒத்துட்டாங்களா...?"

"ராதிகாவுக்கு அப்பா இல்லை சார்..." என்று ஆரம்பித்துச் சுருக்கமாக முழுவதையும் சொல்லி முடித்தான் ராம்குமார். பாட்டியிடம் தான் சொல்லிவிட்டு வந்ததைத் தெரியப்படுத்திவிட்டுக் குரல் கரகரக்கக் கேட்டான்.

"நீங்க வந்ததும் கல்யாணத்தை நடத்தி வச்சுடுவீங்கன்னு ரொம்ப ரொம்ப நம்பிக்கையா, தீர்மானமா பாட்டிக்கிட்டச் சொல்லிட்டேன் சார்..."

"அவ்வளவு தானே ... Done..." என்று சிரித்தான் கார்த்திகேயன். அடுத்த முகூர்த்தம் எப்பன்னு பார்க்கச் சொல்லி உடனே ஏற்பாடு பண்ணிடறேன். பொண்ணு வீடு, பிள்ளை வீடு ரெண்டுக்கும் நானே முன்ன நின்னு நடத்தி வைக்கிறேன். இது என் வீட்டுக் கல்யாணம் மாதிரி. செலவு முழுசும் என்னோடது... ஓ.கே..."

ராம்குமார் நெகிழ்ந்து பேச்சு வராமல் தவிக்க– ராதிகாவின் கண்கள் நிறைந்து போயின. உணர்ச்சிவசப்பட்ட இருவரும், "சார்... இப்படி நில்லுங்க சார். நமஸ்காரம் பண்றோம்" என்று முன் வந்ததும், சரேலென்று நகர்ந்து கொண்டான் கார்த்திகேயன்.

"டோண்ட் பி ஸ்டுப்பிட்... நீங்க ரெண்டு பேரும் எனக்கு ஏதாவது

பிரதி உபகாரம் பண்ணனும்னு நினைச்சா... கிவ் மீ எ கிராண்ட் டிரீட் ஐ ஸே..."

"ஓ.கே. சார்... இன்னிக்கே நட்சத்திர ஓட்டல்ல 'டேபிள் ரிசர்வ்' பண்ணிடறேன்."

"ஓ... நோ..." என்று உடனடியாக மறுத்தான் அவன்.

"இந்த பைவ் ஸ்டார் ஓட்டல் சாப்பாடெல்லாம் அலுத்துப் போச்சு எனக்கு. ராதிகா, இன்னிக்கு ராத்திரி உங்க வீட்டுக்குச் சாப்பிட வரேன். உங்க பாட்டிகிட்டச் சொல்லி வத்தக்குழம்பும், சுட்ட அப்பளமும் பண்ணித் தரச் சொல்றியா...?"

ஒரு விநாடி ராம்குமார், ராதிகா இருவருமே சிலிர்த்துப் போனார்கள். அவனுடைய அந்த வேண்டுகோளும், ஆசையும் நெஞ்சைத் தொட்டு நெகிழ வைக்க, உணர்ச்சிவசப்பட்ட குரலில் சொன்னாள் ராதிகா.

"எங்க வீடு... வந்து... ரொம்பச் சின்னது சார்... ஒரு சாதாரணத் தெருவுல இருக்கு..."

"ஓ... நான் வீட்டுக்காக வரலை ராதிகா ... உங்க ரெண்டு பேருக்காக... உங்க மனசுக்காகத்தான் வரேன்... அது பெரிசா விசாலமா இருக்கு இல்லே–"

"நீங்க வர நாங்க ரொம்பக் கொடுத்து வச்சிருக்கணும் சார்..."

"ஓ.கே... அப்படின்னா ராம்குமார், நீ சரியா சாயந்திரம் ஏழு மணிக்கு என் வீட்டுக்கு வந்து 'பிக் அப்' பண்ணிக்க. ரெண்டு பேருமா என் காரிலேயே ஏழரை மணிக்கெல்லாம் ராதிகா வீட்டுக்குப் போயிடலாம். ஆனா, மறுபடியும் சொல்றேன்... வத்தக்குழம்பு, சுட்ட அப்பளம் தவிர வேற ஒண்ணும் வேணாம்."

"ஓ.கே. சார்..."

அன்று மாலை மூன்று மணிக்கெல்லாம் ராதிகாவை காரில் ஏற்றி, வீட்டிற்கு அனுப்பி வைத்தான் ராம்குமார்.

"நீ முதல்ல போய் வீட்டைக் கொஞ்சம் சுத்தப்படுத்தி பாட்டிகிட்டச் சொல்லி தயார் பண்ணு. நான் என் ஸ்கூட்டர்ல சேர்மன் வீட்டுக்குப் போய், அவரோட கார்ல வந்துடறேன். சரியா ஏழரை மணிக்கெல்லாம் வீட்ல இருப்போம். சேர்மன் ரொம்ப பங்க்சுவல். ஒரு நிமிஷம் லேட்டானால் கூட அவருக்குப் பிடிக்காது... என்ன...?"

'சரி' என்று தலையாட்டிவிட்டு மனம் நிறைய சந்தோஷத்தையும், நிம்மதியையும் ஏற்றிக்கொண்டு காரில் புறப்பட்டாள் ராதிகா.



மணி ஏழாகி, ஏழே காலாகி, ஏழரையாகி, எட்டடிக்கப் பத்து நிமிடங்கள் இருந்தபோது, ராதிகா வாசலில் நின்று அவர்களை எதிர்பார்த்துக் காத்திருக்க– கார்த்திகேயன் அவளை டெலிபோனில் கூப்பிட்டான்.

"என்ன ராதிகா, இன்னும் ராம்குமாரை காணோம்...?"

"அங்கே வரலையா சார்...?"

"இல்லையே... நான் ஏழு மணியிலிருந்து காத்துட்டிருக்கேன். உன்கிட்ட என்ன சொன்னான்...?"

"ஸ்கூட்டர்ல உங்க வீட்டுக்கு வந்து, ஸ்கூட்டரை அங்க வச்சிட்டு உங்கக்கூட கார்ல வர்றதாச் சொன்னார் சார்..."

"ஏன், கார் என்ன ஆச்சு...?"

"கார் இங்கதான் சார் இருக்கு. மூணு மணிக்கெல்லாம் என்னை கார்ல வீட்டுக்கு அனுப்பிட்டு, ஏழு மணிக்கு உங்களை அழைச்சுட்டு கிளம்பறதாச் சொன்னார்..."

சிறிது யோசித்த கார்த்திகேயன், " சரி, போனை வை. நான் அவன் வீட்டுக்கும், ஆபீசுக்கும் போன் பண்ணிக் கேட்டுட்டு, திரும்ப உன்னை கூப்பிடறேன்..."

அடுத்த ஐந்தாவது நிமிடம் மறுபடியும் கார்த்திகேயனிடம் இருந்து போன் வந்துது.

"அவன் ஆபீசைவிட்டு ஐந்தரை மணிக்கெல்லாம் கிளம்பிட்டானாம். வீட்டுல கூப்பிட்டா சமையற்காரர் இன்னும் வீட்டுக்கே வரலைன்னு சொல்றார்... என்ன ஆச்சு...?" வேறே எங்கேயாவது போயிட்டு வர்றதா சொன்னானா...?"

"இல்லையே சார்..."

சில கணங்கள் மவுனமாக இருந்த கார்த்திகேயன் பின் கேட்டான்.

"டிரைவர் அங்க இருக்கானா...?"

"இல்லையே சார்... வீட்டுக்கு அனுப்பிட்டேனே..."

"சரி; நீ உன் வீட்டு விலாசத்தைச் சொல். நான் அங்கே வரேன். ரெண்டு பேருமா ராம்குமார் வீட்டுக்குப் போய்ப் பார்க்கலாம்..."

அவளது வீட்டு விலாசத்தைக் குறித்துக்கொண்டு மேலும் கால் மணி நேரத்திற்கு மேல் காத்திருந்து பார்த்த பின்னரே கார்த்திகேயன், ராதிகாவின் வீட்டிற்குப் புறப்பட்டான். அதற்குள் பதற்றமும், பயமுமாக வாசலுக்கும்... உள்ளுக்குமாக நடையாக நடந்தாள் ராதிகா.

"என்ன பாட்டி, இவர் இன்னும் வரலை... சொன்னா சொன்னபடி வந்துடுவாரே பாட்டி..." என்று கவலை தொனிக்கச் சொன்னபோது-

"எதுக்கு இப்படி கவலைப்படறே...? வழில ஸ்கூட்டர் ஏதாவது 'ரிப்பேர்' ஆயிடுச்சோ என்னமோ...?"என்று பாட்டி சமாதானப்படுத்திக்கொண்டு இருக்க, அதைக் கேட்டவாறே உள்ளே நுழைந்தான் கார்த்திகேயன்.

"வா ராதிகா... ராம்குமார் வீட்டுக்குப் போய் எதுக்கும் பார்த்துட்டு வரலாம்..." என்று அவளை அழைத்துக்கொண்டு வெளியில் வந்து காரில் ஏறத் தயாரானபோது-

வீட்டு வாசலில் வந்து நின்றது அந்த போலீஸ் ஜீப். அதிலிருந்து கீழே குதித்த இன்ஸ்பெக்டர், கார்த்திகேயனைப் புரிந்துகொண்டு கையை உயர்த்தி 'குட் ஈவினிங் சார்' சொன்னார்.

"என்ன விஷயம் இன்ஸ்பெக்டர்...?" என்றவனைத் தனியாகச் சற்றுத் தள்ளி அழைத்துப் போய்- அவர் சொன்ன செய்தியைக் கேட்டதும் கார்த்திகேயனுக்கு அடிவயிற்றில் கத்திபாய்ந்த உணர்வு ஏற்பட்டது. நெஞ்சு பதறியது. ஒரு விநாடி இதயத் துடிப்பு நின்றுவிடும் போலிருந்தது. அந்தச் செய்தியின் அதிர்ச்சி உடம்பு முழுவதிற்கும் பரவி லேசாய் நடுக்கத்தை ஏற்படுத்த- வாய் உலர்ந்து வார்த்தைகளுக்குத் தடுமாறினான்.

"எ... எப்....படி யாச்சு இன்ஸ்பெக்டர்...?"

"ஆயிரம் விளக்குகிட்ட சார்... இவர் கிரீம்ஸ் ரோட்லேருந்து வேகமா வந்து இடது பக்கம் திரும்பியிருக்கார். பாலத்துலேருந்து வந்திட்டிருந்த லாரிமோதி... இவரு இடது பக்கம் விழுந்திருந்தார்னா தப்பிச்சிருப்பாரு... ஆனா வலது பக்கம் விழுந்ததுல அவரோட வயத்து மேல லாரி ஏறி இறங்கியது..."

"மைகாட்.... மைகாட்...." என்று வாய்விட்டு சன்னமாகக் கதறினான் கார்த்திகேயன். இனம்புரியாத பயமும், கலவரமும் கவிழ்ந்து முகம் வெளிற கார் கதவைப் பிடித்துக்கொண்டு நின்றிருந்த ராதிகாவை மெல்லத் திரும்பிப் பார்த்தான். நெஞ்சினுள் சொல்ல இயலாத சோகமும், துக்கமும் பரவின. முதல் முதலாகத் தன் அறைக்குள் நுழைந்து- நாற்காலி விளிம்பில் உட்கார்ந்திருந்த அந்த ராதிகாவை மீண்டும் பார்க்கிற மாதிரி தோன்ற- உள்ளுக்குள் குமுறிப் போனான். 'இந்தப் பெண்ணிடம் எப்படிச் சொல்லப் போகிறோம்...? எவ்வாறு இவளால் இதைத் தாங்கிக்கொள்ள முடியும்...?'

அதற்கு மேல் அவளைப் பார்க்கிற சக்தியற்று மீண்டும் இன்ஸ்பெக்டரின் பக்கம் திரும்பினான்.

"இப்போ 'பாடி' எங்கே இருக்கு...?"

"ஜி.எச்.ல சார். போஸ்ட் மார்ட்டத்துக்குக் கொண்டு போயிருக்காங்க..."

## 6

எல்லாம் முடிந்து போயிற்று. ராம்குமார் என்ற அன்பான, அழகான, மென்மையான, நளினமான முப்பது வயது இளைஞனின் வாழ்க்கைக்குச் சட்டென்று முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுவிட்டது. அவனது சிரிப்பு, நிதானமான பேச்சு எல்லாம் அடங்கிப் போய்விட்டன. 'சொல்லு கண்ணம்மா?' என்று ராதிகாவைப் பார்க்கிறப்போதே குழைகிற குரலும், வருடிக் கொடுக்கிற பார்வையும் போய்விட்டது. மிக இனிமையாய்த் தொடர்ந்த காதல் காவியம் ஒன்று சட்டென்று எதிர்பாராத விதத்தில்- எதிர்பாராத சந்தர்ப்பத்தில் நிறுத்தப்பட்டுவிட்டது. அவனது உயிர் அடங்கிப் பன்னிரண்டு மணி நேரமான பின்னர்- மறுநாள் காலையில்தான் உடல் வீட்டிற்குக் கொண்டுவரப்பட்டது.

அதுவும் கார்த்திக் தானே ஆஸ்பத்திரிக்குப் போய் அன்றிரவு முழுதும் கூட இருந்து- விநாடி நேர ஓய்வோ, தூக்கமோ இன்றி ஆஸ்பத்திரி அதிகாரிகளையும், மற்றும் சந்திக்க வேண்டியவர்களை எல்லாம் சந்தித்து, கையெழுத்துப் போட வேண்டிய இடங்களில் கையெழுத்துப் போட்டு- அங்கேயே காத்திருந்ததால் சீக்கிரம் கொடுக்கப்பட்டது.

முகம் மட்டும் வெளியில் தெரிய- உடம்பு முழுவதையும் வெள்ளைத் துணியால் போர்த்தி இறுகக் கட்டிக் கொடுத்திருந்தார்கள். முகத்தில் ஒரு காயமில்லை. அடியில்லை. ரத்தக்கறையில்லை. வெறும் சிராய்ப்பு. கீறல் என்பது கூட இல்லை. அப்போதும் மென்மையான புன்னகை ஓடுகிற முகமாகத்தான் இருந்தது. ஏதோ குளிருக்கு அடக்கமாக இழுத்துப் போர்த்திக்கொண்டு தூங்குகிற மாதிரி பட்டது. 'எழுந்திரு ராம்குமார்!' என்று தட்டி எழுப்பினால் எழுந்து உட்காருகிற மாதிரித் தோன்றியது.

அப்படித் தட்டியெழுப்பி உட்கார்த்தி வைத்துவிட மாட்டோமா என்று தவித்தான் கார்த்திக். உள்ளுக்குள் துடித்துப் போனான். துவண்டு போனான். அதற்குள்ளாகவே லேசாய் கறுமை ஓடத் தொடங்கியிருந்ததைத் தவிர மற்றபடி சாவின் கோரமோ, அத்தனை பயங்கரமான விபத்தில் சிக்கின அறிகுறியோ சிறிது கூட இல்லாத ராம்குமாரின் முகத்தைப் பார்த்து பொங்கி வந்த துக்கத்தைக் கட்டுப்படுத்த வழி தெரியாமல் உதட்டை இறுகக் கடித்துக்கொண்டான்.

ஒருநாள், இருநாள் நட்பா அவர்களுக்குள். எத்தனை வருஷப் பழக்கம். கல்லூரியில் இரண்டு பேரும் அடித்த அரட்டை எத்தனை! பார்த்த சினிமாக்கள் எத்தனை! பேசின பேச்சுக்கள்...எத்தனை!

அதன்பின் இவன் வெளிநாட்டில் படிப்பைத் தொடரப் போன பின்னரே சற்று நீண்ட இடைவெளி விழுந்துவிட்டது. எப்போதாவது கடிதம் எழுதுவதைத் தவிர வேறு தொடர்பற்றிருந்தது. அதுவும் இவன் அமெரிக்காவில் இருந்து திரும்பி வந்து தன் கம்பெனியின் சேர்மன் என்ற பொறுப்பை எடுத்துக்கொண்ட உடனே–

தானே நேராக ராம்குமாரின் விலாசத்தைக் தேடிக் கண்டுபிடித்து அழைத்து வந்துவிட்டான். தன் காரியதரிசி அந்தஸ்தோடு வீடு கார், டெலிபோன் என சகல வசதிகளும் தந்தான். ராம்குமார் அன்று அவனது கைகளைப் பற்றிக்கொண்டு உணர்ச்சி மிகுதியில் கண்கலங்கினது கூட ஞாபகத்திற்கு வந்தது.

'நீ என்னை ஞாபகம் வச்சுட்டு... ஐயம் ஸாரி, இனிமேல் இந்த நீ, வா, போன்ற எல்லாத்தையும் நான் விட்டுடணும். நீ என்னோட பாஸ். கம்பெனி சேர்மன்றதை மறந்துடக்கூடாது. அதனால இப்போதிலிருந்தே சார்ன்னு கூப்பிடப் பழகிக்கிறேன். இந்த அளவுக்கு என்னைத் தேடி வந்து, இத்தனை பெரிய உத்தியோகத்தோட என் வசதிகளையெல்லாம் சேர்த்து உயர்த்தின உன்னை – ஐயம் ஸாரி, உங்களை என்னால் என்னென்னிக்கும் மறக்க முடியாது சார். ஸ்ரீராமனுக்கு ஆஞ்சநேயர் இருந்த மாதிரி கடைசி வரை இருப்பேன் சார். உங்க எல்லாக் காரியத்துக்கும் ஒத்தாசையா இருப்பேன்...'

ஆஞ்சநேயராக இருப்பேன் என்றவன் அற்பாயுசில் முடிந்து போனான். அனுமானை சிரஞ்சீவி என்பார்கள். ஆனால் இவன்!... முப்பது வயதிற்குள், முழுசாய் வாழ்க்கைக்குள் காலடி எடுத்து

வெள்ளைத் துணியால் உடம்பு சுற்றிக் கொடுக்கப்பட்டு...

'மார்ச்சுவரி'யிலிருந்து உடலை வெளியே கொண்டுவந்த போது மானேஜர் ராகவன் கைக்குட்டையால் வாயை பொத்திக்கொண்டு உடல் குலுங்க கார்த்திக்கை நெருங்கிக் குமுறியவாறு கேட்டார்.

"பாடிய எங்க கொண்டு போகலாம் சார்...?"

கார்த்திக் ஒரு விநாடி பேசாமல் இருந்தான். நெஞ்சு ஏறி இறங்கிற்று. அத்தனை அழுகை, குமுறல் எல்லாவற்றையும் ஓர் ஆழமான பெருமூச்சில் வெளிப்படுத்திச் சொன்னான்.

"நேரா ராதிகாவின் வீட்டுக்குப் போகலாம்..."

வேனிலிருந்து உடலை இறக்கிக் கொண்டு வந்து ராதிகாவின் வீட்டுக் கூடத்தில் கிடத்தினபோது வீடே குலுங்கிற்று. ஆபீஸிலிருந்து வந்திருந்த அத்தனை பேரும் கதறினார்கள். எது எதுவோ சொல்லி அழுதார்கள். ராம்குமார் வேலையில் சேர்ந்த முதல் நாளிலிருந்து இதுவரை அழுகைக்கிடையிலும் அலசினார்கள். ஒவ்வொருவரும் தங்களுக்கு அவனோடு இருந்த சம்பந்தத்தை, நட்பை, பரிவை, பாசத்தையெல்லாம் சொல்லிச் சொல்லிப் பரிமாறிக்கொண்டார்கள்.

சாவு நடந்த எல்லா வீட்டிலும் செத்துப் போன மனிதனின் நல்ல குணங்களையும், அவன் செய்த உதவிகளையும், அவனோடிருந்த உறவுமுறைகளையும் மட்டுமே வெளிப்படுத்துகிற ஒரு பண்பாடு அந்த இடத்திலும் வெளிப்பட்டது. அக்கம் பக்கத்தில் இருந்த ஒரு வீடு தவறாமல் வந்து பார்த்து, அப்போது யாரிடம் எவ்வாறு துக்கம் தெரிவிப்பது என்பது தெரியாமல் மவுனமாய் நின்று மெல்லத் திரும்பிக்கொண்டிருந்தார்கள்.

அன்றொரு நாள் சாமிநாதனின் கால் எலும்பு உடைந்து கட்டுப் போட்டுக்கொண்டு வந்தபோது– சாமியும், பாட்டியும் கேட்டுக்கொண்டதற்கு இணங்க எந்த இடத்தில் படுத்துத் தூங்கினானோ... அதே இடத்தில் இன்று இவனுடல் கிடத்தப்பட்டிருந்தது.

சாமிநாதனும், சிவாவும் அவனது முகத்தையும், உடம்பையும் தொட்டுத் தொட்டுப் பார்த்துப் புலம்பினார்கள். "மாமா... மாமா..." என்று விசும்பினார்கள். 'இனிமேல் எனக்கு யாரு மாமா இந்தி சொல்லித் தருவா? யாரு மாமா வெளியில அழைச்சுட்டு போவா...? யாரு மாமா கேரம் , கிரிக்கெட் விளையாடுவா...?' என்று கேள்வி

மேல் கேள்வியாகத் தங்களுக்கு அவன் செய்ததையெல்லாம் வெளிப்படுத்தினபோது. ஆபீஸிலிருந்து வந்திருந்த அத்தனை நெஞ்சங்களும் உருகிப் போயின. கண்ணோரங்கள் நனைந்து கன்னங்களில் பெருக்கெடுத்தன. யார் யாரோ அவர்களைச் சமாதானப்படுத்த முயன்று முடியாமற்போகக் கடைசியில் கோடி வீட்டு மாமா விடாமல் அவர்கள் இருவரின் கைகளையும் பற்றித் தூக்கி நிற்கச் செய்து, தன்னிரு பக்கங்களிலும் அணைத்து அழைத்துச் சென்றார்.

இவை எல்லாவற்றையும் பார்த்தும் பார்க்காதவளாய், கேட்டும் கேட்காதவளாய் ராம்குமாரின் முகத்தருகில் உறைந்து போய் உட்கார்ந்திருந்தாள் ராதிகா. அழுகை வரவில்லை. எல்லாம் உள்ளுக்குள்ளேயே அடைத்துக்கொண்டதில் நெஞ்சு கனத்தது. பாரமாக அழுத்திற்று. சொல்லில் அடக்க முடியாத துக்கத்தில் இறுகிக் கிடந்தது. சுயநினைவு அற்றுப்போனது. ராம்குமாரின் முகத்தைவிட்டு நகராமல் பார்வை பதிந்து கிடந்தது. வார்த்தைகள் நெஞ்சின் அடியிலிருந்து எழும்பி தொண்டைக்குழி வரை வந்து மீண்டும் சறுக்கிக்கொண்டு போயின.

இன்னமும் கூட ராம்குமார் செத்துப்போனதைத் தான் நம்பவில்லை என்கிற மாதிரி– அவன் தூங்கிக்கொண்டிருக்கிறான்; இதோ எழுந்துவிடப்போகிறான் என்பதற்காகக் காத்துக்கொண்டிருப்பவளாக உட்கார்ந்து...

அந்த முகத்தைத் தொட்டுத் தொட்டுப் பார்த்து அதன் சில்லிப்பு அடிவயிற்றில் சிலீரென்று இறங்குவதை உணர்ந்ததும் வெளிப்படுத்துகிற வகை தெரியாதவளாக அவனது முகத்தில் வந்து உட்கார்ந்த ஈயை விரட்டி, கழுத்தில் போடப்பட்டிருந்த ரோஜா மாலைகளையும், மல்லிகை மாலைகளையும் சரிப்படுத்தி...

பார்க்கப் பார்க்கப் பாட்டிக்கு அடிவயிறு குமுறிற்று. நெஞ்சு நெருப்பாகப் பற்றி எரிந்தது. உடம்பு முழுதுமே தகித்தது. கல்யாணத்தில் மாலைமாற்ற வேண்டியவள், இப்போது இப்படிப் பக்கத்தில் உட்கார்ந்து அவனது உடம்பில் விழுந்திருந்த மாலைகளைச் சரிசெய்வது சகிக்க முடியாததாக இருந்தது. பழுத்த மரம் மாதிரி தான் இருக்க, இந்தப் பிஞ்சைப் பறித்துப் போனவனின் மீது கோபமும்... வெறுப்பும் ஏற்பட்டன. தன் துருதிருஷ்டமோ என்னவோ... தன் வயிற்றில் பிறந்த பெண், அவளது வயிற்றில் பிறந்தவள் என இவ்வாறு தாங்கிக்கொள்ள முடியாத துக்ககரமான விபத்துகள் ஏதாவதொரு



விதத்தில் தொடர்வதும், ஆழமான அடிகளாக எழ முடியாத அளவிற்கு வலுவான அடிகளாக விழுந்து விழுந்து ஒடுங்கிப் போகச் செய்வதுமாக இருக்க–

இவை எல்லாவற்றையும்விட ராதிகா உட்கார்ந்திருந்த தோற்றம், பிரமை பிடித்த நிலை, கொஞ்சம் கூட அழ முடியாத அளவிற்கு உறைந்து போயிருந்த உணர்வுகள்...

‘கடவுளே... இந்தப் பெண் வாய்விட்டாவது அழுது தீர்த்துவிடக் கூடாதா? இப்படி உள்ளுக்குள் இறுத்தி இறுத்தி இவளும் இவளது அம்மா மாதிரி மூலையில் ஒடுங்கிப் போய் விடப்போகிறாளே...? ஒன்றுமில்லாமல் உடைந்துவிடப் போகிறாளே...? இவளை இவ்வாறு இறுக விடக்கூடாது. இளகிக் கரைக்க வேண்டும். அழவைக்க வேண்டும். உள் துக்கமெல்லாம் வெளியில் அடித்துக்கொண்டு வரும்படிச் செய்ய வேண்டும். கதற வைக்க வேண்டும்...!’

பாட்டி அருகில் போய் அவளது தோளைத் தொட்டுத் திருப்பினாள்.

ராதிகா உணர்ச்சிகளெல்லாம் வற்றிப்போன பார்வையில் பாட்டியை ஏறிட்டாள். முகம் கல் மாதிரி இறுகிக் கிடந்தது. அந்த இறுக்கத்தைத் தளர்த்துவதற்கென்றே பாட்டி அவளைக் கட்டிக்கொண்டு அழ ஆரம்பித்தாள்.

அப்போதும் ராதிகா அப்படியேதான் இருந்தாள். அதே உணர்வற்ற நிலை. உறைந்து போன பாவம். எந்தச் சலனமுமில்லாத பார்வை. பாட்டிதான் அழுதாளே தவிர, அவள் கண்களிலிருந்து நீர் வரவில்லை. எல்லாம் வற்றி, வறண்டு போன மாதிரி இருந்தாள்.

அதன்பின் சடலத்தை ஏற்றிக்கொண்டு போகிற கறுப்பு நிற வண்டி வந்தது.

கார்த்திக் குளித்து ஈர வேட்டியுடன் தானே நெருப்புச் சட்டியைத் தூக்கிக்கொண்டு வண்டியில் ஏறி ராம்குமாரின் உடல் கிடத்தப்பட்டிருந்த தலைமாட்டில் உட்கார்ந்ததும்– அப்போதுதான் தன் உணர்வு பெற்றவளாகக் கார்த்திக்கிடம் கேட்டாள் ராதிகா. முதல்முறையாக வாய்திறந்து பேசினாள்.

“நானும்... கூட வரேன் சார்...”

“நம்பள்ல பொம்பளைகள் மயானம் வரை கூடப் போற பழக்கமில்ல...”– அந்திமக்கிரியை பண்ண வந்தவரும், இன்னும் சிலரும் ஆட்சேபிக்க–

கார்த்திக் அழுத்தமான குரலில் சொன்னான்.

"இல்ல... ராதிகா வரட்டும். பாட்டி... நீங்க அவளுக்குத் துணையா கூட வாங்க..."

"துணை!"

அந்த ஒரு வார்த்தையில் ராதிகாவின் உள்ளுணர்வு சடாரென்று விழித்துக்கொண்டது. மனசு ஒரு விநாடி புரண்டது. ராம்குமாருடன் பழக ஆரம்பித்த அந்த முதல் நாளிலிருந்து ஒவ்வொன்றாக நினைத்துக்கொண்டது. அவன் கார்த்திக்கின் அறையிலிருந்து தன்னை அழைத்துக்கொண்டு போனது, ஆபீஸ் முழுதையும் சுற்றிக் காட்டினது, ஒவ்வொருவராக அறிமுகப்படுத்தியது, பின்னர் அவளது அறைக்குக் கூட்டி வந்து நிதானமாய்– அமைதியாய் வேலைகளைச் சொல்லித் தந்தது, வேலையில் அவள் சின்னச் சின்னத் தப்பாக செய்த போதெல்லாம் திருத்தியது, அவன் கொஞ்சம் கொஞ்சமாய் நெருங்கி வந்து பேசிச் சிரித்து– வீட்டிற்கு வந்து– அவளைக் காரில் அழைத்துப் போய் மெதுவாய், இதமாய்த் தன் காதலைத் தெரிவித்துத் தன்னை மார்பில் அணைத்துக் கூந்தலை வருடி...

'நீ அழக்கூடாது கண்ணம்மா... இனிமேல இந்தக் கண்ணுல தண்ணி வர்றதை நான் பார்க்கக் கூடாது. உன்னுடைய மனக் கஷ்டம், பணக்கஷ்டம், கவலை, வருத்தம் எல்லாத்தையும் என்கிட்ட விட்டுடு. அம்மா, பாட்டி, சிவா, சாமிநாதன் எல்லார் பொறுப்பையும் என்கிட்ட தந்துடு. நான் பார்த்துக்கறேன். இனிமேல உனக்கு எல்லாமா நான் இருக்கேன்... என்ன கண்ணம்மா... சரியா? ம்...' என்பதைச் திரும்பத் திரும்பச் சொல்லி, காதருகில் முணுமுணுத்து, கன்னங்களில் உதடுகளை அழுத்தி...

அவளையும் அறியாமல் தன் கன்னங்களைத் தடவி விட்டுக்கொண்டாள். அன்று குளிர்ந்து உடல் முழுதும் சிலிர்ப்பாக ஓடிற்றே... அதுவே இப்போது நெருப்பு மாதிரிப் படர்ந்தது. அந்த ராம்குமார் இப்போது இல்லை என்பது தீ மாதிரி தகித்தது. இப்போது மட்டுமில்லை. இன்று மட்டுமில்லை. இனி என்றும், எப்போதும் இருக்கமாட்டான். கண்ணம்மா என்று காதருகில் குரல் குழையாது. மென்மையாய்த் தன் உடலை அணைத்து முதுகின் பின்னால் விரல்களை கோர்த்து...

ஒரு உன்னதமான மனிதனின் அன்பைக் காட்டி, அனுபவிக்கச் செய்து, ஆத்மார்த்தமாக [illegible]

ஏன் இப்படித் தெய்வம் அழைத்துக்கொள்ள வேண்டும்...? பிறந்த குழந்தை தூங்குகிறபோது அதன் கண்களுக்குள் தாமரைப்பூவைக் காட்டி சிரிக்க வைத்து– அந்தச் சின்னப்பூவை மறைத்து, சிரித்த முகத்தைச் சிணுங்க வைக்குமாமே... அப்படியல்லவா தன்னிடமும் விளையாடிவிட்டது. சந்தோஷம் என்பது என்ன– சிரிப்பு என்பது என்ன என்பதைக் காட்டி, அதன் முழு அர்த்தமும் புரிவதற்கு முன், டக்கென்று பறித்துக் கொண்டுவிட்டது. பளீரென்று விளக்கேற்றி வைத்த சிறிது நேரத்திற்கெல்லாம் அணைத்து இருட்டாக்கிவிட்டது. தான் சார்ந்த கரத்தையும், சரிந்த தோளையும் திடும்மென்று இழுத்துக்கொண்டு தன்னைக் கீழே தள்ளி விட்டுவிட்டது. இனி... இனி என்ன செய்யப்போகிறோம்...? அவளுக்குப் புரியவில்லை.

எல்லாம் ஒரே இருட்டாக இருந்தது. வாழ்க்கையில் நடைபெறுகிற இதுபோன்ற நிகழ்ச்சிகளின் அர்த்தம் பிடிபடவில்லை. திடீரென்று ஏற்படுகிற திருப்பங்களின் காரணம் தெரியவில்லை. ஆனால், வலுவான ஏதோ ஒரு சக்தி இழுத்துக்கொண்டு போவது மட்டும் புரிந்தது. பொம்மலாட்டக்காரனாக அது இழுக்க, கண்ணுக்குத் தெரியாத கயிற்றில் கட்டுப்பட்ட மனிதர்கள் பொம்மைகளாக அந்த இழுப்பிற்கெல்லாம் ஆட்படுவது தெரிந்தது.

மயானத்திற்குப் போகிறவரை மவுனமாய், பிரமை பிடித்த நிலையில் இருந்தவள்– ராம்குமாரின் உடலில் வரட்டிகளை அடுக்கி– சிதைக்கு கார்த்திக் தீ வைத்த நிமிடத்தில் உள்ளுக்குள் குமுறி அடைத்துக்கொண்டிருந்த அத்தனை துக்கமும் பீறிட்டு வெளிவரக் கதறத் தொடங்கினாள். தன்நிலை மறந்து, 'நானும் உங்கக்கூட வந்துடறேன் ராம்! என்னையும் அழைச்சுட்டு போங்க ராம்...' என்று வெறி பிடித்தவளாகக் கத்தினவளை கார்த்திக்கும், பாட்டியும் சேர்த்து இறுக்கிப் பிடித்து காரில் ஏற்றி வீட்டிற்குக் கொண்டுவந்தார்கள். டாக்டரைக் கூப்பிட்ட கார்த்திக், வலுக்கட்டாயமாக அவளுக்கு 'காம்போஸ்' மருந்தை ஊசி போடச்செய்து அவளைப் படுக்கவைத்து– அவள் தூங்க ஆரம்பித்த பின்னரே வீட்டிற்குக் கிளம்பினான்.

போகும் முன் பாட்டியைப் பார்த்துச் சொல்லிவிட்டுப் போனான்.

"உங்களுக்கு துணையாக ஆபீஸ் பியூனை வரச்சொல்லி இருக்கேன் பாட்டி. ராத்திரிக்கு ஏதாவது தேவையாக இருந்தால் அவன் உதவியாக இருப்பான். நான் திரும்பவும் நாளைக் காலைல

வந்து பார்க்கறேன். அதுக்கு நடுவுல எதுக்காவது என்னைக் கூப்பிடணும்னால் வீட்டுக்கு போன் பண்ணுங்க...” என்று தன் தொலைபேசி எண்களைத் தனியாகக் குறித்துக் கொடுத்துவிட்டுக் களைத்த உடம்பும், கனத்துப் போன மனமுமாக கார் வரை நகர்ந்து போவதற்குக்கூட மனதிலோ... உடம்பிலோ சக்தியற்றுப் போனவனாக ஒடுங்கி காரில் ஏறி கிளம்பினபோது மிக மிகச் சோர்ந்து தளர்ந்து ஒன்றுமற்றுப் போயிருந்தான்.

## 7

அன்றிரவு கார்த்திக்கால் தூங்க முடியவில்லை. உடம்பும், மனசும் அடித்துப் போட்ட மாதிரி வலித்தது. எங்கு திரும்பினாலும் ராம்குமாரின் சிரிப்பு கண்ணிற்பட்டது. அதைத் தாங்கிக்கொள்ள முடியாதவனாகக் கண்களை மூடிக்கொண்டபோது உள்ளுக்குள் நின்று அந்த முகம் அதே புன்னகையை வெளிப்படுத்தியது. அந்த முகமும், புன்னகையும், பெண்மையின் மென்மை கலந்த சாயலும், ‘எஸ் சார்... ஓ.கே சார்...’ என்கிற பணிவான பேச்சும்...

இதுவரை எதற்கும் அழுதறியாத கார்த்திகேயன் கண்களில் நீர் கட்டி நின்றது. வாய் ‘ராம்குமார், ராம்குமார்’ என்று அரற்றிற்று. உடனே ஓடிப்போய் அவனை பார்க்க. வேண்டும் போலிருந்தது. மயானத்தில் அவன் உடலில் வரட்டிகளை அடுக்கி நெஞ்சில் நெருப்பிட்டது நினைவிற்கு வந்து மனசைச் சுட்டது. அத்தனை நெருப்பும் தனக்கு இறங்கின மாதிரித் தகித்தது.

அந்த உடம்பிலா வரட்டிகளை அடுக்கச் சொன்னேன்...? அந்த நெஞ்சிலா நெருப்பைக் கொட்டினேன்...? எப்படி... எப்படி... முடிந்தது என்னால்...?’

நினைவுகளின் தகிப்பில் எரிந்துபோனான் அவன்.

எப்போதுமே கற்பனை உலகில் மிதப்பவனல்ல அவன். கனவுகளை வளர்த்து அக்காட்சிகளில் லயிப்பவனல்ல. எதிலும் அவ்வளவு சுலபமாகவோ, சீக்கிரமாகவோ தன்னை இழக்காதவன். நிதர்சனமான மனிதன். நிகழ்காலத்தைத் தவறவிடாதவன். பெரும்பாலும் விழிப்பாக இருப்பவன். நடைமுறை வாழ்க்கையைப் புரிந்துகொண்டவன். எதனோடும் கைகுலுக்கக் கற்றுக்கொண்டவன். தன் விருப்பத்திற்கு மாறாக ந...

பழக்கப்பட்டவன்.

அப்படிப்பட்டவனாலேயே இதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. மரணம் தவிர்க்க முடியாத ஒன்று என்பது புரிந்திருந்தாலும், ராம்குமாரின் இந்த அகால மரணம் அவனை மிகவும் பாதித்தது. தாங்கிக்கொள்ள முடியாததாயிற்று. ஒவ்வொன்றாய் நினைக்க நினைக்க நெஞ்சு நெகிழ்ந்து போயிற்று. ‘எத்தனை வருட நட்பு! எல்லாம் லாரியின் உருவில் வந்து அழித்துவிடக்கூடுமா...? ராம்குமார்... மைடியர் பிரெண்ட், எப்படி உன்னை மறக்க இயலும்? எவ்வாறு இயலும்...?’

அதற்கு மேலும் படுக்கையில் படுத்துக்கொண்டிருக்கப் பிடிக்காமல் எழுந்துபோய் படுக்கை அறையில் வைத்திருந்த ‘லிக்கர் காபினெட்’டைத் திறந்து ஒரு ‘பெக் ஸ்காட்ச் விஸ்கி’ கலந்துகொண்டான். வெறும் விஸ்கி போதாது எனத் தோன்ற– புத்தக அலமாரியில் இருந்து ‘புத்தா’ எனப் பெயரிட்ட புத்தகத்தை உருவி எடுத்தான். முதல் பக்கத்தைப் புரட்டினபோது ராம்குமாரின் கையெழுத்து சிரித்தது. நாலைந்து நாட்களுக்கு முன்னரே அந்தப் புத்தகத்தையும், கலீல் கிப்ரானின் ‘Prophet’–ம் வாங்கி வந்திருந்தான்.

இவன் எதேச்சையாக...

‘என்ன புத்தகம் ராம்குமார்?’ என்று கேட்க–

உடனே அப்புத்தகங்களின் முதல் பக்கத்தில் ‘with lots of love, Ramkumar’ – என்று கையெழுத்திட்டுக் கொடுத்திருந்தான். அவற்றை வாங்கி வைத்துக்கொண்டானே தவிர, இவனால் படிக்க முடியவில்லை. நேரம் கிடைக்கவில்லை.

இப்போது ஏதோ புத்தகம் எடுக்கப் போய் அவன் கையெழுத்திட்டுத் தந்த ‘புத்தா’ என்கிற ஆங்கிலக் கவிதைத் தொகுப்பு கைக்குக் கிடைத்தது. கவிதைகளில் ராம்குமாருக்கு இருந்த மோகம் இவனுக்குத் தெரியும். சின்னச் சின்னதாய் ஆங்கிலக் கவிதைகள் எழுதி வைத்திருந்ததை இவனே படித்திருக்கிறான்.

‘ஏன் ராம்குமார், நீ ஏன் உன் கவிதைகளை ஏதாவது ஆங்கிலப் பத்திரிகைகளுக்கு அனுப்பக் கூடாது...?’ என்று கேட்டிருக்கிறான்.

‘ஓ, நோ சார்... பத்திரிகைகளுக்கு அனுப்பற அளவுக்கு என் கவிதைகள்ல ஒண்ணுமில்ல. ஜஸ்ட்... ஏதோ தோணறது. எழுதறேனே தவிர இதெல்லாம் பிரசுரம் ஆகணும்ன்ற ஆசையெல்லாம் எனக்கில்லை...’ என்று தன் சிரிப்பு மாறாமல் மறுத்திருக்கிறான்.

அதெல்லாம் நினைவுக்கு வர– அப்புத்தகத்தைப் புரட்டினபோது



"பையன் அச்சு அசலா உன்னை மாதிரியே இருக்கானே...?"

"சத்தமா சொல்லாதே! இவன் பக்கத்து வீட்டுப் பையன்!"

- சீர்காழி ரேவதி.



சட்டென்று 'மை டிபார்ட்டட் பிரெண்ட்' என்கிற கவிதை கண்ணிற்பட்டது. அதைப் படித்தபோது இவன் கண்கள் மீண்டும் திரும்பின. ஒருமுறை முழுதும் மனதிற்குள் படித்து முடித்தவன், அதன் இரண்டாவது 'பாரா'வை இன்னொரு முறை வாய்விட்டுப் படித்தான்.

'Your grace and smile infected us
A severe blow, your 'departure' inflicted on us
You are always to us, dear
In our hearts you are eternal for ever.'

சட்டென்று புத்தகத்தை மூடி மேசையின் மீது வைத்தான். அட்டைப் படத்தில் இருந்த புத்தர் இவனைப் பார்த்துப் புன்னகை புரிவதாய்த் தோன்றிற்று. அது ராம்குமாரின் புன்னகையாகத் தெரிய- அதற்கு மேல் தாங்கிக்கொள்கிற சக்தியற்றவனாகக் கடைசி மிடறு விஸ்கியை விழுங்கிவிட்டுக் கட்டிலில் படுத்து விளக்கை அணைத்தபோது, துக்கம் புரண்டு வந்தது. தான் படித்த கவிதையின் முதல் வரியான 'Your grace and smile infected us' என்பதுதான் அவனுக்கு எவ்வளவு பொருத்தமானது எனத் தோன்றிற்று.

என்ன முகம்! எத்தனை மென்மையான அழகு! எவ்வளவு நளினம்! அந்தச் சிரிப்பில் தெரியும் கள்ளமற்ற மனம்!

ராம்குமார்... என் இனிய நண்பனே... என்னாலேயே தாங்கிக்கொள்ள முடியவில்லையே! எத்தனையோ கம்பீரமானவன், நிதானம் தவறாதவன், உறுதியானவன் என்று பெயரெடுத்த நானே இவ்வாறு புலம்பித் தடுமாறி விஸ்கியில் என்னைக் கரைத்துக்கொள்ளப் பார்த்து கவிதை வரிகளில் கண்ணீர் வடிக்கிறேனே...

அவள்... ராதிகா... எப்படித் தாங்கிக்கொள்ளப் போகிறாள்...? எவ்வாறு முடியும்...? இன்று தூக்க மருந்து கொடுத்து அவளைத் தூங்க வைத்தாகிவிட்டது. தன்னை மறந்து போகும்படிச் செய்தாகிவிட்டது. அதில் உன்னைத் தற்காலிகமாக மறக்கடிக்க முயன்றாகிவிட்டது.

ஆனால் நாளை... அதற்கு மறுநாள்... இனி வரப் போகிற நாட்கள்... என்ன செய்வாள் அவள்...? எவ்விதம் தேற்ற முடியும்...? யாரால் தேற்ற முடியும்...?

அதையும் தானே செய்தாக வேண்டும் என்று தோன்றிற்று. தன்னைத் தவிர வேறு யாராலும் முடியாது எனப்பட்டது. நாளைக் காலையில் அவளைச் சந்திக்கிறபோது என்ன சொல்லி ஆறுதலடைய வைக்க முடியும் என்பதை யோசித்தவாறே தூங்கிப் போனான்.

தூக்கத்திற்கிடையில் அரை நினைவாய் புரண்டதில் ராம்குமா
வந்து தன் புன்னகை மாறாமல் கேட்டுக்கொண்டது மெலிதா
காதை எட்டியது.

'சார்... ராதிகாவை நீங்க தான் சார் பார்த்துக்கணும். அவளுக்
வேற யாருமில்ல சார். வாழ்க்கைல நிறைய அடிபட்டு, காயப்பட்
தன்னந்தனியா நிக்கறவ சார். அவளைப் புரிஞ்சுட்டு ஆறுதலா
துணையா இருந்த நானும் இப்ப இல்ல சார். அதனால நீங்கதா
சார் எனக்குப் பதிலா அவளைக் காப்பாத்தணும். மாட்டேன்னு
சொல்லிடாதீங்க சார்... அவளைக் கைவிட்டுடாதீங்க சார்... பிளீ
சார்...'

"நோ...நோ...ஐ காண்ட் லீவ் ஹெர். ஐ வில் நெவர் லீ
ஹெர்..."

அது கனவு என்பதைக்கூட உணர முடியாத கார்த்திக் சடாரென்று
எழுந்து உட்கார்ந்து வாய்விட்டு எதிரில் நிற்கிற ராம்குமாருக்
வாக்களிக்கிற உறுதியான குரலில் சொன்னான்.

மறுநாள் காலையில் எழுந்து குளித்துவிட்டு ராதிகாவை
பார்க்கக் கிளம்பினபோது– ராத்திரி ஏற்பட்ட துக்கம், புலம்ப
எல்லாம் அடங்கி சற்று தெளிவானவனாகக் காணப்பட்டான்
பழைய கார்த்திக்காக கம்பீரமானவனாக இருந்தான். மரண
சாஸ்வதமானது. ஆனால், அதுவே முற்றுப்புள்ளியல்ல என்பதை
புரிந்துகொண்டவனாக இருந்தான். தான் புரிந்துகொண்டதை
எல்லாம் ராதிகாவிற்கும் புரியவைக்க வேண்டுமென்று தோன்ற
ராத்திரி தான் படித்த அந்த 'My departed friend' என்ற கவிதை
அடங்கிய தொகுப்புப் புத்தகத்தை எடுத்துக்கொண்டான். அதை
அவளுக்குப் படித்துக் காட்ட வேண்டும். அதிலும் அந்தக் கடைசி
வரியான 'In our hearts you are eternal for ever' என்பதை
அழுத்திப் படிக்க வேண்டும். ராம்குமார் நம் நெஞ்சங்களைவிட்டு
எங்கும் போய்விடவில்லை என்பதைத் தெரியவைக்க வேண்டும்
அவன் எங்கும் போய்விடவில்லை. இங்கே நம் நெஞ்சங்களில்
நிரந்தரமாகத்தான் குடியிருக்கிறான் என்பதை எடுத்துச் சொல்லியா
வேண்டும்.

அவன் போன போது வீடு அதி அமைதியாக இருந்தது. அந்
அமைதி மிகுந்த சங்கடத்தை ஏற்படுத்தியது. அறை மூலையில்
சுவரில் சரிந்து எங்கோ வெறித்தவாறு உட்கார்ந்திருந்த ராதிகாவை
பார்த்ததும் அந்தச் சங்கடம் இன்னமும் அதிகமாயிற்று. ஆனால்



அதை வெளிப்படுத்தாதவனாக அருகில் போய் கூப்பிட்ட பின்னரே அவள் அவன் வந்திருப்பதை உணர்ந்தாள்.

அத்தனை துக்கத்திலும் மரியாதை தவறாதவளாக எழுந்து நின்றாள். "வாங்க சார்..." என்றபோது குரல் பாதாளத்தில் இருந்து ஒலிக்கிற மாதிரி கேட்டது. அவன் அவளெதிரில் தரையில் உட்காரப் போனபோது பதறினவளாகச் சொன்னாள்.

"இருங்க சார்... நாற்காலியை இழுத்துப் போடறேன்..."

"வேணாம். உட்காரு. இப்படி உட்கார்ந்து பேசறதே சவுகர்யமா இருக்கும்னு நினைக்கறேன்..."

"ஐயோ... தரையில உட்கார்றீங்களே சார்...?"

அவன் பதில் சொல்லாமல் ஓர் விநாடி மவுனமாய் அவள் முகத்தையே பார்த்துவிட்டுப் பின்னர் அவளையும் உட்காரச் சொன்னான். எப்படிப் பேச்சை ஆரம்பிப்பது என்பதை யோசித்து முடித்தவனாகச் சட்டென்று கேட்டான்.

"குழந்தைங்க எங்கே?"

"ஸ்கூலுக்குப் போயிருக்காங்க சார். இங்க இருந்து என்ன பண்ணப் போறாங்க...?"

"பாட்டி...?"

"பின் பக்கம் இருக்கா– கூப்பிடட்டுமா சார்?..."

"வேணாம், நான் உன்கிட்டப் பேசத்தான் வந்தேன்."

"நான்... நான் என்ன பேசப் போறேன்? என்னால என்ன பேச முடியும்...?"

சொன்னபோதே அவளுக்குள் அழுகை புரண்டு வந்தது. கண்ணிலிருந்து கன்னங்களில் நீர் பெருக்கெடுத்து வழிய– நெஞ்சு விம்மிற்று. குரல் தடுமாறிற்று.

"நான்... நானும் கூடப் போயிடக் கூடாதான்னு தோணுது. ஆனா, எப்படி போறதுன்னுதான் தெரியலை."

"டோண்ட் பி ஸ்டுப்பிட்" என்று அதட்டினான் கார்த்திக்.

"என்ன பேசற நீ ...? ராம்குமார் எங்க போயிட்டான்னு நினைச்சு இப்படி அழற...? இதப்பாரு ... உனக்குப் படிச்சுக் காட்டணும்னுதான் இந்தப் புத்தகத்தைக் கொண்டு வந்திருக்கேன். இதுகூட ராம்குமார் கொடுத்த புத்தகம்தான். முன்னால கையெழுத்துப் போட்டுக் கொடுத்திருக்கான். நேத்து ராத்திரி உன்னை மாதிரியே தாங்க முடியாமல் தவிச்சபோது எதேச்சையா இந்தப் புத்தகம் என் கைல கிடைச்சது. இதுல 'டிபார்ட்டட் பிரெண்ட்'னு ஒரு கவிதை கண்ணுல



பட்டுது. பிரிஞ்சு போன நண்பனை நினைச்சு அந்தக் கவிஞர் எழுதி இருக்கணும். இப்போ இது நமக்குப் பொருத்தமானதா இருக்கு. இதை உனக்குப் படிச்சுக் காட்டணும். அதுல வர்ற கடைசி வரியை உன் மனசுல அழுத்தமாய்ப் பதிய வைக்கணும்னே இந்தப் புத்தகத்தை எடுத்துட்டு வந்திருக்கேன். படிக்கிறேன், கேட்கறியா...?"

அவள் மவுனமாய் நீர் நிறைந்த பார்வையில் அவனை ஏறிட, அவன் தன் இயல்பான கம்பீரக் குரலில் தெளிவாய்ப் படிக்க ஆரம்பித்தான்.

'My Departed Friend' என்கிற தலைப்பை அழுத்திப் படித்துவிட்டுத் தொடர்ந்தான்.

'Days have passed into years.
Although gone. you are in our prayers.
In silence we offer you our tears.
Your grace and smile infected us.
A severe blow, your 'departure' inflicted on us
Whether near or far
You are always to us, dear
In our hearts you are eternal for ever.'

வேண்டுமென்றே அந்தக் கடைசி வரியை இரண்டு முறை அழுந்தப் படித்து முடித்த பின் கேட்டான்.

"புரியறதா ராதிகா, ராம்குமார் எங்கேயும் போயிடலை. நம் மனசுலதான் இருக்கான்றது தெரியுதா...?"

அவ்வளவுதான். இதுவரை மவுனமாய் அமைதிக் கண்ணீர் வடித்தவளால் அதற்கு மேல் அவ்வாறு இருக்க முடியவில்லை. குமுறிக்கொண்டு அழுகை விம்மலும், கேவலுமாகப் புறப்பட– அதற்கிடையில் வார்த்தைகள் திட்சண்ணியமாக வெளிப்படலாயின...

"புரியுது... இதை எழுதின கவிஞர் எப்போதோ செத்துப்போன தன் சிநேகிதனை நினைச்சுட்டு எழுதி இருக்கார். அதனால தான் 'Days have passed into years' – ன்னு ஆரம்பிச்சிருக்கார். எத்தனையோ நாளாகி, வருஷங்களான பின்னாலும் அவரால் அந்த சிநேகிதரை மறக்க முடியாமல்தானே இப்படிக் கவிதையா வெளிவந்திருக்கார். எத்தனையோ வருஷங்களுக்கு அப்புறமும் ஒரு நல்ல நண்பனை இழந்த சோகம் இவ்வளவு ஆழமா வெளிப்படுதுன்னா அந்த நட்பு எப்படி இருந்திருக்கணும்...? அவரால் இன்னும் கூட மறக்க

முடியலைங்றபோது...

நான்... என்னுடையது... இந்தக் கவிதை உங்களுக்குச் சரியானதா இருக்கலாம். பொருத்தமானதா இருக்கலாம். ஆனால் எனக்கு... நான்... ராம்குமார் எனக்கு வெறும் சிநேகிதர் மட்டுமில்ல. வெறும் நண்பரில்ல. அதற்கெல்லாம் மேலானதா... எல்லாமே அவர்தான். அவரே எல்லாம்னு எல்லா விதத்துலயும் ஐக்கியமானதற்கு அப்புறம் இப்படித் திடீர்னு ... என்னால முடியலை... தாங்கிக்க முடியலை... அவர் இல்லாமல் இருக்க முடியாது போல் இருக்கு சார்... அவரோட கூடவே போயிடணும் போல இருக்கு. என் உடம்பு, மனசு எல்லாமே அறுந்து போய்த் தரையில் விழுந்த பல்லியின் வால் மாதிரித் துடிக்கறது. அந்தத் துடிப்பை நிறுத்த ஏதாவது வழி சொல்லுங்க சார்... என்னால முடியலையே சார்... நான் என்ன பண்ணுவேன் சொல்லுங்க...?"

முகத்தை இரு கைகளாலும் மூடிக்கொண்டு– மூடின கைவிரல்களுக்கு இடையில் கண்ணீர் பெருகி வழிய உடல் முழுதும் பதறிக் குலுங்க அவள் கதறின கதறலில் அதிர்ந்து போனான் கார்த்திக். அவளைத் தேற்றுகிற வகை தெரியாமல் சில விநாடிகள் மவுனமாய் அவளோடு அவளது துக்கத்தைப் பகிருபவனாக இருந்து– பின்னர் மெதுவாய், முதல் முறையாய் அவளது தோளைத் தொட்டு மிகவும் மென்மையான குரலில் சொன்னான். "பிளீஸ் ராதிகா... ட்ரை டு கலெக்ட் யுவர் ஸெல்ப்... நீயே இப்படி உடைஞ்சு போனால் எப்படி...? கமான்... கெட் அப்... கொஞ்சம் தைரியமா, நிதானமாக தேற்றிக்க முயற்சி பண்ணு. சிவா, சாமிநாதனுக்கு எதிர்ல நீ இப்படி அழுதியானால்– அந்தக் குழந்தைங்க என்ன பண்ணும்? ஏற்கெனவே மனசு உடைஞ்சு போயிருக்கிற அவங்களுக்கு நீ தைரியமானவளா, முன்மாதிரியா இருக்கணுமே தவிர... இப்படி அழுது கரையக் கூடாது..."

அவளை வலுக்கட்டாயமாக எழுப்பி, முகத்தைத் துடைத்துக்கொள்ள செய்து, பாட்டியைக் கூப்பிட்டு சிறிது மோர் சாதம் கரைத்துத் தரச்சொல்லி தம்ளரில் ஊற்றித் தந்து சாப்பிட வைத்த பின்னரே அவன் அவளது வீட்டை விட்டுக் கிளம்பினான்.

"திரும்ப ஆபீஸ்லேருந்து சாயந்திரம் வரேன். அதுவரை இப்படி குமுறிக் குமுறி அழாமல் கொஞ்சம் கொஞ்சமா உன்னை நிதானப்படுத்திக்கப் பாரு ராதிகா..."

கூடத்து ஓரத்தில் கழற்றி வைத்திருந்த செருப்பை அவன் அணிந்து கொண்டிருந்தபோது, குரல் நடுங்க மெல்லிய குரலில் கேட்டாள்



அவள்.

"எனக்கு... ஒரு சின்ன உதவி பண்றீங்களா சார்...?"

"என்ன வேணும் சொல்லு ராதிகா. எதுவானாலும் செய்யத் தயாரா இருக்கேன்."

"அ...அவர் கையெழுத்து போட்டுத் தந்த அந்தப் புத்தகத்தை எனக்குத் தரீங்களா சார்...?"

"ஓ... பை ஆல் மீன்ஸ்..." என்றபோது அவனது குரலும் கரகரத்தது. கையிலிருந்த புத்தகத்தை அவளிடம் கொடுத்து விட்டு...

"வரேன்..." எனக் கிளம்பினவன், வாசல் கதவருகில் நின்று திரும்பிப் பார்த்தபோது–

அந்தப் புத்தகத்தைத் தன் மார்போடு அணைத்துக்கொண்டு கையெழுத்திட்ட பக்கத்தில் அவனது கையெழுத்தின் மீது தன் உதடுகளை அழுத்தி மீண்டும் அவள் குலுங்கி அழுவது தெரிய– ஒரு ஆழமான பெருமூச்சுடன் வெளியேறினான் அவன்...

## 8

அடுத்த நாலைந்து நாட்கள் காலையிலும், மாலையிலும் ராதிகாவின் வீட்டிற்குத் தவறாமல் வந்து போனான் கார்த்திக். அவளிடம் திரும்பத் திரும்ப தைரியமாக இருக்கச் சொல்லி வற்புறுத்தினான். குழந்தைகளை அணைத்து இதமாகப் பேசினான். பாட்டியிடம் ராதிகாவைத் தேற்றுகிற பொறுப்பை ஒப்படைத்துவிட்டுச் சொன்னான்.

"பாட்டி... ராம்குமார் மாதிரி இல்லேன்னாலும் நான் என் விதத்துல உங்களுக்கு ஆதரவா, துணையா இருக்கணும்னு நினைக்கிறேன். ஆரம்பத்துலேருந்து ஒரு வித்தியாசமான சூழ்நிலையில் வெளிநாட்டுப் பழக்கத்துல வளர்ந்துட்ட காரணத்துனால் என் செய்கைகள் கொஞ்சம் மாறுபட்டதா இருக்கும். எதையும் வார்த்தைகள்ல வெளிப்படுத்தத் தெரியாமல் இருக்கும். ஆனா, மனசு பூர்த்தியா ராதிகாவுக்கு எதையெல்லாம் செய்ய முடியுமோ அத்தனையும் செய்ய காத்துட்டிருக்கேன். இன்பாக்ட், ராம்குமாருக்கு முன்னால் நான் ராதிகாவை–" என்றவன் சட்டென்று நிறுத்திக்கொண்டான். தன்னையும் மீறி தன் உள் மனசு வெளிப்படத் தவித்ததை

அடக்கிக்கொண்டான். 'சீ! இது என்ன இடறல்? என்னை மீறி எப்படிப் பேச்சு வெளிவரும்?' என்று தன்னைத்தானே கடிந்துகொண்டவனாகத் தொடர்ந்தான்:

"...ஓ. கே. ... அது கொஞ்சம் சாவதானமாக சொல்ல வேண்டிய விஷயம். அதைப் பின்னால சொல்றேன். இப்ப நான் சொல்ல வந்தது இன்னும் ஒரு வாரத்துக்கு நான் ஊர்ல இருக்கமாட்டேன்றதுதான். அவசரக் காரியமா டெல்லி கிளம்ப வேண்டியிருக்கு. அங்கிருந்து வியன்னா போறேன். அங்க ரெண்டே நாள்ல வேலையை முடிச்சுட்டு, வர்ற வெள்ளிக்கிழமை ராத்திரி திரும்பி வர்றேன். மறுநாள் சனிக்கிழமை ஆபீஸ் உண்டு. அதனால ஆபீசுக்குப் போயிட்டு சாயந்திரமா வீட்டுக்கு வரேன். அதுக்குள்ளே எது தேவைன்னாலும் நீங்க தயங்காமல் ஆபீசுக்கு போன் பண்ணலாம். மானேஜர் ராகவனை 'கான்டாக்ட்' பண்ணுங்க. அவர்கிட்டேயும் சொல்லியிருக்கேன். இது எல்லாத்துக்கும் மேல ராதிகாவை இப்படி மூலைல முடங்கிக் கிடக்க விடாமல் எழுப்பி ஆபீசுக்கு அனுப்புங்க. உங்களுக்கு நான் எதையும் சொல்ல வேணாம். எல்லாம் உங்களுக்கே தெரியும். அதனால நான் போயிட்டு வரேன்றதைத் தவிர வேறு எதையும் சொல்ல வேண்டிய அவசியமில்லை. என்ன பாட்டி... வரட்டுமா...?"

அதேமாதிரி ராதிகாவிடம் தனியாய்ப் பேசி விடைபெற்றுக்கொண்டான். காரில் ஏறுகிற கடைசி நிமிடத்தில் கூட அவளை ஆபீசுக்குப் போகுமாறு வற்புறுத்திவிட்டே கிளம்பினான்.

ஆனால், ஒரு வாரத்திற்குப் பின்னர் தன் வெளிநாட்டுப் பயணத்தை முடித்துக்கொண்டு சொன்ன மாதிரி சனிக்கிழமைக் காலை பதினொரு மணியளவில் அலுவலகத்திற்கு வந்து முதல் காரியமாக ராதிகாவை இன்டர்காமில் கூப்பிட்டான். பதில் வராத காரணத்தால் அவனே எழுந்து பக்கத்திலிருந்த அவளது அறைக்குப் போனவனுக்கு– அறை இருந்த நிலை வேதனையைத் தந்தது. மேசை மீது தாறுமாறாகக் கிடந்த 'பைல்'களும், அவற்றில் படிந்து கிடந்த தூசியும் ராதிகா அன்றையிலிருந்தே ஆபீசுக்கு வராததை உணர்த்திற்று.

தான் அத்தனை வற்புறுத்திச் சொல்லியும் அவள் வராதது மனசுக்குள் நெருடலாகப் பதிந்தது. ஒருவேளை வேலையிலிருந்தே நின்றுவிட்டாளோ என்ற சந்தேகம் ஏற்பட– தன் அறைக்குத் திரும்பி ராகவனைக் கூப்பிட்டு விசாரித்தான். ராகவன் ஒரு ஆழமான



பெருமூச்சோடு பதில் சொன்னார்.

"இல்லை சார்... வேலையை 'ரிஸைன்' பண்ணலை. ஆனா, அன்னிலேருந்து ஆபீசுக்கு வரலை. நான்கூட ரெண்டு, மூணு தரம் வீட்டுக்குப் போய் சொன்னேன். அந்தப் பொண்ணு இன்னும் அந்த அதிர்ச்சியிலிருந்து மீளலை. மூலையோட மூலையா முடங்கிக் கிடக்கறதைப் பார்த்தால் பரிதாபமா இருக்கு சார்... என்ன சொல்லி அவளை சரியாக்க முடியும்ன்றதே தெரியலை..."

ராகவன் போனதும் ஒரு ஆழமான பெருமூச்சு வெளிப்பட யோசித்தான் இவன். ராம்குமாரின் அகால மறைவு அவளை வெகுவாக, மிக ஆழமாகப் பாதித்திருக்கிறது என்பதை உணர்ந்திருப்பவன்; தான் தந்த கவிதைப் புத்தகத்தை நெஞ்சோடு சேர்த்து அணைத்துக்கொண்டு கண்ணீர் விட்டதைக் கவனித்தவன்; 'எனக்கும் கூடவே போயிட மாட்டோமான்னு தோணுறது சார்... ஆனா, போக வழி தெரியலே சார்...' என்று குமுறினதைக் கேட்டவன்–

'அத்தனை சுலபமாகத் தேற்றிக் கொள்வதுகஷ்டம்தான். வெளியில் வருவது சிரமமான காரியம்தான். ஆனால், அதற்காக இப்படியே வீட்டிற்குள் முடங்கும்படி அவளை விட்டுவிடக் கூடாது. அதனால் அவளது இழப்பும், துக்கமும் மறைந்துவிடப் போவதில்லை. இதை அவளுக்கு இன்னும் வலிமையான வார்த்தைகளால் எடுத்துச் சொல்லியாக வேண்டும். மீண்டும் அலுவலகத்திற்கு வரவழைத்து வேலையில் ஈடுபடச் செய்ய வேண்டும். கொஞ்சம் கொஞ் சமாக அவளது மனநிலையை மாற்றியே ஆக வேண்டும். அதை எப்படிச் செய்வது?, எந்த வார்த்தைகளில் பேசுவது?' என்பதை மிக ஜாக்கிரதையாக யோசித்து முடிவு செய்துகொண்டு அன்று சாயந்திரம் அவளது வீட்டிற்குப் போனான்.

"வாங்க சார்..." என்று வரவேற்றவளைப் பார்த்து ஒரு விநாடி அவனுக்குள் சொல்ல முடியாத வருத்தமும், சங்கடமும் ஏற்பட்டது. உலகத்துத் துக்கம் முழுதையும் அந்த முகம் உள்வாங்கிக் கொண்டிருப்பதாகப் பட– சில விநாடிகள் மவுனமாக இருந்தான். அதற்குள் பாட்டி காப்பி கொண்டு வந்து தர, மறுக்காமல் வாங்கிக் குடித்தான். பாட்டியிடமே ராதிகாவின் அம்மாவைப் பற்றி விசாரித்தான். பாட்டியின் குரல் முன்பு மாதிரி கணீரென்று வராவிட்டாலும்– தெளிவும், தீர்க்கமும் அப்படியே இருந்தது.

"என் பொண்ணுக்கு இப்பத்தான் ஏதோ உறைச்சிருக்கு. முன்ன மாதிரி மூலைல முடங்கி அழுதுட்டிருக்காம, எழுந்து வெளியில வரா... கொஞ்சம், கொஞ்சமா வீட்டுக் காரியத்தையெல்லாம்

கவனிச்சுக்கறா... இப்பக்கூட பசங்களை அழைச்சுட்டு மளிகைக் கடைக்கு போயிருக்கா. இந்தப் பொண்ணோட இழப்பு அவ அறிவை கொஞ்சம் சமப்படுத்தி இருக்குன்னு நினைக்கிறேன். ஆனா... அதுக்குப் பதிலா அம்மா விட்ட இடத்தை இவ பிடிச்சுப்பாளோன்னு பயமா இருக்கு. இவ இப்படி மூலைல அடைஞ்சு முடங்கிப் போறதைப் பார்க்கக் கஷ்டமா இருக்கு..."

அதைக் கேட்ட கார்த்திகேயன் ஒரு முறை ராதிகாவை ஏறிட்டுவிட்டுப் பின்னர் பாட்டியைப் பார்த்தான்.

"இவளை அப்படி விட்டுவிடக் கூடாதுன்னுதான் நான் இப்போ இங்கே வந்திருக்கேன் பாட்டி... ஒரு வாரத்துக்கப்புறம் நான் வந்து பார்க்றேன். இவ மேசை மேல ஒரு வண்டிக் குப்பை. என்னன்னு கேட்டால் இவள் ஆபீசுக்கே வரலைன்னு சொன்னாங்க. எப்படியாவது இவளை நாளைக்கு ஆபீசுக்கு வரவழைச்சுடணும்ன்ற நோக்கத்தோடதான் நான் இங்க வந்திருக்கேன்..."

"ரெண்டு நாளா நானும் சொல்லிட்டுதான் இருக்கேன்... பதிலே வரலை. நீங்களாவது எடுத்துச் சொல்லுங்க... எனக்கு உள்ளே கொஞ்சம் வேலை இருக்கு. இதோ வந்துடறேன்."

பாட்டி போனதும் அவன் பார்வை ராதிகாவின் முகத்திற்குப் போயிற்று. முதல் முதலாகத் தன் அறைக்குள் நுழைந்த அவளது பயமும், சோகமும் நிரம்பிய அந்த முகம் தெரிய– அவனுக்கு பரிதாபமாக இருந்தது. ஒரு விநாடி அமைதியாக அவளையே பார்த்துக்கொண்டு இருந்தவன் பின்னர் சட்டென்று பேச்சை ஆரம்பித்தான்.

"... நீ இப்படி இருக்கக் கூடாது ராதிகா. உன்னை இப்படிப் பார்க்கக் கஷ்டமா இருக்கு. ராம்குமாரின் இழப்பு உன்னை ரொம்ப ஆழமா பாதிச்சிருக்கிறது வாஸ்தவம்தான். அதை யாராலும் மறுக்க முடியாது. அதேமாதிரி நீயும் ஒரு விஷயத்தைப் புரிஞ்சுக்கணும். ராம்குமாரோடயே உன் வாழ்க்கை முடிந்துவிட முடியாதுன்றதைத் தெரிஞ்சுக்கணும்... அப்படி ஒருத்தர் செத்துப் போன உடனே அவர் மேல அன்பு வச்ச இன்னொருத்தரும் செத்துப் போக முடியும்னால் இந்த உலகத்தின் ஜனத்தொகையில் முக்கால் பங்கு குறைஞ்சு போயிருக்கும். எந்தத் துக்கமும் நிரந்தரமானதில்லை. இதே மாதிரி எந்த மனிதனும் நிரந்தரமில்லை. எல்லாரும் செத்துப் போக வேண்டியவங்கதான். ஒருத்தர் முன்னால் போனால், இன்னொருத்தர் பின்னால் போறாங்க... அவ்வளவுதான்."

சொல்லிவிட்டுச் சற்று நிறுத்தி அவள் முகத்தைக் கூர்ந்து கவனித்த பின் மெதுவாகக் கேட்டான்.

"ஏன் ராதிகா... நான் இப்படி பேசறது மனசுக்குக் கஷ்டமா இருக்கா?"

"இல்லை" என்று தலையாட்டினாள் அவள்.

"நீ இல்லைன்னாலும் கஷ்டமாகத்தான் இருக்கும்னு எனக்குத் தெரியும். ஆனாலும், சொல்ல வந்த விஷயத்தைச் சொல்லி உன்னைச் சரிப்படுத்தி– நாளையிலிருந்து திரும்ப ஆபீசுக்கு வரவழைக்கணும் என்கிற உத்தேசத்தோடத்தான் வந்திருக்கேன். நடைமுறையைப் பாரு ராதிகா... எத்தனை நாளைக்கு இப்படி வீட்ல அடைஞ்சு கிடக்க முடியும்னு நினைக்கறே...? அவரவர்களுக்குன்னு ஒரு வாழ்க்கை இருக்கு. இதை சுய பலத்துல வாழ்ந்துதான் ஆகணும். இந்தத் துக்கத்துலேருந்து நீ வெளில வந்தே ஆகணும். உன் வேலைகளைக் கவனிச்சாகணும். இந்த உண்மை நிலையை நீ எதிர்கொள்ளத் தயாராகணும்."

அதுவரை அவன் சொன்னதையெல்லாம் அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்த ராதிகா மெல்ல அவனை நிமிர்ந்து பார்த்துச் சொன்னாள்:

"இல்ல... இப்படி அடைஞ்சு கிடக்க முடியாதுன்றது எனக்கே புரியுது. வீட்டு நிலைமைல என்னால இப்படி இருக்க முடியாது... வேலை பார்த்துத்தான் ஆகணும்கிறது தெரியுது... ஆனாலும்... ஆனாலும்... அங்க வந்தா ராம்குமாரோட நினைவு அதிகமாகுமோன்ற பயத்துல–"

"இங்க இருந்தா மட்டும் அவன் நினைவு வராம இருந்துடப் போகுதா?... நினைவுன்றது இடத்தைப் பொருத்தல்ல ராதிகா... மனுஷங்களைப் பொறுத்தது. ஆபீசுக்கு வந்து வேலைல ஈடுபட்டாலாவது கொஞ்சம் 'ரிலீப்' கிடைக்கும். ஓ... கமான் கெட் அப். சுயதுக்கங்கள் நம்மை விழுங்க அனுமதிக்கக் கூடாது. நாளைக் காலைலேருந்து சரியா ஒன்பதரை மணிக்கு கார் வந்து 'பிக் அப்' பண்ணிக்கும், என்ன...?"

மறுநாளிலிருந்து ஆபீசுக்கு வர ஆரம்பித்த ராதிகாவை அடிக்கடி உள்ளே கூப்பிட்டுப் பேசினான். ஆபீஸ் சம்பந்தமற்ற விஷயங்களையும் சொன்னான். அவளிடம் சிநேக பாவத்துடன் பழகி அந்தச் சோகச் சுமையைக் குறைக்க முயன்றான். கொஞ்சம் கொஞ்சமாக வாழ்க்கை என்பதைப் புரியவைக்க முயன்றான். "எந்தக் கஷ்டத்தையும், துக்கத்தையும் பூதக் கண்ணாடியால் பார்த்துப்

பெரிதுபடுத்தி அழுதுகொண்டிருப்பதில் யாருக்கும் எந்தவி
லாபமுமில்லை என்பதோடு தன் துக்கத்தை மற்றவர்கள் மீ
பரவவிட்டு, அவர்களையும் சோகப்படுத்தக் கூடாது" என்றா
அவளது கஷ்டம் அவளது தம்பிகள் இருவரையும் எந்த அள
பாதித்திருக்கிறது என்பதை எடுத்துக்காட்டினான்.

"இந்த அதிர்ச்சியில் இருந்து விடுபட்டு, கொஞ்சம் கொஞ்சமா
வெளில வரணும். வாழ்க்கையைப் பார்க்க ஆரம்பிக்கணும்
வாழ்க்கை வாழறதுக்குத்தானே தவிர, வருத்திக்கிறதுக்கு இல்லை
மற்றவங்களை வருத்தப்பட வைக்கிறதுக்கும் இல்லை..."

சொல்லிச் சொல்லி கொஞ்சம் கொஞ்சமாக அவளை
மாற்றிக்கொண்டுவர ஆரம்பித்து- நாலைந்து மாதங்களுக்கு அப்புறம்
அவள் ஓரளவு அந்த அதிர்ச்சியிலிருந்து மீண்டு மெல்ல சிரிக்க
தொடங்கிய பின்- அதற்கு மேல் தாங்க இயலாதவனாக ஒரு நாள்
மெதுவாகத் தன் மனதைத் திறந்து பக்குவமாக வெளிப்படுத்தினான்
ஆரம்பத்திலிருந்தே தான் அவளை நேசித்ததைச் சொன்னான்
அமெரிக்கா போய்விட்டுத் திரும்பிய அன்று தன் காதலை
சொல்ல அவளைக் கூப்பிட்டபோது ராம்குமாருடன் வந்து
இரண்டு பேருமாகத் தங்கள் கல்யாணத்தை நடத்தி வைக்கும்ப
கேட்டுக்கொண்டதில் ஏற்பட்ட ஏமாற்றத்தையும், அதிர்ச்சியையு
விளக்கினான்.

"யு நோ... அது எனக்கு ஒரு பெரிய ஏமாற்றமாகத்தான் இருந்தத
முயல், ஆமை கதையில் ஆமை வெற்றிபெற்ற மாதிரி தோன்றியத
ஆனாலும் நீயும், அவனும் ஒருத்தரை ஒருத்தர் பரிபூரணமா நேசிக்கிற
தெரிஞ்சப்புறம் என் உணர்ச்சிகளை வெளிக்காட்டாமல் அப்படியே
அடக்கி, உங்கக் கல்யாணத்தை நடத்திவைக்க மனப்பூர்வமா
சந்தோஷத்தோட முன்வந்தேன். ஆனால், விதி வேற மாதி
மாத்திடுச்சு. ஐ... நெவர் தாட் ராம்குமார். ஓ.கே... தட்ஸ் ஆல் ஓவர்
இப்போ அதைப் பேசறதுல அர்த்தமில்ல... ஆனால், நான் இப்பவு
உன்னை நேசிக்கிறேன். மனசு நிறைய நேசிக்கிறேன். உன்னை
கல்யாணம் பண்ணிக்க ஆசைப்படறேன். என்னடா இத்தனை
சீக்கிரமா இவன் இதைப் பத்திப் பேசறானேன்னு நினைக்காதே
ராதிகா... இதுக்கு மேல என்னால என் மனசை அடக்கிக்க முடியும்னு
தோணலை. அதனால சொல்லிட்டேன்..."

"My hands are outstretched for you. அதுக்குள்ள நீ வரணும்னு
நினைக்கிறேன். ஆசைப்படறேன். ஏங்கறேன். இதுல உன் விருப்ப

வரப்போறியா, இல்லையான்றதைத் தெரியப்படுத்திடு... என்னா
துக்கு மேல என்னால இதை மனசுக்குள்ள வச்சிட்டு கஷ்டப்பட
டியாது. அவஸ்தைப்பட முடியாது.

அதைச் சற்றும் எதிர்பார்க்காத ராதிகா அயர்ந்து போனாள்
றிது தடுமாறிக்கூடப் போனாள். அவன் தன்னை நேசித்ததும்
ப்போதும் நேசிப்பதாகச் சொன்னதும் புதிய விஷயமாகக் காதில்
ழுந்தது. அதிர்ச்சியான செய்தியாகக் கூட இருந்தது. எத்தனைப்
பரிய மனிதத்தனம் இருந்தால் அத்தனையையும் அடக்கி
வத்துக்கொண்டு தங்கள் கல்யாணத்தைத் தானே முன்னின்று
த்தி வைப்பதாகச் சொல்லியிருப்பான் என்று தோன்றியதில்
வன் மீதிருந்த மதிப்பும், மரியாதையும் அதிகமாயிற்று. ஆனாலும்
வனது கேள்விக்கு உடனே பதில் சொல்ல முடியாமல் தயங்கி
டுமாறிக் கடைசியில் சொன்னாள்.

"எனக்குக் கொஞ்சம் யோசிக்க அவகாசம் தாங்களேன்..
ளீஸ்"

"ஓ... இதுக்குப் போய் பிளீஸ் எல்லாம் எதுக்கு...? டேக் யுவர் ஓன்
டைம்... ஆனால், நான் உன் பதிலுக்குக் காத்துக்கொண்டிருப்பேன்
ன்பதை மட்டும் மறக்காதே..."

– சொல்லிவிட்டுக் கம்பீரமாக அவன் வெளியேற, இன்னமும்
திக குழப்பத்தில் தடுமாறிப் போனாள் ராதிகா.

# 9

ராதிகா சொன்னதைக் கேட்டு சில விநாடிகள் அவளையே
க்கமாக பார்த்தாள் பாட்டி. அந்த முகத்தில் விரவிக் கிடந்த
ழப்பமும், கலவரமும், சோகமும் தேவையற்றதாகப்பட்டது.
ாழ்க்கையின் சில நிஜங்களைச் சந்திக்காமல் புறக்கணிக்க முடியாது
ன்று தோன்றிற்று. நடைமுறைக்குத் தகுந்தவாறு சிலவற்றை
ற்றுக்கொண்டுதான் ஆக வேண்டும். அதிலும் சற்று முன் அவன்
சான்ன விஷயம் எல்லா வகையிலும் உசிதமாக, ஏற்றுக்கொள்ளக்
டியதாக இருக்க- இந்தப் பெண் ஏன் இப்படி குழம்பித் தவிக்கிறது
ன்ற கேள்வி எழுந்து பாட்டியையும் சங்கடப்படுத்திற்று.

ராம்குமாரும், அவளும் இருந்த அந்நியோன்னியத்தைப்
...பொறுக்கத்தையும், மனப்

பொருத்தத்தையும் பார்த்துப் பார்த்து சந்தோஷப்பட்டவள். 'ஈஸ்வரா... இவர்களையாவது நல்லபடியாக வை' என்று வேண்டிக்கொண்டவள். ஆனால், அந்த வேண்டுதலுக்கு ஈஸ்வரன் செவிசாய்க்கவில்லை. ஏற்கெனவே அவன் போட்டு வைத்திருந்த கணக்கை இவர்களால் மாற்ற முடியவில்லை. எல்லாமே முன்கூட்டி நிச்சயிக்கப்பட்ட விஷயங்கள்தாம். அந்த நிச்சயம் என்ன என்பது தெரியாததில்தான் வாழ்க்கைத் தத்துவம் அடங்கி இருக்கிறது. ராம்குமார் விபத்தில் சிக்கி இவ்வாறு செத்துப் போவான் என்பது முன்கூட்டித் தெரிந்திருந்தால் என்னவாகி இருக்கும்...? அவன் இவளையோ- இவள் அவனையோ நேசித்திருக்கப் போவதில்லை. பழகியிருக்கப் போவதில்லை. சில மாத வாழ்க்கைதான் பாக்கியிருக்கிறது என்பது தெரிந்திருக்கிறபட்சத்தில் அந்தப் பிள்ளை நிச்சயம் ராதிகாவின் வாழ்க்கையில் குறுக்கிட்டிருக்காது. அதெல்லாம் தெரியாத வகையில், எதிர்காலம் என்பதை மூடு மந்திரமாக்கி மாயையில் தடுமாற வைக்கிறதுதான் ஈஸ்வர சங்கல்ப்பம். அதே சங்கல்ப்பம்தான் இப்போது ராம்குமார் என்ற கதவைச் சாத்தி, கார்த்திகேயன் என்கிற கதவைத் திறந்து இவளை சுவாசிக்க சொல்கிறது. மூச்சுத் திணறாமலிருக்க வழி செய்திருக்கிறது. இருட்டில் தடுமாறாமல் வெளிச்சம் காட்டுகிறது. அந்த வெளிச்சத்தை பற்றி- பாதையைப் புலப்படுத்தி மேலே ஏறிவா என்கிறது.

இவை அனைத்தும் முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட, நிச்சயிக்கப்பட்ட விஷயங்களானதால் இவள் கார்த்திகேயனுக்குத் தரப்போகிற பதிலும், முடிவும் கூட நிச்சயிக்கப்பட்டதாகத்தான் இருக்கும். அதில் சந்தேகமில்லை. ஆனால், அதற்காகத் தான் வாயை மூடிக்கொண்டு இருந்துவிட முடியாது. நல்லது கெட்டதை, மனசில் தோன்றுவதை, நியாயமானதை இந்தப் பெண்ணிற்கு அழுத்தம் திருத்தமாய் எடுத்துச் சொல்ல வேண்டியதுதான். நன்றாக பதியும்படி சொல்ல வேண்டும்.

இவளது வாழ்க்கை இந்தப் பத்தொன்பது வயதிலேயே கருகிப்போக விடக்கூடாது. இழந்ததையே நினைத்து நிகழ் காலத்தை மறக்கும்படி செய்யக்கூடாது. கல்யாணமாகிக் குடித்தனம் பண்ணி வீட்டுக்காரன் செத்துப் போகிறவர்களில் பலரும் திரும்ப கல்யாண பண்ணிக்கொள்கிற காலம் இது. தன்னை மாதிரி மழித்த தலையும் நார்மடிப் புடவையுமாக நிற்கிற காலமில்லை. இப்போதை நிலைமைக்கு இது தேவைதான். பொட்டும் பூவுமாகக் கருகட்டு



என்று விட்டுவிடாத மாறுதல் அவசியம்தான்.

அதுமட்டுமா...? ஒத்துப்போக இயலாத வீட்டுக்காரனைவிட்டு விலகி, கோர்ட்டு மூலம் விவாகரத்துப் பெற்று- மறுபடியும் ஒத்துப்போகக் கூடிய ஒருவனைத் தேடிக்கொள்கிற அளவிற்குப் பெண்களுக்குச் சுயபலமும், தன்னம்பிக்கையும் ஏற்பட்டிருக்கிற நவயுகக் காலத்தில்-

இந்தப் பெண் கல்யாணம் கூடப் பண்ணிக்கொள்ளாத நிலையில்- மனசால் அவனை மானசீகமாக நினைத்தற்காக, சிரித்துச் சந்தோஷமாய் சில காலம் பழகினதற்காக இப்படியே இருந்துவிட முடியுமா? இது சாத்தியமா...? அப்படியே சாத்தியம்தான் என்று சாதித்தாலும் தேவைதானா...? உயிரோடு இல்லாத ஒருவனை நினைத்து உருகி உருகி ஒரு ஜென்மம் முழுதையும் காட்டில் காய்ந்த நிலாவாக்கிக் கொள்வதில் தனக்கு உடன்பாடில்லாததைத் தெரியப்படுத்திவிட வேண்டும். அதுவும் மனசில் நன்றாகப் பதியும்படியான வார்த்தைகளில் 'இது இயற்கையானது. நியாயமானது. தப்பு இல்லாதது. தேவையானது' என்பதை எடுத்துச் சொல்லி எந்தவித உறுத்தலும் அற்று அவள் கார்த்திகேயனை ஏற்றுக்கொள்ளும்படி செய்ய வேண்டும்...

பாட்டி கொஞ்சம் கூடப் பிசிறு தட்டாத குரலில் வழக்கம் போல் மிகவும் நிதானமாய்ப் பேச வேண்டியதை எல்லாம் ஒழுங்குபடுத்திய மாதிரி ஆரம்பித்தாள். மிகவும் இதமாய், மென்மையாய் அவளது உணர்வுகளைப் புரிந்து கொண்டவளாக வருடிக் கொடுக்கிற விதத்திலேயே தொடர்ந்தாள்.

"நீ சொன்னதையெல்லாம் கேட்டுட்டேன் ராதிகா... ஒரு வார்த்தை விடாம மனசுல வாங்கிட்டேன். உன்னோட சங்கடம், குழப்பம் எல்லாம் எனக்கு நன்றாகவே புரியறது. உங்க சேர்மன் உன்னைக் கூப்பிட்டுச் சொன்னதை நீ எதிர்பார்க்கலேன்றது தெரியுது. அந்தப் பிள்ளை ராம்குமார் உன் மனசுல மட்டுமில்லாமல், எல்லார் மனசுலயும் தன்னைக் கல்வெட்டுல செதுக்கின மாதிரி செதுக்கி வச்சுட்டுப் போயிட்டான்றது வாஸ்தவம்தான். அத்தனை சுலபமாகவோ, சீக்கிரமாகவோ அவனை மறக்க முடியாதுன்றது நிஜம். ஆனா, அதுக்காக அவனையே நினைச்சுட்டு உருகிட்டிருக்க முடியுமா சொல்லு...? கல்வெட்டுல செதுக்கின பகவானைக்கூட நேரத்துக்கும், சக்திக்கும் தகுந்த மாதிரி ஒரு நிமிஷமோ, ஒரு

மணி நேரமோ நெனைச்சுட்டு, பூஜைன்ற பேர்ல 'உன்னை மறக்கலடாப்பா'ன்றதை அவனுக்குத் தெரியப்படுத்திக் காட்டிட்டு அதுக்கப்புறம் அவங்க அவங்க வேலையை, நித்தியகர்மாவைக் கவனிக்க ஓடறோம் இல்லையா...? அதை விட்டுட்டு அவனையே நினைச்சுட்டிருக்கேன்னு பூஜை அறையிலேயே உட்கார்ந்துட்டிருந்தா தினசரி வாழ்க்கை என்ன ஆறது...? பொழைப்பு எப்படி நடக்கிறது...? இத்தனை பேரையும் படைச்சு, இந்த நடைமுறை வாழ்க்கையை ஏற்படுத்தினதே அவன்தானே...? கண்ணுக்குத் தெரியாத ரூபத்துல எங்கோ இருந்துட்டு அத்தனை பேரையும் ஆட்டிப் படைக்கிறது அவன்தானே...? இந்த ஜென்மாவை சிருஷ்டனை பண்ணினவனுக்கே நாம ஒதுக்கறது கொஞ்ச நேரம்தான்றபோது, நம்ம வாழ்க்கைல கொஞ்சகாலம் குறுக்கிட்டு, அந்தத் தெய்வமே அனுப்பி வச்ச மாதிரி வந்து பரிவையும், பாசத்தையும் கொட்டியவனை நினைச்சுட்டு காலம் முழுசையும் ஓட்டிட முடியுமான்னு யோசிச்சுப் பாரு..."

பாட்டியையும், அவளது விவேகத்தையும் நன்றாகப் புரிந்து கொண்டவள்தான் ராதிகா. ஆனாலும், இந்தப் பேச்சு புதிதாய்த் தெரிய, ஓரளவு எதிர்ப்பார்க்காததாகவும் இருக்க– பளீரென்று அவளை ஏறிட்டுப் பார்த்தாள். அந்தப் பார்வையின் அர்த்தத்தையும், அதில் தொக்கி நின்ற கேள்விகளையும் புரிந்துகொண்ட பாட்டி இன்னமும் நிதானமாகத் தொடர்ந்தாள்.

"என்ன அப்படிப் பார்க்கறே...? என்னடா இவ இப்படிப் பேசறாளேன்னா...? பாட்டி, பாட்டின்னு ஒட்டிட்டு, கண் 'ஆபரேஷன்' பண்ணி, கூட இருந்து கவனிச்சுகிட்டதையெல்லாம் மறந்துட்டு இப்போ இப்படி நன்றி கெட்டத்தனமாக சொல்றாளேன்னு நினைக்கிறாயா...?"

"இ...ல்லை பாட்டி... ஆனா... வந்து... வந்து... ராம்குமார் நம்மகிட்ட காட்டின அன்பு, அந்தப் பாதுகாப்பு, எல்லாத்தையும் தானே கவனிச்சுகிட்ட அரவணைப்பு இதெல்லாத்தையும் மறந்துட்டு இப்போ இப்படி ஒரு சந்தர்ப்பம் கிடைக்கிறதுக்காக ஏத்துக்க முடியுமா பாட்டி...?"

"அதைத்தான் நான் சொல்ல வரேன். இதுக்குப் பேர் மறக்கறதில்லை... நன்றிகெட்ட செய்கையில்ல... வாழ்க்கையை அனுசரிச்சுப் போறதுன்றது இதுதான். அவனை நான் மறக்கவோ உன்னையும் மறக்கச் சொல்லல. அத்தனை சுலபமா மறந்துட



முடியாது. கல்லுல செதுக்கின தெய்வமாக அவனை வச்சுட்டு, தெய்வத்தை பூஜை பண்ணுற மாதிரி சில நிமிஷம் நினைவால பூஜை பண்ணிட்டு, அப்புறம் நடைமுறை வாழ்க்கையைக் கவனிக்கச் சொல்றேன். உன் தாத்தாவை நான் கல்யாணம் பண்ணிகிட்டப்போ எனக்கு வயசு என்ன இருக்கும்னு நினைக்கறே...? பன்னிரண்டு. பெரியவளா கூட ஆகலை. அப்போ கல்யாணம் பண்ணி கூடச் சேர்த்து அனுப்பிட்டாங்க. அவர் கூட அதுக்கப்புறம் பதினெட்டு வருஷம் வாழ்ந்தேன். உங்க மாமா, அம்மா ரெண்டு பேரையும் பெத்தேன். திடீர்னு ஒரு நாள் உன் தாத்தா போயிட்டாரடி. பத்தாம் நாளோ, பதிமூணாம் நாளோ என்னை உட்கார வச்சுத் தலையை மழிச்சு நார் மடி உடுத்தி விட்டாங்க... இப்போ வயசு அறுபத்தி ஆறோ, ஏழோ ஆறது. இத்தனை வருஷமா நான் வாழ்ந்துட்டுதான் இருக்கேன். அதுக்கப்புறம் பொண்ணுக்கும், பிள்ளைக்கும் செய்ய வேண்டிய கடமையெல்லாம் செஞ்சேன்... அதுக்காகத் தாத்தாவை மறந்துட்டேன்னு ஆகுமா...? அந்தத் துக்கம் கொஞ்சகாலம் இருந்தது. அதுக்கப்புறம் இதுதான் வாழ்க்கைன்னு சகஜமாப் போயிடுச்சு..."

ஒரு விநாடி நிறுத்தி அவள் முகத்தைப் பார்த்த பாட்டி மறுபடியும் தொடர்ந்தாள்.

"இதை எதுக்காகச் சொல்றேன்னா... உன் தாத்தா போனப்போ எனக்கு வயசு முப்பதுதான். இந்தக் காலத்துல பொம்பளைகள் கிட்டதட்ட இந்த வயசுலதான் கல்யாணமே பண்ணிக்கறாங்க. ஆனா, நான் அந்த வயசுக்கு எல்லாம் முடிஞ்சு தலையை மழிச்சுட்டு, நார்மடி கட்டிக்க ஆரம்பிச்சுட்டேன்... இந்தக் காலமானால் இதெல்லாம் செய்யமாட்டாங்க... இப்படிப்பட்ட கோலத்துக்கெல்லாம் ஆட்படுத்தமாட்டாங்க... வீட்டுக்காரர் செத்துப்போனா எத்தனை பேர் தலைவாரிட்டு, நெற்றிக்குப் பொட்டு இட்டுட்டு இருக்கலை. அவங்க அவங்க இஷ்டத்தைப் பொறுத்த விஷயம் இது. சொந்த விஷயம். இதுல என்ன தப்பு சொல்லு...? குழந்தையா பொறந்த உடனே நமக்குப் பொட்டு இடறாங்க... தலைமயிர் வளர ஆரம்பிச்சதும் பின்னி பூ வைக்கறாங்க... இதெல்லாம் இயற்கை கொடுத்தது. கல்யாணம் பண்ணிட்டவனால அதுக்கப்புறம் ஏற்பட்டதில்லை. அதனால அந்த இயற்கையை ஏன் மாத்தணும்...? யார் மாத்தினது? அந்த மாறுதல் எல்லாம் போய் இப்போ இருக்கிற மாதிரி இருக்கிறதைப் பார்க்க எனக்கு சந்தோஷமாகத்தான் இருக்கு தெரியுமா? இந்த விகாரத்துலேருந்து இந்தக் காலப் பொம்பளைகள் விடுபட்டது

திருப்தியா இருக்கு. அந்தக் காலத்துல எங்களுக்குத் தைரியமில்ல. வீட்டைவிட்டு வெளில வந்ததில்ல... சுய சம்பாத்தியமில்ல... எல்லாத்துக்கும் கட்டினவனையும், மாமியார்- மாமனாரையுமே எதிர்பார்த்து நின்னதுனால இப்படி மூலைல நிற்கும்படியா ஆயிடுச்சு..."

"பாட்டி..." என்று இடையில் ராதிகா எதோ கேட்க வர- அவளைச் சட்டென்று அடக்கிவிட்டுச் சொன்னாள் பாட்டி. "இரு... அவசரப்படாத... நான் சொல்ல வந்ததையெல்லாம் சொல்லிடறேன். நான் பேசறதுக்கும், உன் அப்புறமா நீ பேசு. கேட்டுக்கறேன். இப்படி ஆதியோட அந்தமா விஷயத்துக்கும் நிறைய சம்பந்தமிருக்கு. எடுத்துச் சொன்னால்தான் உனக்குப் புரியும்னு சொல்றேன். உனக்குள்ள உறுத்தலோ, குற்றம் பண்ணிட்ட உணர்ச்சியோ ஏற்படக் கூடாதுன்னு விரிவா பேசறேன். காலம் ரொம்ப வேகமாக மாறிட்டு வர்றது. பொம்பளைகள் விவேகமா நடக்க ஆரம்பிச்சுட்டாங்க... படிச்சு, முன்னுக்கு வந்து சரிசமமா வேலைக்குப் போறாங்க... இப்போ இந்த மாதிரி என்னைப் போல – ஒருத்தியை நிற்க வைக்க முடியுமா சொல்லு...? நிற்க வைக்கலாமா...? முதல்ல இதுலேர்ந்து வெளில வந்தாங்க, அப்புறம் இளம் வயசுல வீட்டுக்காரன் செத்துப் போயிட்டா ரெண்டாம் கல்யாணம் பண்ணிக்க ஆரம்பிச்சாங்க... அதுக்கப்புறம் அப்படி ஆனவங்களுடைய அப்பா- அம்மாவோ அவளை அந்த மாதிரி நிற்க வச்சுட முடியாது, விட்டுடக் கூடாது... அவளுக்குத் துணை தேவைன்னு புரிஞ்சுட்டு தாங்களே கல்யாணம் பண்ணி வைக்கத் துணிச்சலா முன்னுக்கு வந்தாங்க. இப்போ... அதையெல்லாம் தாண்டி மனசு ஒத்துப் போகலேன்னோ, வேற சில காரணத்தாலோ- விவாகரத்து கூட வாங்கிட்டு அதுக்கப்புறம் வேற கல்யாணம் பண்ணிக்கறாங்க...

அந்த அளவுக்கு எல்லாம் மாறி இருக்கு. முன்னேறி இருக்குன்றப்போ நீ மட்டும் பழைய மாதிரி இருந்துட முடியாது ராதிகா. இருக்கவும் கூடாது. கல்யாணம் கூட பண்ணிக்காத ஒருத்தனை மனசளவுல அவனையே நினைச்சுட்டு, அப்படியே அழுதுட்டு, மூஞ்சிலை சோகமா வச்சுட்டு, வேலைக்குப் போய் சம்பாதிச்சுப் போட்டு வெறும் இயந்திரமா இருந்துட முடியுமா சொல்லு...?"

"ஐயோ... பாட்டி... நான் சொல்றதை நீங்க புரிஞ்சுக்க மாட்டேங்றேளே... நாங்க வெறும் மனசால மட்டும் இணைந்தவ

கால் விநாடி அவளைக் கண் இமைக்காமல் பார்த்த பாட்டிக் கேட்டாள். "அப்படின்னா... புருஷன்- பொண்டாட்டி மாதிரி நடந்துட்டதாச் சொல்றியா...?"

ராதிகா தலை குனிந்து மெதுவாக "இல்லை" எனத் தலையாட்ட, பாட்டி கேட்டாள். "அப்படின்னா... வேற என்ன சொல்லறே...?"

"அந்த அளவுக்குப் போகலைன்னாலும் நாங்க... நாங்க..."

"புரியுது... இந்தக் கால சினிமாவுல வர்ற மாதிரி நடந்துட்டிருப்பீங்க ... அவ்வளவுதானே...?"

"........."

"இதப்பாரு ராதிகா... நீ குழந்தை இல்ல... கிழவியாகவும் ஆயிடல... பத்தொன்பது வயசுல நிக்கற குருத்து. குருத்துலயே வாடிவதங்கவோ, கருகிப்போயிடவோ கூடாதுன்ற ஆதங்கத்துனால இத்தனை பேசறேன். உன் வாழ்க்கை இப்படியே போயிட முடியாதும்மா... பணம் சம்பாதிக்கிறேன், தம்பிகளைப் படிக்க வச்சுக் கரையேத்திடுவேன் என்பதெல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும்.

அதையெல்லாம் மீறி மனசுன்னு ஒண்ணு இருக்கு. உடம்புன்ற ஒண்ணை தெய்வம் தந்திருக்கு. அதுக்குச் சில தேவைகளை ஏற்படுத்தி வச்சிருக்கு. அந்தந்த தேவை அப்பப்போ கிடைக்கணும்மா... நான் என்னசொல்றேன்றது உனக்குப் புரியும். இப்பப் பிடிவாதமா- இன்னும் சொல்லப் போனா அசட்டுப் பிடிவாதம்னு கூடச் சொல்லுவேன், இருந்துடலாம்னு கூடத் தோணும். ஆனா போகப் போக, வயசாக ஆக அதுக்காக வருத்தப்படும். மனசு ஏங்கும். ஏதோ சிலரைத் தவிர கல்யாணம் வேண்டாம்னு நின்ன முக்கால்வாசிப் பேரும் அந்தத் தப்புக்கு உள்ளுக்குள்ள வருத்தப்படறவங்கதான். இப்படி நின்னுட்டமேன்னு ஏக்கப்படறவங்கதான். மனசுல இருக்கிற எண்ணங்களைப் பகிர்ந்துக்கக்கூட ஒரு துணையில்லாமல் போன சங்கடங்களை அனுபவிக்கிறவங்கதான். அதனால் எத்தனையோ விதமான பாதிப்புக்கு உள்ளாகறாங்க... அதெல்லாம் உனக்கு ஏற்படக்கூடாது; நீ அப்படி நின்னு போயிடக் கூடாதுன்ற தவிப்புல பேசறேன். பழசையே நினைச்சுட்டு இருக்கிறதுனால ஆகப் போறது ஒண்ணுமில்லேன்றதை தெரியப்படுத்தறேன். இதுக்கு அர்த்தம் ராம்குமாரை மறந்துட்டதா ஆகாது.

அந்தப் பிள்ளையைத் தெய்வம் பறிச்சுட்டு போகாமல் இருந்திருந்தால் இந்தப் பேச்சே எழுந்திருக்கப் போறதில்லை. உங்க

சேர்மன்' உன்கிட்ட தன் மனசுக்குள்ள வச்சுப் பூட்டிட்டி
ஆசையைத் திறந்து காமிச்சிருக்கப் போறதில்லை... ராம்குமா
ரடுத்துட்ட அதே தெய்வம்தான் இவரை உனக்குத் தர்றது. ஒரு க
முடினால், தானா இன்னொரு கதவைத் திறந்து வைப்பான்றது
வரை நிஜமாகி இருக்கு.

உன் சேர்மனும் தங்கமான பிள்ளையாத் தெரியறார். ரொ
உயர்ந்த மனுஷனாப்படறார். தன் மனசுல ஏற்பட்ட அத்த
ஆசையையும் மறைச்சு எதையும் வெளியில் காட்டாம உ
ரெண்டு பேருக்கும் தானே முன்ன நின்னு கல்யாணம் பண்
வைக்கிறதாச் சொன்ன அந்த மனசு யாருக்கு வரும்னு யோசிச்
பாரு, ரொம்ப ரொம்ப பெரிய மனசுக்குத்தான் வரும். அதனா
உன்னை நல்லாப் புரிஞ்சுட்டிருக்கிற இவருக்கு- நீயும், ராம்குமா
பழகினதெல்லாம் தெரிஞ்சிருக்கிற இவருக்கு- நீ தைரியமா
சொல்லலாம்; சொல்லணும்கிறதுதான் என் தீர்மானமான முடி
நான் சொல்ல வேண்டியதையெல்லாம் சொல்லிட்டேன். அப்பு
நீ யோசிச்சு ஒரு நல்ல முடிவுக்கு வா, என்ன...?"

பாட்டி பளிச்சென்று சொல்லிவிட்டுப் போய்விட்டா
தர்சனமான விஷயங்களை வெகு சுலபமாக எடுத்துச் சொ
விட்டாள். பாட்டி சொன்னதெல்லாம் சரி, நியாயம், நடைமு
வாழ்க்கை என்பது பிடிபட்டாலும்... அவளுக்குள் ஏதோ ஒன்
இடறிற்று. உடனே ஒப்புக்கொள்ள முடியாமல் தயங்க மட்டுமின்
வேறொன்றும் அவளை யோசிக்க வைத்தது.

'ராம்குமார் மாதிரி கார்த்திக் இருப்பானா...? அந்த அரவணைப்ப
அன்பும், தன்னைத் தோளில் சாத்தி அழைத்துக்கொண்டு போ
பாதுகாப்பும் கிடைக்குமா...? உன்னுடைய கஷ்டங்கள் எல்ல
என்னுடையவை என்று நீண்ட அதே உதவிக்கரம் இவனி
இருந்தும் நீளுமா...? வாழ்க்கையின் மிக மிக உயர்ந்த அந்தஸ்
இருக்கிற இவன் - வளர்ந்த அல்லது வளர்க்கப்பட்ட வெளிநாட்
கலாசார இடைவெளி- இவற்றை நினைத்துப் பயந்தாள்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக அவளுக்கு அவன்
தொடுவான மனிதனாகத் தோன்றினான். யாரையும் தன் அ
நெருங்கவிடாதவனாகவும், தானும் யாருடைய அந்தரங்கங்களி
நுழைக்கிடாதவனாகவும்- தன்னைச் சுற்றி ஒரு வட்
போட்டுக்கொண்டு ஒட்டியும், ஒட்டாமலும் பழகுபவனாக

தொட நினைக்கிறவர்களை விட்டு தூரப் போகிறவனாகவும், விட்டேர்த்தியாய் வாழப் பழகிப் போனவனாகவும் தெரிய-

'அவனிடமிருந்து சார நினைக்கிற கரமும், சரிய வேண்டுகிற தோளும் கிடைக்குமா என்பது புரியாமல் தானும் மனுஷி- தன்னுடையதும் எதிர்பார்ப்புகளைக் கொண்ட சாதாரண மனம்தான் என்பதை உணர்ந்தவளாக - அடி மனசுக்குள் இத்தனை எண்ண ஓட்டங்கள் எழ முடியுமா...?' என்ற கேள்வியுடன் தன் கேள்விக்கு விடை கிடைக்காதவளாக ஆபீசுக்குக் கிளம்பத் தயாரானாள்...

# 10

அன்று காலை கண் விழித்தபோதே கூடத்திலிருந்து ஆண் குரல் ஒன்று கேட்டது. குரலிலிருந்து வீட்டின் சொந்தக்காரர் வந்திருப்பதைப் புரிந்துகொண்டாள் ராதிகா. அவருடன் பாட்டி பேசிக்கொண்டிருப்பதும் கேட்டது. என்ன காரணத்திற்காக அவர் வந்திருக்கிறார் என்பதை அவளால் ஊகிக்க முடியவில்லை. வீட்டு வாடகையை எல்லோருக்கும் மாதிரி அவளுக்கு ஆபீஸே கொடுத்துவிடுகிறது. முதல் தேதியானால் ஆபீஸிலிருந்து வாடகை 'செக்' நேராக வீட்டின் சொந்தக்காரருக்குப் போய்விடுகிறது. அதனால் வாடகை வசூலிக்கக்கூட இப்போதெல்லாம் அவர் வருவதில்லை. இன்று வந்திருப்பது ஆச்சரியமாக இருந்தது. பார்வை எதேச்சையாக காலண்டருக்குப் போயிற்று. தேதி பதினெட்டைக் காட்ட- அவளுக்குள் சில சந்தேகங்கள் எழுந்தன.

'ஒருவேளை தவறுதலாக இந்த மாத 'செக்' அனுப்பப் படவில்லையோ...? அதைக் கேட்க வந்திருப்பாரோ...?'

இப்படி தனக்குள்ளாகவே சந்தேகங்களை எழுப்பிக்கொண்டு உட்கார்ந்திருப்பதைவிட வெளியில் போய் அவரிடமிருந்தே தெரிந்துகொள்ளலாம் என்ற எண்ணத்துடன் வெளியில் வந்தாள் அவள்.

"வாங்க சார்... சவுக்கியமா...? வீட்ல எல்லாரும் சவுக்கியமா இருக்காங்களா...?" என்று விசாரித்ததற்கு பதிலளித்த பின்னர் அவர் சொன்ன செய்தி சற்று அதிர்ச்சியாகத்தான் இருந்தது.

பெண்ணுக்குக் கல்யாணம் நிச்சயம் பண்ணி இருக்கிறாராம்.

வருகிற இருபத்து மூன்றாம் தேதி கல்யாணமாம். மாம்பலத்தில் சத்திரம் கூடப் பார்த்தாயிற்றாம். எல்லாச் செலவையும் சரிக்கட்டக் கையிலுள்ள பணம் போதவில்லையாம். ஒரு ஐயாயிரம் ரூபாய் துண்டு விழுகிறதாம். அதைக் கொடுத்து உதவினால் சவுகரியமாக இருக்கும் என்றார். இல்லாவிட்டால், அவளால் முடியாத பட்சத்தில் வீட்டைக் காலி செய்தால் அடுத்து வரப் போகிற குடித்தனக்காரரிடம் இருந்து 'அட்வான்ஸ்' தொகையாக அதைப் பெற்றுவிடுகிற உத்தேசத்தில் இருப்பதை ஒளிவு மறைவின்றி வெளிப்படையாகச் சொன்னதும் ராதிகாவுக்கு பகீரென்றது. ஐயாயிரம் ரூபாய்!

அதற்கு எங்கே போவது என்று தெரியவில்லை. நகை எதையாவது வைத்தோ அல்லது விற்றோ வாங்கலாமென்றாலும் அந்தளவிற்கு எந்த நகையுமில்லை. அவள் போட்டுக்கொண்டிருக்கிற கால் சவரன் காதுத் தோட்டிற்கும், அம்மாவின் வெள்ளைக்கல் தோட்டிற்கும் யாரும் ஐயாயிரம் தரமாட்டார்கள். அதைத் தவிர கழுத்துச் சங்கிலி, கைவளை என்று ஒரு குந்துமணித் தங்கம் கூட வீட்டில் கிடையாது. அந்தப் பணத்திற்கு என்ன செய்வது?, யாரிடம் கேட்பது? என்பது தெரியவில்லை. வீட்டைக் காலி செய்வது என்பதும் இயலாத காரியம். இத்தனை வருஷங்களாகக் குடியிருக்கிற வீடு. வேறு வீடு கிடைப்பது ஒன்றும் சுலபமில்லை. அதற்காக அலையவும் அவளால் முடியாது. இத்தனை பாதுகாப்பான– தகுந்த வீடு கிடைக்கும் என்கிற நிச்சயமில்லை. அப்படியே கிடைத்தாலும் இவர் கேட்கிற மாதிரி அந்த வீட்டின் சொந்தக்காரரும் இதே தொகையை அட்வான்ஸாக கேட்கக் கூடும். இதைவிட மேலாகவும் கேட்கலாம். இந்தப் பணத்துக்கே வழி தெரியாதபோது அதற்கு எங்கே போக முடியும்...?

அதனால் வீட்டைக் காலி செய்கிற உத்தேசமில்லை என்றும், இன்னும் ஒரு வாரத்தில் எப்படியாவது பணத்தைப் புரட்டித் தருவதாகவும் கூறி அவரை அனுப்பிவைத்தாள். அவர் போனதும் பாட்டி கேட்டாள். "பணத்துக்கு என்ன செய்யப் போற ...?"

"பார்க்கலாம் பாட்டி... ஏதாவது வழி பிறக்கும்..." என்றாளே தவிர, அவளுக்கும் அதே கவலை இருந்தது. அதில் அன்று முழுவதும் ஆபீஸில் வேலை செய்ய முடியாமல் கவனம் சிதறிப் போயிற்று.

அதைக் கவனித்துவிட்ட கார்த்திக் கேட்டான்.

"வாட்ஸ் ராங்...? ஏன் என்னவோ மாதிரி இருக்கே...?"

மனத்தை உறுத்திக்கொண்டிருந்த கவலை சட்டென்று வார்த்தைகளாக வெளிவந்[illegible] விட்டது

அவளையும் மீறின உந்துதலில் வெளிப்பட்டுவிட்டது.

"ஒண்ணுமில்லே சார்... குடியிருக்கிற வீட்டின் சொந்தக்காரர் வீட்டைக் காலி பண்ணச் சொல்றார்...."

"ஓ... எதுக்குன்னு காரணம் கேட்டியா ராதிகா?"

இவள் நிலைமையை விளக்கினதும், அவனது முகத்திலிருந்த கவலைக்கோடுகள் மறைந்தன. உதட்டில் லேசான சிரிப்பு ஓட, கேலி செய்கிற குரலில் சொன்னான்:

"அப்பா... இவ்வளவுதானே? இதுக்கா இப்படி முகத்தை வைச்சுக்கிறது... ஐயாயிரம் ரூபாய்தானே? தேவைப்பட்டா நான் உதவி பண்றேன். என்கிட்ட கேட்க சங்கடப்பட்டுட்டு பேசாமல் இருந்துடாதே... என்ன...?"

சடாரென்று ராதிகாவின் பார்வை உயர்ந்தது. ஒரு விநாடி மனசு சுணுங்கிப் போயிற்று. முள் தைத்த மாதிரியான வலிகூட ஏற்பட்டது.

இந்தப் பதில் அவள் எதிர்பார்க்காதது. ஐயாயிரம் ரூபாய்தானே... நான் தருகிறேன்... என்பதுதான் அவள் எதிர்பார்த்தது. அல்லது 'கம்பெனியைத் தரச் சொல்கிறேன். வீட்டு வாடகையில் பிடித்துக் கொள்ளலாம்' என்பதாவது கடைசிபட்ச பதிலாக வரும் என்று நினைத்தாள். ஆனால், அதற்கெல்லாம் மாறாக– 'தேவைப்பட்டா நான் உதவி பண்றேன்' என்கிறானே...!"

உடனே மனது சடாரென்று ராம்குமாரை நினைத்துக்கொண்டது. அவனாக இருந்தால் இப்படிச் சொல்லி இருப்பானா என்று தோன்றிற்று.

உடனே தன் சேமிப்புத் தொகையிலிருந்து ஐயாயிரத்திற்கு 'செக்' எழுதித் தந்திருப்பான். அதைக்கூட அவளிடம் தந்து, வீட்டுச் சொந்தக்காரரைத் தேடிப் போகிற சிரமத்திற்கு விட்டிருக்கமாட்டான். 'நீ அங்கெல்லாம் போக வேணாம்...' என்று தானே ஓடிப்போய் அதை வீட்டுக்காரரிடம் தந்துவிட்டு வந்திருப்பான்.

ஆனால் இவன்...

'உன்னால் அந்தப் பணத்தைக் கொடுக்க முடியவில்லை என்றால் என்னிடம் கேள்; தருகிறேன்...' என்றான். கேட்டுப் பெறுவதா...? தானாக ஓடி வந்து செய்ய வேண்டாமா? என்னிடம் அந்தத் தொகை இருக்காது என்பது தெரியாதா...? அப்படியே தெரியாமற் போனாலும் இருக்கிறதா என்கிற கேள்விகூட இன்றி 'தேவைப்பட்டா

நான் உதவி பண்றேன்' என்கிறானே. என் கஷ்டத்தை தன் கஷ்டமாக உணராமல், எடுத்துக்கொள்ளாமல்–

'தேவைப்பட்டா நான் உதவி பண்றேன்...'

அந்த வார்த்தைகள் நெஞ்சில் அம்பு மாதிரிக் குத்திக்கொண்டு ரணத்தையும், வேதனையையும் ஏற்படுத்தினதில் அவள் பேசாமல் இருப்பதைப் பார்த்த அவன், அவள் மனதில் ஓடுகிற எண்ணங்களைப் புரிந்துகொள்ளாதவனாகவே கேட்டான்:

"என்ன ராதிகா...? Can you manage?"

அவளுக்குள் எங்கோ அடி மனதில்– அவளுக்கே தெரியாமல் புதைந்து கிடந்த 'அந்த நான்' தலை தூக்கிற்று. என்ன ஆனாலும் இவனிடமிருந்து பணம் வாங்கக் கூடாது என்பதில் தீர்மானப்பட்டவளாக அழுத்தமான குரலில் பதில் சொன்னாள்.

"ஓ....எஸ்...ஐ கேன் மானேஜ் சார்... பிளீஸ் டோண்ட் பாதர்..."

அவன் முகம் சட்டென்று பிரகாசித்தது. அவளது பதிலின் அழுத்தமும், வேகமும் நெஞ்சில் பதிந்தன. ஒரே வார்த்தையில் 'ஐயம் கிளாட்...' என்பதோடு அந்த விஷயத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

ஆனால், ராதிகாவால் அத்தனை சுலபமாக அதற்கு முற்றுப்புள்ளியிட முடியவில்லை. நெஞ்சுக்குள் குமுறிக் குமுறி வந்தது 'தேவைப்பட்டா நான் உதவி பண்றேன்...' என்பது தூக்கத்தில் கூடக் காதருகில் ஒலித்தது. விட்டுவிட்டு மீண்டும் மீண்டும் நினைவை ஆக்கிரமித்தது.

அப்படி இரண்டு நாள் மனவேதனையில் தவித்துவிட்டு மூன்றாம் நாள் காலையில் இந்த வேலையை வாங்கித் தந்த கோடி வீட்டு மாமாவைத் தேடிப் போனாள். தயங்கித் தயங்கி விஷயம் முழுவதையும் சொல்லி மெதுவாகக் கேட்டாள்.

"...இந்தச் சந்தர்ப்பத்துல இந்தப் பணத்தைத் தந்து உதவனீங்கன்னால் மாசா மாசம் கொஞ்சம் கொஞ்சமா திருப்பித் தந்து உங்க கடனை அடைச்சுடுவேன் மாமா..."

"அவ்வளவுதானே...? அதுக்கு ஏன் இப்படிக் கூனிக்குறுகிப் போற...? யாசகம் கேட்க வந்தாப்பல நிக்கற... திருப்பித் தரப் போற பணத்துக்கு எதுக்கு இத்தனைத் தயக்கம்...?" என்றவாறு எழுந்து உள்ளே போனார் அவர். நூறு ரூபாய் நோட்டுகளாக ஒரு கட்டு கொண்டு வந்து தந்து, "எண்ணிப் பாரு..." என்றார். இவளால் எண்ண முடியவில்லை. எண்ணத் தோன்றவில்லை. கண்களில்

கோர்த்து நின்ற நீரில் ரூபாய் நோட்டுகள் இரண்டிரண்டாய்த் தெரிய, அப்படியே பைக்குள் வைத்துக்கொண்டு நாத் தழுதழுக்க நன்றி சொல்லிவிட்டுக் கிளம்பினாள்.

"ரொ...ம்...ப தாங்க்ஸ் மாமா... நீங்க செஞ்சிருக்கிற உதவிக்கெல்லாம் இன்னொரு ஜெனனம் எடுத்துதான் நன்றிக்கடனை தீர்த்து வைக்க முடியும் போல இருக்கு..."

"சீ... போ... பைத்தியம் மாதிரி பேசாத... என் பொண்ணு வந்து கேட்டா செய்யமாட்டேனா...? முதல்ல ஜாக்கிரதையா வீட்டுச் சொந்தக்காரர்கிட்ட கொண்டு போய்க் கொடு. நான் வேணா துணைக்குக் கூட வரட்டுமா...?"

"வேணாம் மாமா... நானே போயிடுவேன். இப்ப நேரா அவர்கிட்ட போய் பணத்தைக் கொடுத்தப்புறம்தான் ஆபீஸுக்கும் போகப் போறேன்.."

இது நடந்த நான்கு நாட்களுக்கு அப்புறம் ஒரு கடிதத்தை 'டிக்டேட்' செய்து முடித்த கார்த்திக் திடீரென்று ஞாபகம் வந்தவனாக ராதிகாவிடம் கேட்டான்.

"வீட்டுச் சொந்தக்காரர் பணம் கேட்டார்னு சொன்னாயே ராதிகா... வேர் யு ஏபிள் டு மானேஜ் தட் அமௌண்ட் ஆர்..."

அவன் முடிப்பதற்குள் சடாரென்று சொன்னாள் அவள்.


"நோ சார்... ஐ ஹேவ் மானேஜ் இட் மை செல்ப். தாங்க்யூ..."

"ஓ தட்ஸ் குட்..." என்றவன் அவளைப் பெருமையாய்ப் பார்க்க– அதைக் கவனிக்காத மாதிரி அவள் தன் நோட்டுப் புத்தகத்தை எடுத்துக்கொண்டு வெளியேறினாள்.

இந்த நிகழ்ச்சி அவள் மனதில் வேறுவித பாதிப்பை ஏற்படுத்தி இருப்பது தெரியாமல் கார்த்திக் எப்போதும் போல் தன்னியல்பாய்ப் பழகிக்கொண்டு வந்தான்.

– இது நடந்த ஒரு வாரத்திற்கெல்லாம் மற்றொன்றும் நிகழ்ந்தது. ஆபீஸில் தன் அறையில் உட்கார்ந்து 'டைப்' அடித்துக்கொண்டு இருந்தவளுக்கு டெலிபோன் வந்தது. தம்பி சாமிநாதன் பேசினான். பள்ளிக்கூடத்தில் இருந்து – தலைமை ஆசிரியரின் அறையில் இருந்து பேசுவதாகச் சொன்னான்.

"அக்கா... கிளாஸ்ல திடீர்னு சிவா மயக்கம் போட்டு விழுந்துட்டான். டீச்சர் அவனை அப்படியே பெஞ்சுல படுக்க வச்சு, டாக்டரைக் கூப்பிட்டிருக்காங்க. டாக்டர் வர்றதுக்குள்ள உனக்கு



போன் பண்ணி சொல்லச் சொன்னாங்க. உடனே உன்னை வரச் சொல்றாங்க... வரியாக்கா...?"

இவள் பதறித் தொலைபேசியை வைத்துவிட்டு, கார்த்திக்கின் அறைக்குள் ஓடிப் பதற்றத்தோடு சொன்னாள்.

"சார்... என் ரெண்டாவது தம்பி திடீர்னு ஸ்கூல்லே மயக்கம் போட்டு விழுந்துட்டானாம். ஸ்கூல்லேருந்து போன் வந்தது. உடனே என்னை வரச் சொல்றாங்க சார்..."

அவளது பதறலும், பதற்றமும் அதிகமாய்ப்பட– அவன் நிதானமாக அவள் முகத்தை ஏறிட்டுச் சொன்னான்.

"டோண்ட் ஓர்ரி ராதிகா... எதுக்கு இப்படி எல்லாத்துக்கும் பயந்து பதறிப் போற...? ஒண்ணும் இருக்காது... சரியா சாப்பிட்டிருக்க மாட்டான். இல்லைன்னா உடம்புல ஏதாவது 'வைட்டமின்' குறைச்சலா இருக்கும். இதுக்கு ஏன் இத்தனை பயம்...?"

அவள் பேசாமல் தலை குனிந்து மேசையின் ஓரத்தை அழுத்திப் பற்றிக்கொள்ள, கார்த்திக் மீண்டும் பேசினான்.

"எஸ்... யு கேன் கோ... வேணுமானா லீவு போட்டுட்டே போயிடு... அப்புறம் எனக்கு போன் பண்ணி என்ன என்பதைத் தெரியப்படுத்து, என் உதவி தேவைன்னால் நான் உடனே கிளம்பி வரேன்..."

இவளுக்குச் சரேலென்று அடிவயிற்றில் தீ பற்றிக்கொண்ட மாதிரி ஒரு வேகம் எழுந்தது. ஏதோ சொல்ல மனசு துடித்தது. ஆனால், தன்னைக் கட்டுப்படுத்திக்கொண்டு வெளியில் வந்துவிட்டாள். லிப்டில் கீழே இறங்கிக் கொண்டிருந்தபோது குபீரென்று அழுகை பொத்துக்கொண்டு வந்தது. குலுங்கிக் குலுங்கி அழ வேண்டும் போலிருந்தது. கண் கலங்கி, நீரால் கரையிட்டது. தொண்டை அடைத்து நீண்ட நெடும் விம்மல் ஒன்று தெறித்து வெளியில் வந்தது.

ஆபீஸ் காருக்குகூட காத்திராமல் ஆட்டோ பிடித்தாள் அவள்.

ஆட்டோ டிரைவரிடம் இடத்தைச் சொல்லிவிட்டு, அதற்கு மேல் விம்மலும், கேவலுமாகப் புறப்பட்டதைத் தடுத்துக்கொள்ளும் பொருட்டுக் கைக்குட்டையால் வாயை இறுகப் பொத்திக்கொண்டாள். அந்த மர்திரி மனசைப் பொத்த முடியாத காரணத்தால் அது 'ராம்குமார், ராம்குமார்' என்று அலறிற்று. அன்றொரு நாள் சாமிநாதன் சைக்கிளில் இருந்து கீழே விழுந்து, கால் வீங்கிப் படுத்துக்

கிடைக்கிற செய்தி இதே மாதிரி தொலைபேசியில் தெரிவிக்கப்பட்டதும் தன்னோடு அவனும் கிளம்பி வந்தது அப்படியே கண்ணெதிரில் ஆடிற்று.

'நீங்களும் வர்றீங்களா ராம்குமார்...?'

'பின்ன... உன்னை மட்டும் தனியா அனுப்பிடுவேன்னா நினைச்சே...?'

கூட வந்து சாமிநாதனைத் தன் இரு கைகளாலும் ஒரு குழந்தையைத் தூக்குகிற மாதிரி தூக்கிப் போய் 'எக்ஸ்ரே' எடுத்து, எலும்பு முறிவிற்கு 'பிளாஸ்டர்' போடச் செய்து, திரும்ப வீட்டில் கொண்டு படுக்கவைத்து...

'மாமா... இன்னிக்கு ராத்திரி என் கூடவே இங்க இருங்க மாமா...'

'ஏன் சாமி... உனக்குத் துணையாத்தான் அம்மா, அக்கா, பாட்டி, சிவா எல்லாரும் இருக்காங்களே...?'

'ம்...ஹூம்... எனக்கு நீங்கதான் வேணும் மாமா...'

'எனக்கும் நீங்கதான் வேணும் ராம்குமார்...' – ஆட்டோ என்பதையும் மறந்து வாய்விட்டு அழத் தொடங்கினாள் அவள்.

'எனக்கு நீங்க வேணும்... இப்பவே உங்களைப் பார்க்கணும்... ராம்குமார்... எங்க இருக்கீங்க? எங்க இருந்தாலும் என்கிட்ட ஓடி வந்துடுங்களேன் பிளீஸ்...? என்னை இப்படித் தனியா அநாதையா... உதவக்கூட ஆளின்றித் தவிக்க விட்டுட்டு நீங்க மட்டும் போனது என்ன நியாயம் ராம்குமார்...?'

உள்ளுக்குள் குமுறிக் குமுறி மவுன வார்த்தைகளில் அவள் உடைந்து கொண்டிருந்தபோது பள்ளிக்கூடம் வந்துவிட்டது. ஆட்டோவைக் காத்திருக்கச் சொல்லி அழுத சுவடு தெரியாமல் கண்களைத் துடைத்துக்கொண்டு அவள் உள்ளே போய், சிவாவின் வகுப்பைக் கண்டுபிடித்து நுழைந்தபோது–

நல்ல வேளையாக அவன் எழுந்து உட்கார்ந்திருந்தான். அவனைப் பரிசோதித்த டாக்டர் பயப்பட எதுவுமில்லை என்றும், ஒரு 'பி காம்ப்ளெக்ஸ்' ஊசி மட்டும் போட்டிருப்பதாகவும், அவனை ஒரு நல்ல கண் டாக்டரிடம் காட்டி, கண்களைப் பரிசோதிக்குமாறு சொன்னார். பார்வை கோளாறு இருந்தால்கூட இதுபோன்று மயக்கம் ஏற்படும் என்பதைத் தெரிவித்தார்.

சிவாவின் வகுப்பு ஆசிரியையும், தலைமை ஆசிரியரும் அவனை



வீட்டிற்கு அழைத்துப் போய், ஓய்வாகப் படுக்கவைக்குமாறு வற்புறுத்த– அதே ஆட்டோவில் அவனை வீட்டிற்கு அழைத்து வந்தாள். பாட்டியிடம் நடந்ததைத் தெரிவித்து, சிவாவைப் பாய் போட்டுப் படுக்க வைத்துவிட்டு– அழுத களைப்பும், மனசுக்குள் பொங்கிப் பொங்கி எழும் துக்கத்தையும் தணித்துக் கொள்வதற்காகக் குளியல் அறைக்குப் போய் நன்றாகக் குளித்துவிட்டு வந்ததும் மனசுக்குள் ஏதுவோ அடங்கின உணர்வு ஏற்பட்டது. கொஞ்சம் கொஞ்சமாகப் பழைய அமைதி திரும்புகிற மாதிரி இருந்தது.

சுவாமி அலமாரியைத் திறந்து விளக்கேற்றி வைத்துவிட்டு கூடத்திற்கு வந்ததும், பாட்டி சூடாக காப்பி கொண்டுவந்து கொடுத்தாள். அதைக் குடித்த பின்னர் இன்னமும் கொஞ்சம் தெம்பு வந்த மாதிரி தோன்ற–

சற்று நேரம் படுத்துக்கொள்ளலாம் என்று தரையில் தலைகாணியைத் தூக்கிப் போட்டுக்கொண்டதும்...

'டெலிபோன்' ஒலித்தது. ஒருவித அலுப்புடன் போய் எடுத்த போது, கார்த்திகேயனின் கம்பீரமான குரல் கேட்டது.

"என்ன ராதிகா... போன் பண்ணச் சொன்னேன், பண்ணவேயில்ல... தம்பிக்கு உடம்புக்கு என்ன? டாக்டர் என்ன சொன்னார்...?"

'டாக்டர் என்ன சொன்னால் உங்களுக்கு என்ன...?' என்று கேட்கத் துடித்த மனத்தையும், நாக்கையும் கட்டுப்படுத்திக்கொண்டு நிதானமாகப் பேசினாள்.

"ஒண்ணுமில்ல... கண் டாக்டர்கிட்ட காட்டி பரிசோதனை பண்ணச் சொன்னார். பார்வைக்கோளாறுதான் மயக்கத்துக்கு காரணம்னு அபிப்பிராயப்படறார்..."

அவளது குரல் உயிர்த்துடிப்பற்று வெறுமையாய் வெளிப்பட்டதற்கு மாறாக– அவனது குரல் சந்தோஷமாகவும், உற்சாகமாகவும் வந்தது.

"நான் சொல்லலை... ஒண்ணும் இருக்காதுன்னு. நீதான் அநாவசியமா எல்லாத்துக்கும் பயப்படறே. நாளைக்கே ஒரு நல்ல கண் டாக்டர்கிட்ட காட்டி 'செக்' பண்ணிடு... என்ன...?"

"சரி."

"அப்புறம் நாளைக் காலைல நீ ஆபீசுக்கு வந்ததும் ஒரு செய்தி சொல்லப் போறேன். நம்ம ரெண்டு பேரையும் சந்தோஷப்படுத்துற செய்தி..."

"என்ன?"

"ம்ஹூம். இப்ப சொல்லமாட்டேன். நாளைக் காலைல நேர்லதான் சொல்வேன்."

அவனது குரலின் உற்சாகம், சந்தோஷம் எதுவும் மனத்தில் ஒட்டாதவளாக – அவன் சொல்லப் போகும் விஷயம் எதுவாக இருக்கும் என்கிற ஆர்வமோ, அக்கறையோ இல்லாதவளாக வந்து படுத்துக்கொண்டபோது மனம் பெருக்கித் துடைத்த மாதிரி எந்தவித உணர்ச்சிகளும் இல்லாமல், எண்ண ஓட்டம்கூட அற்றுப்போய் வெறுமையாய்க் கிடந்தது.

## 11

என்றைக்குமில்லாமல் அன்று மிகவும் சந்தோஷமாக இருந்தான் கார்த்திகேயன். உற்சாகமாகக் காணப்பட்டான். தன் அறைக்குள் நுழைந்த உடனேயே ராதிகாவைக் கூப்பிட்டான். உள்ளே வந்தவளை பார்த்து அழகாகச் சிரித்தான்.

"நேற்று டெலிபோன்ல நான் சொல்றதாகச் சொன்ன சந்தோஷ சமாசாரம் என்னன்னு நீ கேட்கலையே ராதிகா...?"– மிகவும் இயல்பான புன்னகையுடனும், இயற்கையான எதிர்பார்ப்புடனும் கேட்டான்.

அந்தச் சந்தோஷத்தையும், உற்சாகத்தையும் பிரதிபலிக்காமல் ராதிகாவின் குரல் ஒருவித இயந்திரத்தனத்தில் வெளிப் பட்டது.

"சொல்லுங்க சார்...?"

"இப்படி நின்னுட்டே கேட்டுட்டுப் போற விஷயமில்லை. உட்காரு, சொல்றேன்."

"பரவாயில்ல சார்... சொல்லுங்க..."

"ம் ஹூம். உட்கார்ந்தால்தான் சொல்லுவேன்."

முதல் முறையாக அவன் தன் கம்பீரத்தை விட்டுவிட்டு ஒரு குழந்தை மாதிரி அடம் பிடிக்க, வேறு வழியின்றி ராதிகா உட்கார்ந்துகொண்டாள். அவன் சட்டென்று ஆரம்பித்தான். சொல்கிறபோதே முகம் பிரகாசமாயிற்று. கண்கள் பளிச்சிட்டன. குரலில் ஆர்வம் மிகுந்தது.

"உனக்கு தெரியுமா?... அமெரிக்காவிலேருந்து என் அப்பாவும்,



அம்மாவும் வந்திருக்காங்க..."

"ஓ..."

"வந்து கிட்டத்தட்ட பத்து நாளாச்சு ராதிகா..."

"அப்படியா...?"

"ஆமாம். வந்த உடனே ரெண்டு நாள் எஸ்டேட் விஷயமா கொடைக்கானல் போயிருந்தாங்க. திரும்பி வந்ததும் நான் நம்ம விஷயத்தைச் சொன்னேன். ரொம்ப நாளா என்கிட்டே கல்யாணத்தைப் பற்றி கேட்டுக் கேட்டுச் சலிச்சுப் போனவங்களுக்கு நான் சொன்னது ரொம்ப சந்தோஷமா இருந்தது. உடனே உன்னைப் பார்க்கணும்னு சொன்னாங்க. நான்தான் பெங்களூர், கோயம்புத்தூர்னு அலைஞ்சுட்டிருந்தேனே... இன்னிக்கு ராத்திரி பிளைட்ல அவங்க திரும்பிப் போயிடறதனால சாயந்திரம் உன்னைக் கூட்டிட்டு வர்றதா சொல்லிட்டு வந்திருக்கேன். வர்றியா ராதிகா...?"

அதைக் கேட்டு அவளது முகத்தில் சந்தோஷமோ, மலர்ச்சியோ ஏற்படாததைக் கவனித்தவன்– சட்டென்று தன் உற்சாகத்தில் பாதியை இழந்தான்.

"என்ன ராதிகா... பதிலே இல்லை...?"

"இல்லை... நீங்களா சொல்லி முடிவு பண்ணிட்டு வந்து என்னைக் கேட்கறீங்களேன்னு யோசிச்சேன்..."

அதில் அவன் முகம் வாடிற்று. அவள் சொல்வது நிஜம் என்று தோன்றிற்று. அவளது அபிப்பிராயத்தைக் கேட்காமல் தானாக முடிவு செய்தது தவறுதான் என்று உணர்ந்தான். அது மாதிரியான அதீத உரிமைகளை எடுத்துக்கொள்ளாதவன் ஆதலால் 'எப்படிச் செய்தோம் இந்தத் தப்பை...?' என்று யோசித்து வருத்தப்படுகிற குரலில் தொடர்ந்தான்.

"ஐயாம் ஸாரி ராதிகா... வெரி ஸாரி... உன் அனுமதியில்லாமல் நான் அப்படிச் சொல்லிவிட்டு வந்தது தப்புதான். அந்த மாதிரியான ஒரு சுதந்திரத்தை எடுத்துக்கொண்டிருக்க கூடாதுதான். ஆனால், தங்களின் வருங்கால மருமகளைப் பார்க்க என் அப்பாவும், அம்மாவும் காட்டுகிற அதே ஆர்வம் உனக்கும் இருக்கும்னு நினைச்சுத்தான் அப்படிச் சொன்னேன். இதுல உனக்கு ஏதாவது ஆட்சேபம் இருக்குமானால் வேணாம். நான் அவங்களுக்கு போன் பண்ணி, உன்னால் இன்னிக்கு வர முடியலைன்னு தெரியப்படுத்திடறேன்..."

ராதிகா தயங்கிப் பின் மெதுவாக, ஆனால் அழுத்தமாகச்

சொன்னாள்:

"இன்னிக்கு வரமுடியலைன்றதைவிட என்னிக்குமே வர முடியாத நிலையில் இருக்கிறதையும் தெரியப்படுத்திட்டீங்கன்னா இன்னும் நல்லது..."

அவன் அதன் அர்த்தத்தைப் புரிந்துகொள்ள முடியாமல் அவளது முகத்தை ஏறிட்டு ஒருவிதத் தவிப்போடு கேட்டான். "அப்படின்னா என்ன அர்த்தம் ராதிகா...? என்னால் புரிஞ்சிக்க முடியலை. கொஞ்சம் விளக்கமா சொல்றியா, பிளீஸ்?"

அவள் மறுபடியும் தயங்கிப் பின்னர் பளிச்சென்று சொல்லி விட்டாள்.

"ஐயம் ஸாரி சார்... நாம் இப்படியே இருக்கலாம், அதாவது... நீங்க ஒரு நல்ல 'பாஸ்'. நான் உங்க 'செகரெட்டரி' என்ற உறவுல இருக்கிறதுதான் நல்லதுன்னுபடுது. என்னால் உங்களைக் கல்யாணம் பண்ணிக்க முடியும்னு தோணலை..."

நிஜமாகவே பதறிப் போனான் அவன். ஒரு விநாடி அதிர்ந்து கூடப் போனான். பின்னர் மெல்லச் சமாளித்துக்கொண்டு கேட்டான். "ஏன் ராதிகா...? ஏன் இப்படிச் சொல்ற...? அன்னிக்கு உன்கிட்ட நான் இதைப் பற்றிப் பேசினதிலிருந்து –அதற்கப்புறம் நாம் பழகின விதத்திலிருந்து உனக்கு இதுல பூரண சம்மதம்னு நான் நினைச்சுட்டிருக்கேன்..."

"அன்னிக்கு உங்க பேச்சை கேட்டப்புறம் நானும் இதைப் பற்றி யோசிச்சது வாஸ்தவம்தான். பாட்டிகிட்டகூட இதைப் பற்றிப் பேசினேன். பாட்டிக்கும் முழுச்சம்மதம்தான்."

"பின்ன... திடீர்னு ஏன் இப்படிச் சொல்ற...?"

அவனது அந்தக் கேள்விக்குப் பின்னர் குமுறிக்கொண்டு வெளிப்பட்டாள் அவள். துக்கம் கொப்பளித்துக்கொண்டு வர, மனதில் இருந்ததையெல்லாம் கொட்டினாள். ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் தன் நெஞ்சில் விழுந்த அடிகளைச் சுட்டிக் காட்டினாள். ஐயாயிரம் ரூபாய் பணத்திற்கு அவன் சொன்ன பதில், சிவா பள்ளிக்கூடத்தில் மயக்கம் போட்டு விழுந்ததைக் கேட்டு சிறிதுகூட அக்கறையின்றி 'வேணுமானா நீ லீவு போட்டுப் போ...' என்று வந்த பதில் என ஒவ்வொன்றையும் மறைக்காமல் வெளிப்படுத்தினாள். அதுபோன்ற சந்தர்ப்பங்களில் ராம்குமார் நடந்துகொண்ட விதம், ஏறி வந்து செய்த உதவிகள், தன்னை அரவணைத்து நடத்திச் சென்ற பாதுகாப்பு... எல்லாவற்றையும் சொல்லி விவரித்துக் கடைசியில் அழுகைக்கிடையில் மெல்லப் பேசினாள்.



"... யு ஆர் நாட் லைக் ராம்குமார்... அவரை மாதிரி நீங்க எனக்கு ஆதரவு தரமாட்டீங்க. நான் சாருகிற கரமா இருக்கமாட்டீங்க. சரிகிற தோளா உதவி செய்ய முன்வர மாட்டீங்க. 'இன் கேஸ் இயு ஆர் நாட் ஏபிள் டு'ன்னு நானே முயற்சி பண்ணிப் பார்த்து முடியலைன்னால், கடைசியில் உங்கட்ட ஓடி வரச் சொல்வீங்க. அப்போதுதான் என் உதவிக்கு உங்க கை நீளும்னால்– அப்படின்னாத்தான் எதுவும் செய்ய முன் வருவீங்கன்னால்– தானாக வாய் திறந்து கேட்கணும்னு காத்துட்டிருப்பீங்கங்கன்னால்–

இதுவா அன்பு...? இதுவா காதல்...? இதுவா மனைவியாகப் போறவகிட்ட காட்ற பரிவு...? நோ, உங்களைப் பொறுத்தவரை இதுதான் அன்புன்னா... காதல்னா... அது எனக்குத் தேவையில்லை. அந்த மாதிரி தொடுவான மனிதனாகத் தள்ளி நிற்கிற பிரியம் எனக்கு வேணாம். நெருங்க நெருங்க விலகிட்டே போறதுதான் நல்லதுன்னு நீங்க நினைச்சா... ஐயாம் ஸாரி. அது என்னைப் பொறுத்தவரை வேண்டாதது. எனக்கு வேண்டியதெல்லாம் ராம்குமார் காட்டின அதே நிஜமான பிரியம். என்னைச் சார வைத்து, நான் சரிகிற தோளா இருந்து தாங்கிக்கிட்ட பிரியம். என் கஷ்டங்களையெல்லாம் தன்னுடையதா ஏற்றுக்கொண்டு செய்த உதவி, என்னை எதுவும் செய்யவிடாமல் போற்றின பாதுகாப்பு... அதெல்லாம் உங்ககிட்ட இல்லை. இல்லாத ஒண்ணை எதிர்பார்த்தது என் தப்பு. நீங்க ராம்குமார் மாதிரி இருக்கவும் முடியாது. ஆகவும் முடியாது. அதனால் நாம் இப்படியே பாஸ், செகரட்டரியாகவே தொடர்றதுதான் உங்களுக்கும் நல்லது, எனக்கும் நல்லது..."

மூச்சு விடாமல் அவள் பேசி முடிக்கும் வரை இடையில் குறுக்கிடாமல் அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்தான் கார்த்திகேயன். பின்னர் சில விநாடிகள் அவள் முகத்தை ஊடுருவுகிற விதமாகப் பார்த்துக்கொண்டிருந்து– ஆழமான பெருமூச்சுடன் கேட்டான்.

"வெல்... நீ சொல்ல வேண்டியதையெல்லாம் சொல்லிட்ட.... மனசுல எதையும் வச்சுக்காமல் இப்படி பேசினது எனக்கு சந்தோஷம்தான். இனிமேல் நான் பேசலாம்னு நினைக்கிறேன். பேசட்டுமா...? கொஞ்சம் பொறுமையா கேட்டுக்கிறியா...?"

அவளிடமிருந்து அதற்கு எந்தவித பதிலும் வராமற் போக, அவன் தொடர்ந்து அழுத்தமான குரலில் ஆரம்பித்தான்.

"எஸ்! நீ சொன்ன மாதிரி நான் ராம்குமார் இல்லை. ராம்குமாரா மாறணும்னு நினைக்கிறவனும் இல்ல. நான் ராம்குமார் மாதிரி நடக்கணும்னு நினைக்கிறதோ – என்னை அவன் கூடத் தராசுல





நிறுத்தி எடை போடறதோ. தப்புன்றது என் அபிப்பிராயம். எப்பவும் நான் நானாகவே இருக்கிறவன். அதேமாதிரி நீயாகத்தான் இருக்கணும்னு எதிர் பார்க்கிறேனே தவிர, வேற யார் மாதிரியாவது இருந்திருக்கக் கூடாதான்னு ஏக்கப்படற பைத்தியக்காரத்தனம் எல்லாம் எனக்குக் கிடையாது. நீ- நீயாக இருக்கணும்னு நான் சொல்றது- உன் சொந்தக் கால்ல நிற்கணும், எப்பவும் யார் தயவையும் எதிர்பார்க்கக் கூடாதன்றதுதான். காதலிக்கிறவனானாலும் சரி- கல்யாணம் பண்ணிட்டவனானாலும் சரி, யாரையும் சாராமல் நீ ஆசைப்படற மாதிரி இன்னொரு தோளில் சரியாமல்- உன் கால்களை அழுத்தி ஊன்றித் தைரியமானவளா நிற்கணும். உன் பிரச்சினைகளை நீயே சமாளிச்சுக்கக் கூடியவளா இருக்கணும். இதற்காக ஒரு ஆண் துணையை எதிர்பார்க்கிற காரணத்துனாலதான் பெண் தன் கவுரவத்தைத் தானே குறைச்சுக்கறா... தாழ்ந்தவளாக மதிப்பிடப்படறா... அலட்சியமாக நடத்தப்படறா. அப்படியில்லாமல், எந்த ஒரு ஆண் துணையையும் சாராமல் தன் வேலைகளைத் தானே செய்துக்க முடியும்னு ஒவ்வொரு பெண்ணும் செய்து காட்டணும்.

கல்யாணமாறதுக்கு முன்னால் அப்பா அம்மாகிட்ட சாருதல், அப்பறம் கணவன்கிட்ட சாருதல், அதுக்கப்புறம் பெத்த பிள்ளைகள் கிட்ட... இப்படி ஒரு பெண்ணோட வாழ்நாள் முழுசும் ஆணைச் சார்ந்தேதான் இருக்கணும்கிறது என்ன சட்டம்...? இதை யார் ஏற்படுத்தினது...? உன்னை மாதிரியான பெண்கள்தான் சார ஒரு கரமும், சரிய ஒரு தோளும் வேணும்னு நினைக்காமல்–'சுயமா என்னால் இருக்க முடியும். நான் தேடுவது ஒரு துணை – ஆத்மார்த்தமான துணைதானே தவிர, சரிவதற்கான சாய்மானமில்லை'ன்னு தைரியமா முன் வந்து நிரூபிச்சுக் காட்டினீங்கன்னா... இந்தத் தேசத்துப் பெண்களோட தலையெழுத்து மாறும். நீங்க நினைக்கிற சமத்துவம், சுதந்திரம், எல்லாமே கிடைக்கும்."

சிறிது இடைவெளிவிட்டு தனக்குள் யோசித்தவனாக மீண்டும் அவனே பேச்சைத் தொடர்ந்தான்.

"அநேகமா இந்த முப்பத்திரெண்டு வயசுல பாதியை வெளி நாடுகளில் கழிச்சதனால் எனக்கு அந்தத் தேசத்துப் பெண்களோடு நம் தேசத்துப் பெண்களை ஒப்பிட்டுப் பார்க்கக் கூடிய ஒரு சொந்த அனுபவம் கிடைச்சது. அங்கே இருக்கிற பெண்கள்கிட்ட காணப்படற அந்தத் தைரியம், தன்னம்பிக்கை, திட நெஞ்சம், சுதந்திர உணர்ச்சி- இதெல்லாம் இங்க இருக்கிற பெண்கள்கிட்ட ஏன் இல்லைன்னு என்னை நானே கேட்டுகிட்ட கேள்விகளுக்குக்

கிடைச்ச பதில்கள்தான் இவை. இந்தப் பதில்களில் எனக்கு ஓர் உடன்பாடும், அசைக்க முடியாத நம்பிக்கையும், தீர்மானமும், இருந்ததால்தான் நீ உன் பிரச்சினைகளைச் சொன்னபோது நானாக உடனே ஓடி வந்து உதவி செய்யலை... உன்னால் முடியாத பட்சத்தில் உதவி செய்யக் காத்துக்கொண்டிருக்கிறேன் என்பதை மட்டும் தெரியப்படுத்தினேன்.

நீ கேட்ட மாதிரி நானாக ஓடி வந்து உதவி செய்துட்டேன்னு வச்சுக்கோ... அது உன் சுயபலத்தைக் குறைக்கிறதா ஆயிடும். உன்னைப் பற்றின ஒரு பலகீனமான மதிப்பீட்டை ஏற்படுத்திடும். அப்புறம் எல்லா உதவிக்கும் நீ என்னை எதிர்பார்ப்பது வழக்கமாகி, தப்பித்தவறி அப்படி எதிர் பார்க்காத தருணங்களில் எனக்குள் ஒரு கோபத்தையோ– அல்லது நீ என்னைத் தள்ளி நிறுத்தற உணர்வையோ ஏற்படுத்தும்... 'ஈகோ' பிரச்சினையில கொண்டுபோய் விட்டுடும். எந்தச் சந்தோஷத்துக்காகக் கல்யாணங்கள் நடக்கிறதோ அதெல்லாம் போய் ஒருத்தரோடு ஒருத்தர் சண்டை போட்டுக்க நேரிட்டு, இது தினசரி நிகழ்ச்சியாக மாறிப் போயிடும். இதுதான் இங்கே இருக்கிற முக்கால்வாசிக் கணவன்– மனைவிக்குள் நடக்கிறது. இதற்கெல்லாம் காரணம் உன்னை மாதிரிப் பெண்கள் பாதுகாப்புன்னோ, பலம்னோ நினைச்சுட்டிருக்கிற அந்தச் சாருதல், சரிதல் இரண்டும்தான்...

நீ உன் சுய பலத்துல– சுயசிந்தனை மிகுந்தவளா என் உதவியின்றிப் பிரச்சினைகளை தைரியமா சமாளிக்கத் தெரிஞ்சவளா இருக்கணும் என்கிற எண்ணத்துனாலதான் நான் அப்படி நடந்துகிட்டேன். அது உன் மனசை நோகடிச்சிருந்தால்... ஐயம் ஸாரி. ஆனால், அதுக்காக நான் ராம்குமார் மாதிரி நடந்துக்கவோ, இல்லே மாறுவேன்னோ சொல்ல வரலை. அது என்னால் முடியாது. உன்னை உன் சுய பலத்தில் நிற்கவிடாமல் தன் தோளைத் தந்து சரிய வச்சுகிட்டது ராம்குமார் உன் மீது வச்ச அபரிமிதமான ஒரு பிரியத்தால் இருக்கலாம். அல்லது உன் குடும்ப நிலைமையை உணர்ந்த அனுதாபமும் கலந்ததாக இருக்கலாம். எதுவானாலும் இனிமேலும் அந்தச் சார்ந்திருத்தல் தொடரக்கூடாது... உன்னை பலகீனமானவளாக ஆக்கிடுச்சு. சார்ந்து வாழவே ஆசைப்படறவளாக மாற்றிடுச்சு. நான் உனக்கு ஒண்ணை அழுத்தமா சொல்ல நினைக்கிறேன். We can share;but we should not be dependent. இதன் அர்த்தம் உனக்குப் புரியணும், ரெண்டுக்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறதைத் தெரிஞ்சுக்கணும்...

நான் சொன்ன இத்தனையையும் நீ புரிஞ்சுகிட்டால்– சரியான

கொண்டவளா இருக்கணும்னு ஆசைப்பட்டதில் தவறில்லேன்னு தோணினால்– பரஸ்பர உதவிகளும், சாருதலும் மட்டும் அல்ல காதல்– பரஸ்பர மரியாதையும், அந்தரங்கங்களை மதிக்கிறதும் கூடத்தான் என்பதை நம்பினால்– நான் உன் மீது கொண்டிருக்கிற பிரியம் ஒரு குறுகிய வட்டத்திற்குள் அடைபட்டதில்லை... மிக மிக விரிவானது, இந்தச் சாதாரண ஓடி வந்து உதவி செய்கிற எல்லைகளைத் தாண்டினது என்பதைப் பரிபூரணமாக உன்னால் உணர முடியுமானால்– My hands are still out stretched for you. இதற்குள் வருவதும், வராததும் இனி உன் இஷ்டம்.

உன் முடிவு எதுவானாலும் நான் ஏத்துக்கக் காத்துட்டிருக்கேன். சரி என்கிற சந்தோஷமான சம்மதமாக இருக்கிறபட்சத்தில் இன்னிக்கு ராத்திரி என் அம்மா, அப்பாவுக்குப் பத்து மணிக்குத்தான் பிளைட்; எட்டு மணிக்கெல்லாம் அவங்க ஏர்போர்ட்டுக்குக் கிளம்பிடுவாங்க. உன் பதில் சம்மதம்னால் அதுக்கு முன்னால நீ என் வீட்டுக்கு வா. எட்டு மணிக்குள்ள வரலைன்னால், உனக்கு இதுல விருப்பமில்லைன்னு புரிஞ்சுட்டு அம்மா– அப்பாகிட்டேயும் சொல்லி அனுப்பிடறேன். எதுவானாலும் நீ இன்னிக்கு எடுக்கிற முடிவு திடமானதா, தீர்மானமானதா இருக்கணும். நான் ராம்குமார் இல்லை. அப்படி ஒப்பிடறதே சரியில்லைன்னு தெரிஞ்சுகிட்டு அதுக்கப்புறம் யோசிச்சு முடிவு எடு. நீ எடுக்கிற முடிவு உன் மனசுக்குத் திருப்தியா, நிம்மதி தரக்கூடியதா, சந்தோஷமானதாக இருக்கணும். இந்த ஆபீஸ் சூழ்நிலைல யோசிக்க முடியலைன்னா வீட்டுக்குப் போய்கூட யோசி... நான் இப்போவீட்டுக்குக் கிளம்பறேன். உன் பதிலுக்காக எட்டு மணி வரை காத்துகிட்டு இருப்பேன்றதை மட்டும் மறந்துடாதே... வரேன்..."

மடமடவென்ற வேகத்தில் தன் மனதில் இருந்ததையெல்லாம் அவன் கொட்டிவிட்டுப் போனதும் சிறிது நேரம் அப்படியே பிரமை பிடித்த மாதிரி உட்கார்ந்திருந்தாள் ராதிகா. மனசு அதிகம் குழம்பித் தவிக்க, எழுந்து வீட்டிற்குப் போனாள்.

பாட்டியை உட்கார வைத்து அவளிடம் எல்லாவற்றையும் சொல்லி– அவளது மடியில் முகத்தைப் புதைத்துக்கொண்டு அழ ஆரம்பித்தாள். பாட்டி அவளது போராட்டம் புரிந்தவளாகத் தலையைக் கோதிவிட்டவாறு நிதானமாகப் பேசத் தொடங்கினாள்.

"நான் இப்போ எது சொன்னாலும் கேட்டுட்டு அதுபடி செய்வியா...?"

"செ...ய்...ய...றேன் பாட்டி..."

"உன் நல்லதுக்குத்தான் எதையும் சொல்வேன்னு நம்பறியா...?"

"நம்பறேன்..."

"அப்படின்னா மறுவார்த்தை பேசாம, இப்போ வாதம் பண்ணின்டிருக்க நேரமில்லேன்றதைப் புரிஞ்சுகிட்டு அப்படியே நடக்கணும்..."

"நடக்கறேன் பாட்டி..."

"முதல்ல எழுந்து உட்கார்ந்துக்கோ..."

பாட்டியின் மடியிலிருந்து தலையை நிமிர்த்தி எழுந்து உட்கார்ந்தாள்.

"கண்ணைத் துடைச்சுக்கோ..."

துடைத்துக்கொண்டாள்.

"நான் சொல்றதைக் கவனமாக கேட்டுக்கோ... என்ன... கேட்கறியா...?

"சரி" என்று தலை ஆடிற்று.

பாட்டி தீவிரமாகப் பேச ஆரம்பித்தாள்.

"உங்க சேர்மன் சொன்னது ஒரு வார்த்தை விடாம சரின்னு படுது எனக்கு. பொம்பளைங்களை ஆளணும்னு நினைக்காத, அடிமைப்படுத்த ஆசைப்படாத தொலைநோக்கு பார்வை உள்ள விசாலமான அன்பாத் தெரியுது. அன்பினால் கூட யாரையும் கட்டிப் போடக்கூடாது... சுதந்திரமா செயல்பட விடணும். செயல்படத் தெரியணும் என்கிற பண்பட்ட பரந்த மனசு பிடிபடுது. நான் சொல்றேன்னு தப்பா நினைச்சுக்காதே... பாட்டி என்னடா இப்படி இந்தக் கால அரசியல்வாதி மாதிரி சட்டுன்னு கட்சி மாறிட்டாளேன்னு டை போட்டுடாத. இத்தனை வருஷ அனுபவத்தை வச்சிட்டு னுஷங்களோட சுபாவத்தைத் தெரிஞ்சுட்டு பேசறேன். ராம்குமார் ன் மேல வச்சிட்டிருந்த அன்பு, இந்தக் காலத்து எல்லா ஆண்பிள்ளைகளும் காட்ற அன்புதான். ஆள நினைக்கிற அன்பு. அதனாலேயே அடிமையாகவும் ஆக்கிவிடுற அன்பு. ஆனா, உங்க சேர்மனோடது அப்படியில்ல... அவரை நீ தொடுவான மனுஷன்னு சொன்னதுகூட ஒருவிதத்துல பார்த்தா எனக்குச் சரின்னே படுது. ப்படின்னு கேட்டியானா... மனசால நினைச்சுக்கூடப் பார்க்க டியாத உயரத்துல சாதாரண மனுஷங்க அண்ணாந்து பார்க்கிற குதிகூட இல்லாத ஞானத்துல இருக்காருன்ற காரணத்துனால அவர் தொடுவான மனுஷனேதான்! இந்த மாதிரியான உசந்த அன்பு

அர்ப்பணம் செய்ய ஒரு மனுஷன் காத்துட்டிருக்கான்னா யாராவது இப்படி படுத்து, அழுதுட்டு, யோசிச்சுட்டிருப்பாங்களா...?"

"பாட்டி இப்ப என்னை என்ன பண்ணச் சொல்றே...?"

"பரபரன்னு எழுந்து மூஞ்சியை அலம்பிட்டு, பளிச்சுன்னு நெற்றிக்கு பொட்டு இட்டுட்டு, நல்ல புடவையா கட்டிட்டு, சுவாமிக்கு நமஸ்காரம் பண்ணிட்டு, ஓடிப்போய் உன் மாமனார்– மாமியாரை நிற்க வச்சு நமஸ்காரம் பண்ணணும்னு சொல்றேன்..."

பாட்டி சொன்ன மாதிரி பளிச்சென்று மாறி, சுவாமிப் படங்களுக்கு நமஸ்காரம் பண்ணிவிட்டு, பாட்டியையும் நிற்க வைத்து நமஸ்கரித்து– "வரேன் பாட்டி..." என்று வெளியில் வந்த போதே மணி ஏழரையாகி இருந்தது. தெருக்கோடி வரை நடந்து வந்து ஆட்டோ பிடிக்க இன்னும் ஐந்து நிமிடங்களாயின. ஒவ்வொரு சிக்னலிலும் நின்று புறப்பட்டு, ஆட்டோ கார்த்திகேயனின் வீட்டை அடைந்தபோது மணி எட்டு பத்து.

வாசலிலேயே கூர்க்கா அவர்கள் விமான நிலையத்திற்குப் போய்விட்டதைத் தெரிவிக்க, இவள் மீண்டும் ஆட்டோவில் ஏறிப் பதறினாள். அதிவேகத்தில் இயங்கித் தன்னைச் சீக்கிரமாக விமான நிலையம் கொண்டுபோய் விடச்சொல்லிக் கெஞ்சினாள்.

புறப்பட்டுத் தெருக்கோடி திரும்பி, மெயின் ரோடு வந்ததும் ஆட்டோ டிரைவர் கேட்டார்.

"டொமஸ்டிக் ஏர்போர்ட்டா... இன்டர்நேஷனலாம்மா...?"

அதைக் கேட்டுக்கொள்ளத் தவறியதால் பதற்றம் இன்னும் அதிகமாயிற்று. எது என்று தெரியாமல் தடுமாறிய பின் சொன்னாள்.

"முதல்ல இன்டர்நேஷனல் போங்க. அங்க இல்லைன்னால் டொமெஸ்டிக் போயிடலாம்..."

அடுத்த இருபதாவது நிமிடம் இன்டர்நேஷனல் ஏர்போர்ட்டில்– பழைய விமான நிலையத்தில் ஆட்டோ நின்றதும் இறங்கி உள்ளே ஓடினாள். அவசரமாய் நுழைவுச் சீட்டு வாங்கி, ஓர் இடம் விடாமல் தேடிவிட்டு மீண்டும் ஓடி வந்து தான் விட்ட ஆட்டோவைக் கண்டுபிடித்து ஏறி உட்கார்ந்து படபடத்தாள்.

"கொஞ்சம் சீக்கிரமாக டொமெஸ்டிக் ஏர்போர்ட்டுல விட்டுடுங்களேன், பிளீஸ்..."

அடுத்த அரை மணி நேரத்தில் உள்நாட்டு விமான நிலையத்தில் ஆட்டோ நிற்க, பேரம் பேசாமல் ஆட்டோக்காரருக்குப் பணத்தைத் தந்துவிட்டு, வேகம், பரபரப்பு, நுழைவுக் கட்டண டிக்கெட் வாங்கி,

உணர்ச்சிக் கொந்தளிப்பு எல்லாம் சேர்ந்து தொண்டைக்குழியை அழுத்தி- பீரிட்டெழுந்த துக்கம் வெளிவராமல் தடை போட - உள்ளுக்குள்ளேயே சன்னமான விசும்பல்களாகப் புறப்பட்டு அடங்க- நுழைவாயிலின் கண்ணாடிக் கதவை நெருங்கி, தள்ளிவிட்டு நுழைந்தாள். எட்டிப் பார்த்தாள்.

டிக்கெட்டைச் சரி பார்க்கிற வரிசையில் பெற்றோருடன் நின்று கொண்டிருந்த கார்த்திகேயன் அவளைக் கவனித்துவிட்டான். மறுவிநாடி முகமும், மனமும் பளீரிட வீணையை மீட்டின விரல்களின் வேகமாக உள்ளுக்குள் ஒரு சந்தோஷம் ஆர்ப்பரித்துப் புறப்பட, கையிலிருந்த டிக்கெட்- ஏர்பேக் எல்லாவற்றையும் போட்டுவிட்டு தன்னை அடக்கிக்கொள்ள இயலாதவனாக ஓடி வந்து ராதிகாவின் எதிரில் மூச்சிறைக்க நின்றான்.

அங்கு வார்த்தைகள் மவுனமாகிப் பார்வைகள் பேசத் தொடங்கின. கலங்கித் தவித்த கண்கள் மெல்லக் கலந்தன. மனங்கள் ஒன்றையொன்று இறுகத் தழுவின. தோளில் முகம் புதைந்து... கைகள் முதுகில் பின்னிக்கொண்டன.

"நான் வந்துட்டேன் கார்த்திக். உங்களை முழுசாப் புரிஞ்சுகிட்ட- சொந்தக்கால்ல பலமா ஊன்றி நிற்கிற ராதிகாவா, உங்களுடைய ராதிகாவா திரும்பி வந்திருக்கேன்..."

"நீ வருவேன்றது எனக்குத் தெரியும். என் உள்மனசு சொல்லிட்டே இருந்தது. பார்வை உன்னை எதிர்பார்த்து வாசல்லயே காத்துட்டிருந்தது. ஐ லவ் யூ ராதிகா... லவ் யூ ஸோ மச்..."

தூரத்திலிருந்து அவர்கள் இருவரையும் கவனித்த அவனது பெற்றோர், அவள்தான் ராதிகா என்பதைப் புரிந்துகொண்டு தங்களின் சந்தோஷத்தை ஆனந்தக் கண்ணீராய்க் கரையவிட்டார்கள். வகை தெரியாதவர்களாக, என்ன செய்கிறோம் என்பது புரியாத அந்த நிலையில் கையிலிருந்த டிக்கெட்டுகளைக் கிழித்து ஓரத்துக் குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டு, சூட்கேஸ்கள் அடுக்கப்பட்டிருந்த தங்களின் டிராலியைத் தள்ளியவாறு மெல்ல அவர்களை நோக்கித் திரும்பினபோது-

அவ்விரு முகங்களும் மனசைப் போலவே நிறைந்து கிடந்தன.

**—— முடிந்தது ——**

## புதுது வ

பூ என்ற ஓர் எழுத்து
நார் என்ற இரண்டு எழுத்
பூமாலை என்ற மூன்று எழு
கழுத்து என்ற நான்கு எழு
திருமணம் என்ற ஐந்து எ
முதல் இரவு என்ற ஆறு எ
குடும்ப வாழ்வு என்ற ஏழு
என்றும் இன்பம் என்ற எ
தாய் - தகப்பன் - சேய் எ
பல்லாண்டு காலம் வாழ
வாழ்த்தும் அன்பு நெஞ்ச
என் உறவுப் பெண்
திருமணத்திற்கு
வித்தியாசமான வா
இது!

*தகவல்:- ஆர். பிருந்தா*

**சித்திரகுப்**

2PDF available at http://www.win2pd
F is for evaluation or non-commercial
chasing Win2PDF.